லை : 20.00
ங்கள்: இருபத்து நான்கு
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

*Valampurii*

ebsite : www.valampurii.lk
mail: valampurii@yahoo.com

து 16 வள்ளுவர் ஆண்டு 2046 பங்குனி 18 புதன்கிழமை (01.04.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 103

ராம்கோ
THE RAMCO CEMENTS LIMITED
RAMCO
SLS 107 தரம் கொண்டதும், உலகதர 14001, 9001 சான்றிதழ் பெற்றுள்ள ஒரே சீமெந்து ராம்கோ

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்ந்து இணைந்து செயற்படும்



(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் நான்கு கட்சிகளும் தொடர்ந்து இணைந்து செயற்படும். இதற்கென புதிய புரிந்துணர்வு செயற்றிட்டம் ஒன்றை உருவாக்கி அதன் அடிப்படையில் எதிர்கால நடவடிக்கைகள் முன்னெடுக்கப் படும். இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் க.சுரேஷ் பிரேமச்சந்திரன். (23ஆம் பக்கம் பார்க்க)

## சந்திரிகாவின் ஆணைக்குழு பிரச்சினைக்கு தீர்வு காணும்

### இரா.சம்பந்தன் நம்பிக்கை

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில் அமைக கப்படவுள்ள ஆணைக் குழு, இந்த ஆண்டு இறுதிக்குள், தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் ஆற்றலைக் கொண் டிருக்கும் என்று நம்புவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

வடக்கு, கிழக்கிலுள்ள தமிழ் மக கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பான எல்லா விபரங்களை யும் அவரிடம் நாம் தெளிவுபடுத்தி யுள்ளோம். இந்த பிரச்சினைகள் அர்த்த பூர்வமான வகையில், உடனடியா கத் தீர்க்கப்பட வேண்டும்.



1994-ம் ஆண்டு, சந்திரிகா குமார துங்க ஜனாதிபதியாகப் பதவியேற்ற போது, தமிழ் மக்களின் குறைகளுக் குத் தீர்வு காண 23ஆம் பக்கம் பார்க்க....

## ஐ.நா.நிபுணர் இன்று வடக்கிற்கு

(கொழும்பு)

பொறுப்புக் கூறல், நல்லிணக் தொடர்பில் இலங்கை கொண் ள முன்னேற்றங்களை ஆரா பொருட்டு கொழும்பு வந்துள்ள நா.வின் சிறப்பு நிபுணர் பப்லோ கிரெய்ப் இன்று புதன்கிழமை க்கிற்கு வருகின்றார்.

அவர் இங்கு வடக்கு மாகாண லமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன, மன்னார் மறைமாவட்ட ஆயர் இரா யப்பு ஜோசப் உள்ளிட்ட பலருடன் வடக்கின் தற்போதைய நிலைமை தொடர்பில் பேச்சு நடத்தவுள்ளார்.

உண்மையை ஊக்குவித்தல், நீதி, இழப்பீடுகள் மற்றும் மீள உரு வாகாமல் உத்தரவாதப்படுத்தலுக் கான ஐ.நாவின் சிறப்பு அறிக்கை யாளர் பப்லோ டி கிரெய்ப், 6 நாள் விஜ யம் மேற் 23ஆம் பக்கம் பார்க்க....

## 19ற்கு எதிரான மனு இன்று விசாரணைக்கு

(கொழும்பு)

19-வது அரசியலமைப்பு திருத் தத்திற்கு எதிராக தாக்கல் செய்யப் பட்டுள்ள 8 மனுக்கள் இன்று விசா ரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட வுள்ளன.

இந்த மனுக்களை விசாரிப்பதற் காக மூவரடங்கிய உயர் நீதிமன்ற நீதிபதிகள் குழாம் பெயரிடப்பட்டுள் ளது.

பிரதம நீதியரசர் கே.ஸ்ரீபவன், இந்த குழுவின் தலைவராக செயற் படவுள்ளதுடன், சந்திரா ஏக்கநாயக்க மற்றும் பிரியசாத் டெப் ஆகியோரின் பெயர்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

19-வது அரசியலமைப்பு திருத்த சட்டம் அண்மையில் பிரதமர் ரணில் விக்ரமசிங்க 23ஆம் பக்கம் பார்க்க....

## பசிலுக்கு உடல்நலக்குறைவு! நாடுதிரும்பத் தாமதமாகும்!!

(கொழும்பு)

உடல் நலக் குறைவினால் நாடு திரும்ப கால தாமதமாகும் என முன்னாள் பொருளாதார அபிவி ருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நிதிக் குற்றவியல் பிரிவிற்கு அவர் இதனை அறிவித்துள்ளார். எனினும், இன்னும் சில நாட்களில நாடு திரும்ப உள்ளதாகக் குறிப்பிட் டுள்ளார்.

திவிநெகும திட்டத்தில் இடம் பெற்ற ஊழல் மோசடிகள் தொடர்பில் பசில் ராஜபக்ஷ உள்ளிட்ட அதிகாரி களிடம் விசாரணைகள் நடத்தப் பட்டு வருகின்றது.

விசாரணைகளை நடத்த பசில் ராஜபக்ஷவிடம் வாக்குமூலங்களை பதிவு செய்து கொள்ள வேண்டியுள்ள தாக நிதிக் குற்றவியல் பிரிவு நீதி மன்றில் அனுமதி கோரியிருந்தது.

இந்தக் கோரிக்கைக்கு கடுவல நீதிமன்றம் அண்மையில் அனு மதி வழங்கியிருந்தது. இது தொடர் பிலான அழைப்பாணை உத்தர வினை மெத 23ஆம் பக்கம் பார்க்க....

## கிளாலியில் 102 கிலோ கேரள கஞ்சா மீட்பு

(கிளாலி)

கிளாலிப் பகுதியில் வீடொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 102 கிலோ கேரள கஞ்சா, வவுனியா போதைப் பொருட்கள் தடுப்புப் பிரி வினரால் மீட்கப்பட்டதுடன் அதனை வைத்திருந்த நபரும் கைது செய் யப்பட்டார்.

இந்தச் சம்பவம் நேற்று செவ் வாய்க்கிழமை மாலை 5.30 மணி யளவில் இடம்பெற்றது. வவுனியா விலிருந்து வந்த போதைப் பொருட் கள் தடுப்புப் பிரிவினர் பளைப் பொலி ஸாருடன் 23ஆம் பக்கம் பார்க்க....

## வட மாகாண செயலர்கள் அதிரடி இடமாற்றம்!

(கொழும்பு)

வடக்கு மாகாணசபையில் உள்ள அமைச்சுச் செயலாளர்களுக்கு அதிரடி இடமாற்றங்கள் வழங்கப் பட்டுள்ளன.

இன்று ஏப்ரல் முதலாம் திகதி நடைமுறைக்கு வரும் வகையில் இந்த இடமாற்றங்கள் அறிவிக்கப் பட்டுள்ளன.

வடமாகாண கல்வி அமைச்சுச் செயலாளருக்கும், சுகாதார அமைச சுச் செயலாளருக்கும், மீன்பிடி அமைச சுச் செயலாளருக்கும் மாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளன.

மீன்பிடி அமைச்சுச் செயலா ளராக இருந்த வரதீஸ்வரன் முதல மைச்சரின் செயலாளராகவும், கல்வி அமைச்சுச் செய 24ஆம் பக்கம் பார்க்க....

## போர்க்குற்ற விசாரணையை எதிர்கொள்ளத் தயார்! - பொன்சேகா

(கொழும்பு)

இறுதிக்கட்ட யுத்தத்தின் போது இடம்பெற்ற யுத்தக் குற்றச்சாட்டுக் கள் தொடர்பில் முன்னெடுக்கப் படும் எவ்வித விசாரணைகளுக்கும் முகம் கொடுக்க தயார் என பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.



ஆங்கில வார இதழொன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இடம்பெற்ற இறு திக்கட்ட யுத்தத்தின் போது 10 ஆயி ரத்திற்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் கொலை செய்யப்பட்டனர் என குற் றச்சாட்டு முன்வைக்கப்பட்டது.

எனது வழிநடத்தலின் கீழ் செயற் பட்ட இராணுவத்தினர் மிகவும் ஒழுக்கசீலர் 23ஆம் பக்கம் பார்க்க....

## வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளராக உதயகுமார் நியமனம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணக் கல்விப் பணிப பாளராக யாழ் வலயக் கல்விப் பணிப் பாளர் எஸ்.உதயகுமார் நியமிக் கப்பட்டுள்ளார்.

இவருக்கான நியமனம் வடககு மாகாண கல்வி அமைச்சினால் நேற்று வழக்கப்பட்டது.

வடக்கு மாகாண கல்விப்பணிப் பாளராக இருந்த ஆர்.ராஜேந்திரம ஓய்வு பெற்றதையடுத்தே இவர் மாகாண கல்விப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். (ந)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

## மாடு ஆட்டோவை மோதியதில் காயமடைந்த குடும்பஸ்தர் மரணம்

(யாழ்ப்பாணம்)

வேகமாக வந்த மாடு ஆட்டோவை மோதித்தள்ளியதில் படுகாயமடைந்த குடும்பஸ்தர் ஒருவர் நேற்று முன்தினம் அதிகாலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

உடவுல பொல்காவல பகுதியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான இ.கருணாரட்ன (வயது-29) என்ற குடும்பஸ்தரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இதேவேளை ஆட்டோவில் பயணித்த முல்லைத்தீவு கொக்குளாய் பகுதியைச் சேர்ந்த எஸ்.பாலசூரிய (வயது-37) என்பவர் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த 29 ஆம் திகதி இரவு 9 மணியளவில் கொக்குளாயிலிருந்து முல்லைத்தீவு நோக்கி ஆட்டோவில் பயணித்துக்கொண்டிருந்த போதே மேற்படி குடும்பஸ்தர்கள் இருவரும் விபத்தில் சிக்கிக் கொண்டனர்.

ஆட்டோவில் பயணித்துக் கொண்டிருந்த போது அப்பகுதியால் வேகமாக வந்துகொண்டிருந்த குழுவன் மாடு ஒன்று ஆட்டோவை மோதித்தள்ளியுள்ளது.

இந்நிலையில் படுகாயமடைந்த நிலையில் இருவரும் மாஞ்சோலை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர்.

இருப்பினும் நேற்று முன்தினம் அதிகாலை இ.கரு ணாரட்ன என்பவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இவரது மரணம் தொடர்பில் யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (6)

## மோசடி பேர்வழி கைது!

அவுஸ்ரேலியாவுக்கு அழைத்துச் செல்வதாகக் கூறி 54 பேரிடம் 50 இலட்சம் ரூபாயை மோசடி செய்ததாக கைது செய்த சந்தேக நபரை கொழும்பு சி.ஐ.டி பொலிஸார் நேற்று நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினர்.

பருத்தித்துறை மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா முன்னிலையில் ஆஜர் படுத்திய போது மேற்படி சந்தேக நபரை எதிர்வரும் 6-ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார். சந்தேக நபர் 3 வருடங்களின் பின் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (11)

**விற்பனைக்கு**
புதிய பெரிய Organ (ஓர்கன்) விற்பனைக்குண்டு. பழகுபவர்களுக்கு உகந்தது.
தொடர்புகளுக்கு:-0776549303
(9953)

**தேவை**
லாண்ட் மாஸ்டர் பெட்டி பழுதடைந்தது தேவை.
தொடர்புகளுக்கு:- 0776549303
(9953)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 1946 - 02 - 21

உதிர்வு 2015 - 03 - 02

எமது வித்தியாலய ஆசிரியர் த.செல்வக்குமார் அவர்களின் அன்புத் தந்தையார்

**அமரா வைரமுத்து தனபாலசிங்கம்**

அவர்கள் 02.03.2015 அன்று காலமாகிவிட்டார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதோடு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**ஆசிரியர் நலன்புரிச் சங்கம்**
**கிளி/கிளிநொச்சி ம.வி**
(சி-534)

## மரண அறிவித்தல்

### தியாகராசா தவராசலிங்கம்



பிறப்பு 22 - 08 - 1960

இறப்பு 30 - 03 - 2015

துறையாமூலை புலோலி வடமேற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தியாகராசா தவராசலிங்கம் அவர்கள் 30.03.2015 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் தியாகராசா - பொன்னம்மா தம்பதியினரின் மூத்த புதல்வனும் காலஞ் சென்றவர்களான செல்லையா-இராசம்மா தம்பதியினரின் மருமகனும், வள்ளியம்மையின் அன்புக் கணவரும், சுலோஜி, நிலோஜன், நிதுர்ஷன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், தவநேசராசலிங்கம் (கனடா), தபேந்திராதேவி, தவயோகராசா, தவபாக்கியராசா, தவநீதிராசா (கனடா), தவானந்தராசா (லண்டன்), தவஞானராசா, தவகுலராசா (கனடா), ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஜெயராசா, பரமேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும்,பிரதீபன் (பிரான்ஸ்), ஜெனனி, தனுஷாந், ஜெதுஷா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை 01.04.2015 இன்று புதன்கிழமை பி.ப 2.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் கருகம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**துறையாமூலை,**
**புலோலி வடமேற்கு, புலோலி.** (சி-532) **தகவல்:-குடும்பத்தினர்.**

## மனோதத்துவ வைத்தியம்

(General Psychotheraphy)

**பிரபல மனோதத்துவ நிபுணர்**



**Dr.P.ஆறுமுகம்**

T.P.: 0719315664 , 0777569205

**மீண்டும் யாழில்**

02.04.2015 முதல் 08.04.2015 வரை 7 நாட்கள் மட்டுமே இருப்பார். உடன் பதிவுகளை மேற்கொள்ளவும்.
**பதிவுக் கட்டணம் ரூபா: 300/-**

ஆரம்பநிலை மனநோய் விரைவில் சுகமாக்கலாம். நீரிழிவு நோய்க்கு திறமான மூலிகை மருந்து உண்டு. ஆஸ்துமா, மாதவிடாய்க் கோளாறுகள், வெள்ளைபடுதல், குழந்தைப் பேறின்மை, வாதநோய், தலையிடி, பல்முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு வைத்தியம் உண்டு.

இளைஞர்கள் ஞாபகத்திறன் குறைவு, கல்வியில் நாட்டம் குன்றிப் பயம், நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றிபெற பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

தாம்பத்திய பாதிப்புக்கள் (பிறவியில் ஆண்மையற்றவர்களைத் தவிர) எந்தவித மோசமான தாம்பத்திய கோளாறுகள்ளயும் மனோதத்துவரீதியில் திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாட்களில் சுகமாக்கலாம். பலர் சுகமாகியுள்ளனர். ஆண்களுக்கு ஏற்படும் விந்து உயிரணுக்கள் குறைபாடுகளுக்கு சிறந்த மூலிகை மருந்து கொடுக்கப்படுவதால் யாழ்ப்பாணத்தில் பல பேருக்கு குழந்தைகள் கிடைத்தமைக்கு ஆதாரங்கள் உண்டு.

**நாதன் இன்**

(பழைய கமால் லொஜ்) 392/A, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம். (சிவதர்சன் எலக்ரிக்கல் கடைக்கு அருகில்) (பெருமாள் கோவிலுக்கும் வெலிங்டன் சந்திக்கும் இடையில்)
(C-522)

## கண்ணீர் அஞ்சலி



### திருமதி கணேசு பரமேஸ்வரி

எமது வித்தியாலய ஆசிரியர் திருமதி பி.மகாராசா அவர்களின் அன்புத் தாயாரான **திருமதி கணேசு பரமேஸ்வரி** அவர்கள் 12.02.2015 அன்று காலமாகி விட்டார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதோடு அவரின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**ஆசிரியர் நலன்புரிச் சங்கம்**
**கிளி/கிளிநொச்சி ம.வி** (சி-533)

## கண்ணீர்க் காணிக்கை

### வித்துவான் ஆ.தா.ஆறுமுகம் (B.A)

(ஓய்வுபெற்ற அதிபர் மு/ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயம் 1974-1985)



அமரர் தாமோதரம்பிள்ளை ஆறுமுகம் அவர்கள் எமது பாடசாலையில் பதினொரு வருடங்களாக (1974-1985) அதிபராக கடமையாற்றினார். இப் பாடசாலையின் ஸ்தாபகரும், முதலாவது அதிபருமாகிய அமரர் அளப்பரிய பெரும் பணிகளைச செய்தவர். அன்னாரது இழப்பை அறிந்து அதிர்ச்சியும் ஆழ்ந்த கவலையும் அடைந்தோம்.

இழப்பால் துயரும் அன்னாரது உறவுகளின் துயரங்களில் பங்குகொள்வதுடன் அமரரது ஆத்மா சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

**பாடசாலைச் சமூகம்,**
**மு/ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயம்,**
**ஒட்டுசுட்டான்.** (சி-531)

**Raveens EMC-Karaveddy**
**G.C.E O/L 2014 DECEMBER**
**STUDENT PERFORMANCE RESULT SHEET**

| Name of the Students | Results | Result In Details | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | MAT | SCI | ENG | TAM | HIS | REL | ICT | E.LIT | COM |
| MISS.S. DILUXSHANA | 8A 1B | A | A | A | A | A | A | A | A | B |
| MISS.P. THULASIKA | 8A 1B | A | A | A | A | A | A | A | B | A |
| MASTER.S. THULAXSHAN | 8A 1C | A | A | A | A | A | A | A | C | A |
| MISS.A. SANGEETHA | 8A 1C | A | A | A | A | A | A | A | C | A |
| MISS.P. A[illegible]NAYA | 7A 1B 1C | A | A | A | A | A | A | A | C | B |

T:P:-021 226 3321

P.Easwaranathan B.Sc.Ag (Hons) Dip.Edu.
Director
Raveens EMC, Karaveddy
(9950)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலம்பெயர் அமைப்புக்கள்மீதான தடை தொடர்பில் தீர்மானமில்லை

## அஜித் பி. பெரேரா தெரிவிப்பு



(கொழும்பு)

**புலம்பெயர் அமைப்புக்களை தடை செய் வது தொடர்பில் அரசாங்கம் இதுவரை எவ்வித தீர்மானங்களையும் எடுக்கவில்லை என பிரதி வெளிவிவகார அமைச்சர் அஜித் பி. பெரேரா தெரிவித்துள்ளார்.**

இது உணர்வுபூர்வமான பிரச்சினை என்பதனால் மிகவும் நிதானமான முறையிலேயே கையாள வேண்டும் எனவும், இதற்கு பாராளுமன்றத்தின் ஆதரவும் அவசியம் என அவர் தெரிவித்தார்.

மகிந்த அரசாங்கம் கடந்த காலத்தில் பெருமளவிலான புலம் பெயர் தமிழ் அமைப்புக்கள் மற்றும் தனிப்பட்ட நபர்களை தடை செய் யப்பட்ட பட்டியலில் அறிவித்திரு ந்தது.

தமிழீழ விடுதலை புலிகள் அமைப்புடன் தொடர்புகளை வைத்திருந்ததாக தெரிவித்தே குறித்த தடை விதிக்கப்பட்டிருந்தது.

ஐ.நா. பேரவையின் பிரகடனமொன்றின் படி 16 புலம்பெயர் அமைப்புக்கள் மற்றும் 424 தனிப்பட்ட நபர்கள் தடைசெய்யப்பட்ட பட்டியலில் இணைக்கப்பட்டிருந்தனர்.

புலிகளுடன் தொடர்புகளை கொணடிருந்தமைக்கான உறுதியான ஆதாரங்கள் எதுவும் இல்லாத அமைப்புக்கள் மற்றும் தனிப் பட்ட நபர்களை இந்த பட்டியலிலிருந்து நீக்குவது குறித்து கவனம் செலுத்தப்படும என தற்போதைய அரசாங்கம் தெரிவித் திருந்தது என பிரதி வெளிவிவ கார அமைச்சர்சுட்டிக்காட்டியுள்ளார். இது தொடர்பில் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர பாராளுமன்றத்தில் உரையாற்றிய போதும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

# சிறுபான்மையினரின் பிரச்சினைகளை ஆராய விசேட ஜனாதிபதி செயலகப் பிரிவு அமைப்பு!

## ஈ.பி.டி.பி.செயலாளர் வரவேற்பு

சிறுபான்மையினரின் பிரச்சினைகளை ஆராயுமுகமாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவினது தலைமையில் விசேட ஜனாதிபதி செயலணிப் பிரிவு அமைத்திருப்பதை வரவேற்பதாக ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் மாலை கொழும்பில் தமிழ் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் கல்விச் சமூகப் பிரதிநிதிகள் மத்தியில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்துள்ள செயலாளர் நாயகம், கடந்த காலங்களில் எமது மக்களின் அரசியல் உரிமைப் பிரச்சினை உட்பட அனைத்துப் பிரச்சினைகளையும் சுமுகமான பேச்சுவார்த்தைகளின் ஊடாகத் தீர்த்துக்கொள்ளக் கூடிய வாய்ப்புகள் எமக்குக் கிடைத்திருந்தும், அவ்வாய்ப்புகளை சரிவரப் பயன்படுத்திக் கொள்வதற்கு சுயலாப தமிழ் அரசியல் தலைமைகள் தவறியதால் எமது மக்களின் பிரச்சினைகள் பல தீர்க்கப்படாத பிரச்சினைகளாகவே உள்ளன. இவ்வாறான தமிழ்த் தலைமைகளின் தவறான வழிகாட்டல்களே பாரிய அழிவுக்குள் எமது சமுதாயத்தை தள்ளியும் விட்டது.

அந்த வகையில், முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவினது ஆட்சிக் காலத்தின் போது, எமது மக்களின் அரசியல் உரிமைப் பிரச்சினை அடங்கலாக ஏனைய பிரச்சினைகளையும் தீர்க்கக் கூடிய ஓர் அரிய வாய்ப்பு கிடைத்திருந்தது. அந்த வாய்ப்பையும் இன்றைய சுயலாப தமிழ் அரசியல் தலைமைகளின் முன்னோடிகள் அன்று புறக்கணித்தன.

கடந்த ஆட்சிக் காலத்தில் பாராளுமன்ற தெரிவுக் குழு அமைக்கப்பட்டு, குறிப்பிட்ட காலவரையறைக்குள் எமது மக்களின் அரசியல் உரிமைப் பிரச்சினை உட்பட அடிப்படைப் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வுகள் எட்டப்பட உத்தேசிக்கப்பட்டிருந்தது. அந்த வாய்ப்பையும் அக்குழுவில் கலந்து கொள்ளாமல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது சுயலாபம் கருதிப் புறக்கணித்து வந்தது.

இப்போது இன்னுமொரு வாய்ப்பு தற்போதைய ஜனாதிபதியால் உருவாக்கித் தரப்பட்டுள்ளது. இந்த வாய்ப்பையாவது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் தவறவிடாது, சரிவரப் பயன்படுத்தி, எமது மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முன்வர வேண்டும்.

தமிழ் மக்களது பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் எனும் உண்மையான அக்கறை இருப்பின் இவ்வாய்ப்பை நிச்சயம் அவர்கள் பயன்படுத்திக் கொள்வார்கள் என்றும் செயலாளர் நாயகம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

# அகில இலங்கை இந்து மாமன்ற வெளியீடு

இந்து மாமன்றத்தின் வைர விழா வெளியீடாக A Compendium for Hindus (இந்து மக்களுக்கோர் கையேடு என்ற நூலின் ஆங்கிலமயம்) என்ற இந்து மக்களுக்கான ஆங்கில மஞ்சரி எதிர்வரும் 05 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணியளவில் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் வெளியிட்டு வைக்கப்படும். இந்நிகழ்வுக்கு தமிழ்நாடு, திருப்பனந்தாள், காசி திருமடத்தின் இணை அதிபர் தவத்திரு சுந்தரமூர்த்தி தம்பிரான் சுவாமிகளும், ஹவாய் சைவ ஆதீன குரு சுப்பிரமுனி சுவாமிகளின் சீடர், ஆன்மீகச்சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகளும் ஆசியுரைகளை வழங்குவார்கள்.

பிரதம விருந்தினராக வடமாகாண முதலமைச்சர் சத்தியவித்தகர் சி.வி. விக்னேஸ்வரன் கலந்து சிறப்புரை நிகழ்த்துவார்.

மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமாகும் இவ்விழாவில் நந்திக் கொடி ஏற்றல், இறை வணக்கம் என்பவற்றைத் தொடர்ந்து வரவேற்புரையும், தவத்திரு சுந்தரமூர்த்தி தம்பிரான் சுவாமிகளின் சிறப்பு ஆசியுரையும் நடைபெறும்.

தலைமையுரையையடுத்து The Compendium for Hindus என்ற நூல் வெளியீட்டை நிதி இராஜாங்க அமைச்சின் செயலாளர் திருமதி. சாந்தி நாவுக்கரசன் நடத்திவைப்பார். அதனைத் தொடர்ந்து பிரதம விருந்தினர் சிறப்பு உரையும் ஜனாதிபதி சட்டத்தரணி கனகநாயகம் கனக-ஈஸ்வரனின் நூல் ஆய்வுரையும் இடம் பெறும்.

மேலும் ஆன்மீகச்சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் "தவத்திரு யோகர் சுவாமிகளின் தீர்க்க தரிசனம்" என்னும் பொருளில் சிறப்பு அருளுரையும், மாமன்ற ஆன்மீக இதழான "இந்து ஒளி"யின் சிறப்பு மலரும் வெளியிட்டு வைக்கப்படும்.

யோகர் சுவாமிகளின் 50 ஆவது ஆண்டு குருபூசை நிறைவு மலராக இது வெளியிடப்படுகின்றது. அத்துடன் கலாநிதி க. வேலாயுதபிள்ளை நினைவுரையாக "கலாநிதி வேலாயுதபிள்ளை காட்டிய பாதையில் வன்னிக்கும் எங்கள் சேவையை எடுத்துச் செல்வோம்" என்னும் பொருளில் ஓய்வுபெற்ற அதிபர் மா. கணபதிப்பிள்ளையும், "பாரெல்லாம் எங்கள் பணி பரவட்டும்" என்னும் பொருளில் யாழ் இந்து ஆராய்ச்சி நிலைய இயக்குநர் செஞ்சொற்செல்வர், சைவஞான பானு, கலாநிதி ஆறுதிருமுருகன் நிறைவுரையையும் நிகழ்த்துவார்கள்.

இறுதியாக சக்தி இல்லத்தைச் சேர்ந்த இரத்மலானை, கொழும்பு இந்துக் கல்லூரி மாணவர்களின் நிகழ்ச்சியைத் தொடர்ந்து இறை வணக்கத்துடன் இந்நிகழ்வு நிறைவுறும். அதனைத் தொடர்ந்து மகேஸ்வரப் பூசையும் நடைபெறும் என அறிவிக்கப்பட்டது. (இ)

## 1008 சங்காபிசேகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கோண்டாவில் தில்லையம்பதி அருள்மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாள் திருக்கோவில் பங்குனி உத்தர நவோத்திர சகஸ்ர 1008 சங்காபிஷேகம் நாளை மறுதினம் 3 ஆம் திகதி வெள்ளிக் கிழமை காலை 9 மணிக்கு இடம் பெறவுள்ளது. ஸ்ரீ சிவகாமி அம்பாளுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் சங்காபிசேகம் நடைபெற்று விசேட பூஜையும் இடம் பெறும். (இ)

# யாழிலிருந்து புறப்படும் ரயில் நேரஅட்டவணையில் மாற்றம்

(யாழ்ப்பாணம்)

நாளைமறுதினம் வியாழக்கிழமை தொடக்கம் யாழ்ப்பாணத்திலிருந்து புறப்படும் புகையிரத நேர அட்டவணையில்' மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதாக யாழ்.பிரதான புகையிரத நிலைய அதிபர் ரி.பிரதீபன் அறிவித்துள்ளார்.

இதன்படி வழமையாக காலை 7.10மணிக்கு யாழ்ப்பாணத்திலிருந்து புறப்படும்யாழ்தேவி கடுகதி புகையிரதம் காலை 6.30மணிக்கு புறப்படும்.காலை 11மணிக்கு புறப்படும் நகர்சேர் கடுகதி புகையிரதம் காலை 9.40இற்கு காங்கேசன்துறையிலிருந்து புறப்பட்டு காலை 10.10 மணிக்கு யாழ்ப்பாணப் புகையிரத நிலையத்திலிருந்து புறப்படும்.

இரவு 7.05 மணிக்கு புறப்படும் இரவுத்தபால் புகையிரதம் இரவு 7மணிக்கு யாழ்ப்பாணத்திலிருந்து புறப்படும்.

ஞாயிற்றுக்கிழமைகளில் மாத்திரம் முற்பகல் 10 மணிக்கு யாழ்ப்பாணத்திலிருந்து மாத்தறைக்கு புறப்படும் புகையிரதம் மு.ப 9.10 மணிக்கு யாழ்ப்பாணத்திலிருந்து புறப்படும்.

காலை 5.10 இற்கு கல்கிசையில் இருந்து புறப்பட்டு 5.50இற்கு கொழும்பிலிருந்து புறப்படும் குளிரூட்டப்பட்ட கடுகதி புகையிரதம் காலை 5.10இற்கு கல்கிசையில் இருந்து புறப்பட்டு 5நிமிடம் முன்னதாக 5.45இற்கு கொழும்பிலிருந்து புறப்படும்.

காலை 6.30இற்கு கல்கிசையில் இருந்து புறப்பட்டு 7.15இற்கு கொழும்பிலிருந்து புறப்படும் யாழ்தேவி புகையிரதம் காலை 6.05 இற்கு கொழும்பிலிருந்து புறப்படும்.

இரவு 7.45 இற்கு கொழும்பிலிருந்து புறப்படும் இரவுத்தபால் புகையிரதம்இரவு8.40இற்கு கொழும்பிலிருந்து புறப்படும். கொழும்பிலிருந்து புறப்படும் இவ் இரவுத் தபால் புகையிரதத்திற்கான நேரமாற்றம் மட்டும் இன்றிலிருந்து அமுலுக்கு வரும்.

ஆசனங்களை முற்பதிவு செய்தவர்கள் இந்த நேரமாற்றத்தின் படி புகையிரத நிலையத்திற்கு வருகை தருவதை உறுதிப்படுத்துமாறு புகையிரத நிலைய அதிபர் கேட்டுள்ளார். (இ-3)

# இராசி பலன்

01.04.2015

(பங்குனி 18, புதன்கிழமை)

சூரிய உதயம் காலை 6.10 மணிக்கு
துவாதசி பிற்பகல் 12.10 மணிவரை
மகம் பிற்பகல் 4.26 மணிவரை
இராகுகாலம் 12.11-1.41 மணிவரை
சுபநேரம் 4.41-6.11 மணிவரை
பிரதோச விரதம், சித்தாமிர்தம்

வளவன்

**மேடம்** சுய முயற்சியின் மூலம் சுகம் காண வேண்டிய நாள், வருங்கால நலன் கருதி சேமிக்க முற்படுவீர்கள், பிள்ளைகளின் தேவைகளை நிறைவு செய்வதில் அக்கறை காட்டுவீர்கள்.

**இடபம்** பணிபுரியும் இடத்தில் பெயரும் புகழும் கூடும், எந்தக்காரியத்தையும் எளிதில் செய்து வெற்றி காண்பீர்கள், வாகன யோகத்தால் வளம் காண்பீர்கள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மிதுனம்** பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும் நாள், பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகுவர், சகோதர வழியில் ஒத்துழைப்புகள் கிடைக்கப் பெறுவீர்கள், வருமானம் திருப்தி தரும்.

**கடகம்** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், தூரதேசத்திலிருந்து சுபதகவல்கள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும், வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**சிம்மம்** குடும்பத்தில் சுமைகளும் பொறுப்புக்களும் கூடலாம்,திடீர் பயணங்கள் உருவாகும் வாய்ப்புண்டு, அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**கன்னி** விரதங்களில் நம்பிக்கை கூடும் நாள், சுப செலவுகள் அதிகரிக்கும் நாள், சஞ்சலங்கள் கூடும், முயற்சிகளில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், சயன சுகக்குறைவான நாள்.

**துலாம்** திடீர் பண வரவால் மகிழ்ச்சி யடைவீர்கள், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பயணங்களால் பலனுண்டு, உறவினர்களின் வருகையால் குதூகலம் அதிகரிக்கும் நாள்.

**விருச்சிகம்** தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், விருந்தினர் வருகையுண்டு, தொலைபேசி வழித்தகவல் மகிழ்ச்சி தரும், இனிய சம்பவங்கள் நடைபெறும் நாள், பொது நல ஈடுபாடு அதிகரிக்கும்.

**தனுசு** வீண் பழிகள் அகல விரைந்து முடிபுகள் எடுப்பீர்கள், மருத்துவச் செலவுகள் குறைந்து மன நிம்மதியைக் கொடுக்கும், புதிய திட்டங்கள் எளிதில் கைகூடும், பயணங்கள் எளிதில் கைகூடும்.

**மகரம்** உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், தொழிலில் கவனத்துடன் செயற்படுவது நல்லது.

**கும்பம்** குடும்பத்தில் அந்நியோன்னியம் அதிகரிக்கும், புதிய தொழில் வாய்ப்புக்கள் தேடி வரலாம், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, பயணங்களால் பலனுண்டு.

**மீனம்** நிர்வாகத் திறமை பளிச்சிடும் நாள், நினைத்த காரியத்தினை எளிதில் செய்து முடிப்பீர்கள், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், ஆரோக்கியம் சீராகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்ம ஞானத்தைத் தேடி

**ஆன்மீகம் 171**

## பயத்தை எதிர்கொள்ளல்

...முதலில் அவர்கள் ஒரு ஞானமடைந்த குருவிடம் பேசுகிறோம் என்பதையே மறந்துவிடுகிறார்கள். அவர்கள் யாரிடம் பேசுகிறோம் என்பதை முழுவதுமாக அறிந்து கொண்டார்களானால், இந்தக் கேள்வியே எழாது. எப்படியோ அவர்களுக்கு அவர்கள் மொழியிலேயே பதிலளிக்க வேண்டும். அதனால் நான் சொல்கிறேன், எனக்கு என்னிடம் நம்பிக்கை இருக்கிறது, அந்தப் பெண்களுக்கும் என்னிடம் நம்பிக்கை இருக்கிறது, நீங்கள் ஏன் கவலைப்படுகிறீர்கள்?!. நான் இதைச் சொல்லும் பொழுது அவர்கள் அதிர்ச்சியடைகிறார்கள்.

நமது வாழ்வில் ஒழுக்கம் என்பது அறிவுக் குறைவிற்கு ஒரு கீழான மாற்று என்பதைத் தவிர வேறல்ல. உங்கள் சொந்த அறிவிலிருந்து செயற்படும் பொழுது உங்களுக்ளே உங்கள் மீது நம்பிக்கை இருக்கும். ஆனால், விதிமுறைகளிலிருந்தும் கட்டுப்பாடுகளிலிருந்தும் செயற்படும் போது உங்களால் ஒருபோதும் உங்களை நம்ப முடியாது. ஏனெனில், முதலில் நீங்கள் நீங்களாக இல்லை! நீங்கள் உங்களுக்குள் மையம் கொள்ளவில்லை; விதிமுறைகளில் மையம் கொண்டிருக்கிறீர்கள்.

நீங்கள் அறிவுப்பூர்வமாக வாழ்ந்தீர்களானால், இதுபோன்ற பயங்கள் ஒருபோதும் உங்களைப் பற்றாது. ஒழுக்கத்தைப் போதிக்கும் மக்கள் ஆழ்ந்த பயத்திலிருக்கிறார்கள். அதனால்தான் அவர்கள் அதைப் போதிக்கிறார்கள். அவர்கள் தங்கள் மீதே நம்பிக்கையின்மையாலோ அல்லது அவர்கள் ஒழுக்கவாதிகளாக அறியப்படுவது பயத்தினாலோ இருப்பதால் அச்சப்படுகிறார்கள். ஒழுக்கவாதிகள் அவர்களது ஒழுக்கம் மற்றும் கட்டுப்பாடு பற்றிய கருத்துக்களினால் மன நோயாளிகளாகிவிடக்கூடும்.

ஒரு சின்னக் கதை...

சாதாரணமாக தெருக்களில் நடக்கும் பொழுதே கவனமாக அடிகளை அளந்து வைக்கும் ஒழுக்கவாதி ஒருவர் இருந்தார். ஒருநாள் திடீரென்று கனமழை பெய்ய ஆரம்பித்துவிட்டது. ஒழுக்கவாதியும் கூட்டத்துடன் சேர்ந்து ஓடத் தொடங்கினார். சிறிது தூரம் ஓடிய பிறகே அவர் அவரது கவனமற்ற போக்கை உணர்ந்தார். அவர் தனக்குள் சொல்லிக்கொண்டார். நான் என்ன செய்துகொண்டிருக்கிறேன்! ஓடுவது ஒரு கௌரவமற்ற செயல். ஒரு மேன்மையான மனிதன், ஏதேனும் தவறுகள் செய்திருந்தால் அதை வருத்தத்துடன் திருத்திக்கொள்ள வேண்டும். அதனால் அவர் மழையில் திரும்பவும் ஓட ஆரம்பித்த இடத்திற்கே சென்று அங்கிருந்து மீண்டும் அடிகளை அளந்து நடக்க ஆரம்பித்தார். (சிரிப்பு)



ஒழுக்கம் உங்களை முழுவதும் மந்தமாகவும் நடைப்பிணமாகவும் ஆக்கிவிடும்! ஒரு விடயத்தைப் புரிந்துகொள்ளுங்கள்.... நான் இதைச் சொல்லும் பொழுது இது ஒரு சுதந்திரமான உலகம், நீங்கள் விரும்பிய எதையும் செய்யலாம் என்று சொல்லவில்லை. நீங்கள் உங்கள் சொந்த அறிவுக்கூர்மையை வளர்த்துக்கொண்டு வாழுங்கள்; அதனால் விதிமுறைகள் உங்களுக்கு ஏற்கனவே தெரிந்தவற்றையும் உணர்ந்தவற்றையும் உறுதிப்படுத்துவதாக மட்டுமே இருக்கும். அதனால் உங்கள் பயங்களை விட்டுவிட்டு உங்கள் உள் அறிவையும் உள் குரலையும் உள் குருவையும் தேட முயற்சி செய்யுங்கள். (தொடரும்)

பரமஹம்ஸ சுவாமி

---

# அதிசய உலகம்

## மரணத்தோடு போராடிய தாயாரை காப்பாற்றிய 4 வயது சிறுமி!

இங்கிலாந்தில் உள்ள வெர்மாண்ட் நகரை அடுத்துள்ள மலைவாசஸ்தலமான சஃபோல்க்கை child award 01 ஒட்டியுள்ள லோவெஸ்டாஃப்ட் பகுதியில் வசித்து வருபவர் ட்ரெவார் ஸ்ட்ராட்டன்.

இவரது மனைவி சார்லோட் ஸ்ட்ராட்டன்(32) அடிக்கடி மயக்கம் வந்து நினைவை இழந்துவிடும் தொடர் நோயால் பாதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த டிசம்பர் மாதம் 15 ஆம் திகதி வீட்டில் கணவர் இல்லாதபோது இதேபோல் அவர் மயங்கி விழுந்தார். இதைக் கண்ட அவர்களின் 4 வயது மகள் மேகன் ஸ்ட்ராட்டன் அதிர்ச்சி அடைந்தாலும், பதற்றம் அடைந்திடவில்லை.



முதுகுப்புறத்தை தட்டி கொடுத்தபடி தாயை அமைதியாக இருக்கும்படி ஆறுதல் கூறிய அந்த சிறுமி, தலையணையை கொண்டு வந்து சரியாக படுக்கவைத்து, போர்வையையும் போர்த்திவிட்டாள்.

உடனடியாக, வீட்டில் இருந்த கைபேசியை எடுத்து அதில் ஏற்கனவே பதிவு செய்யப்பட்டிருந்த "999" அவசர உதவி எண்ணை அழைத்தார்.

மறுமுனையில் பேசிய அதிகாரியிடம் தனது தாயார் நினைவிழந்து மயங்கி விட்டதாக தெரிவித்த மேகன், உடனடியாக வந்து உதவி செய்யும்படி கேட்டுக் கொண்டாள்.

உன் அம்மாவுக்கு என்ன வயது இருக்கும்? என்று கேட்ட கேள்விக்கு சற்றும் தாமதமின்றி பதிலளித்த அவள், "இதுவரை என் அம்மா தனது வயதை என்னிடம் சொன்னதில்லை. மயக்கம் தெளிந்ததும் முதல் வேலையாக அவளுக்கு எத்தனை வயது என்று கண்டிப்பாக கேட்டு தெரிந்து கொள்ள வேண்டும்" என வெகு சீரியஸாக தனது மழலைக்குரலில் கூறினாள்.

அதுமட்டுமின்றி, தங்கள் வீட்டின் முழு முகவரியையும் அவள் தெளிவாக தெரிவித்ததையடுத்து, சில நிமிடங்களில் ஆம்புலன்சுடன் பொலிசாரும் சம்பவ இடத்துக்கு வந்து சேர்ந்தனர்.

சார்லோட் ஸ்ட்ராட்டனுக்கு முதலுதவி சிகிச்சை அளித்துக் கொண்டிருந்தபோதே வெளியே சென்றிருந்த மேகனின் தந்தையும் வீட்டுக்கு வந்து சேர்ந்தார்.

அந்த 4 வயது சிறுமியின் புத்திசாதுர்யத்தை அவசர உதவி ஊழியர்கள் மெய்சிலிர்த்து பாராட்டியதை கேட்ட பெற்றோர் மனம் நெகிழ்ந்து போயினர்.

இந்த சம்பவம் நடைபெற்று 3 மாதங்கள் நிறைவடைந்த நிலையில் [illegible] அறிவுக் கூர்மையையும், தைரியத்தையும் பாராட்டி. ஊக்குவிக்கும் [illegible] போலீசார் அவளுக்கு வீரதீர விருது வழங்கி கவுரவித்துள்ளனர்.

---

# சமைப்போம் சுவைப்போம்

## வாழைப்பழ தோசை



தே.பொருட்கள்:

வாழைப்பழம் 3

அரிசி மா- 1 கப்

மைதா - 2 டேபிள் ஸ்பூன்

ஏலக்காய் பொடி - 1

சிட்டிகை சர்க்கரை- 1 டேபிள் ஸ்பூன்

உலர் திராட்சை - 2 டேபிள் ஸ்பூன் (நறுக்கியது)

முந்திரி -3 டேபிள் ஸ்பூன் (நறுக்கியது), தண்ணீர் - 1/2 கப்

நெய் - தேவையான அளவு

செய்முறை:

முதலில் வாழைப்பழத்தை நன்கு கையால் மசித்துக் கொள்ள வேண்டும். பின்னர் ஒரு பாத்திரத்தில் அரிசி மா, மைதா, சர்க்கரை, ஏலக்காய் பொடி சேர்த்து நன்கு கலந்து கொள்ள வேண்டும்.

பிறகு தோசைக்கல்லை அடுப்பில் வைத்து சூடானதும், ஒரு கரண்டி கலந்து வைத்துள்ள மாவை தோசை போன்று ஊற்றி, சிறிது நேரம் கழித்து மசித்து வைத்துள்ள வாழைப் பழத்தை சிறிது நடுவே வைத்து, நெய் ஊற்றி தீயை குறைவில் வைத்து, தோசை வெந்ததும் எடுக்க வேண்டும். இதேப் போன்று அனைத்து மாவையும் தோசைகளாக சுட்டு எடுக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து சமய திணைக்களம் நடத்தும் திருமுறை மாநாடு

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் வருடந்தோறும் இந்துசமய தத்துவம், வரலாறு மற்றும் திருமுறை சார்ந்த கருப்பொருளில் ஆய்வு மாநாடொன்றை நடத்தி வருகின்றது. அதன் தொடர்ச்சியாக இந்த ஆண்டு எதிர்வரும் ஏப்ரல் 3,4,5ஆம் திகதிகளில் பன்னிரு திருமுறைகளில் 9,10 ஆம் திருமுறைகளான திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருமந்திரம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு மாநாடு கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

**பொதுஅரங்கு**

அருளாளர்கள், அறிஞர்கள் மற்றும் கலைஞர்கள் பங்குகொள்ளும் பொது அரங்கு ஏப்ரல் 3,4ஆம் திகதி மாலை 4மணிக்கு இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்திலும் 5ஆம் திகதி வெள்ளவத்தை கொழும்பு தமிழ்ச்சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்திலும் இடம்பெறவுள்ளது.

**தமிழக அருளாளர், அறிஞர்கள்**

திணைக்களத்தின் அழைப்பின் பேரில் ஆன்மீக அருளுரை வழங்குவதற்காக திருப்பனந்தாள் காசித்திருமடத்தின் இளைய சந்நிதானம் தவத்திரு சுந்தரமூர்த்தி தம்பிரான் சுவாமிகள் வருகைதந்து மூன்று தினங்களும் மாநாட்டைச் சிறப்பிக்கவுள்ளதோடு அருளுரை வழங்கவுள்ளார். மேலும் சென்னைப் பல்கலைக்கழகத்தைச் சார்ந்த பேராசிரியர் அரங்க இராமலிங்கமும் கலைமாமணி கி.சிவகுமாரும் திருமுறைச் சொற்பொழிவுகளை வழங்குவதற்காக வருகை தருகின்றனர்.

திருமுறைக் கலாநிதி, பண்ணிசை மாமணி, அருட்கலைஞர் திருத்தணி சுவாமிநாதன், பண்ணிசைக் கச்சேரி நடத்துவதற்காக வருகை தருகின்றார். அவருக்கு அணிசேர் கலைஞர்களான வயலின் பிரமஸ்ரீ சர்வேச குருக்கள் வெங்கடேசன், மிருதங்கம் திருவண்ணாமலை ரி.எம். சிவகுமாரும் பங்கேற்கின்றனர்.

**இலங்கை அறிஞர்கள்**

நமது நாட்டு அறிஞர்களான அருள்மொழி அரசி கலாபூஷணம் திருமதி வசந்தா வைத்தியநாதன், பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, முன்னாள் அதிபர் சோ.பத்மநாதன் ஆகியோர் திருமுறைகள் பற்றிய சிறப்பு உரைகளை வழங்கவுள்ளனர்.

**திணைக்கள நூல்களின் வெளியீடு**

இத்தகைய ஆய்வரங்கு நிகழ்வுகளின் போது திணைக்களம் சிறந்த பல நூல்களை அச்சிட்டு வெளியீடு செய்கின்றது. அந்த வரிசையில் கடந்த ஆண்டு நடைபெற்ற திருவாதவூரரும் சைவத் திருநெறியும் என்ற கருப்பொருளிலான ஆய்வரங்கிற் சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரைகளின் தொகுப்பு நூல் வெளியிடப்பட்டுள்ளது.

மேலும் இலங்கைத் தமிழர்களின் பயன் பாட்டில் மட்டும் உள்ள **இலங்கைத் தமிழ் வழக்குச் சொற்கள்** பேராசிரியர் எஸ். சுசீந்திரராஜாவினால் தொகுக்கப்பட்டு அன்றைய தினம் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது. இந்த ஆண்டு நடைபெறும் திரு முறை மாநாட்டை முன்னிட்டு அச்சிடப்பட்ட **இசைப் பாகும் மந்திரமும்** எனும் சிறப்பு மலரும் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது.இம்மூன்று நூல்கள் பற்றிய அறிமுக வுரையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழ்ப் பேராசிரியர் சி.சிவலிங்கராசா நிகழ்த்தவுள்ளார்.

**பிரதம மற்றும் சிறப்பு விருந்தினர்கள்**

ஏப்ரல் 3ஆம் திகதி ஆரம்பமாகும் ஆரமப வைபவத்தின் பிரதம விருந்தினராக மீள்குடியேற்றம், புனர்நிர்மாணம் மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

அவ்வாறே இரண்டாம் நாள் 4ஆம் திகதி வைபவத்திற்கு வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் பிரதம விருந்தின ராகப் பங்கேற்கின்றார்.மூன்றாம் நாள் மாலை நிகழ்வுகளுக்கு மேல் மாகாண ஆளுநர் கே.சி. லோகேஸ்வரன்கலந்து கொண்டு சிறப்பிக்கின்றார்.

**ஆய்வரங்கு**

மூன்று தினங்களும் காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை 9, 10 ஆம் திருமுறைகளில் அடங்கியுள்ள திருமந்திரம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு ஆகியவற்றின் உட்பொருளை விளக்கும் ஆய்வுக் கட்டுரைகள், தமிழக, இலங்கை அறிஞர்களால் சமர்ப்பிக்கப்படவுள்ளன. அருள் மணமுமம் பக்திப்பெருக்கும் மிக்கதாக அமையவுள்ள இத்திருமுறை மாநாட்டில் ஆலய அறங்காவலர்கள். ஆன்மீகப் பெரியோர்,இந்து சமய அமைப்புக்களின் பிரதிநிதிகள், அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், கொழும்பு மாவட்டதமிழ்ப்பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் இந்து இளைஞர் அமைப்புக்களைச் சார்ந்தோர் அனைவரும் பங்குகொண்டு பயன்பெறவேண்டுமென திணைக்களம் வேண்டிக் கொள்கின்றது என இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் ம.சண்முகநாதன் அறிவித்துள்ளார். (இ)


## பொதுக்கூட்ட அறிவித்தல்

அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் எதிர்வரும் 10.04.2015 (வெள்ளிக்கிழமை) காலை 9.30 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடாத்துவதற்கு எல்லாம் வல்ல இறைவனின் அனுக்கிரகம் கிடைத்துள்ளதால் ஆலயத்தின் பூஜை உபயகாரர்கள், திருவிழா உபயகாரர்கள், விசேட தின உபயகாரர்கள், அடியார்கள் அனைவரும் உரிய நேரத்திற்கு வருகை தந்து ஆலய வளர்ச்சிக்கு உரிய பங்கினை முன்னெடுத்து உதவுமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

நிகழ்ச்சி நிரல்
இறைவணக்கம்
தலைவர் தலைமையுரை
செயலாளர் சென்ற கூட்ட அறிக்கை வாசித்தல்
பொருளாளர் கருத்துரை
இராஜகோபுர கும்பாபிஷேக நிகழ்வு பற்றி ஆராய்தல்
வருடாந்த கணக்காய்வு அறிக்கை சமர்ப்பித்தல்
விசேட விருந்தினர் உரை
ஆலய வளர்ச்சி தொடர்பாக ஆராய்தல்
வயற்காணி புதிதாக கொள்வனவு செய்தமைக்கு அங்கீகாரம் பெற்றுக் கொள்ளல்
ஏனைய விடயங்கள்
செயலாளர் நன்றியுரை

(சி-521)

குறிப்பு:- கூட்டம் குறிப்பிட்டநேரத்தில் நடைபெறும்.

தொ.பே. 021 320 8022
021 228 3745

கோ.பத்மநாதன்,
செயலாளர்.



## ஆதனவரிப் பெயர் மாற்ற அறிவித்தல்

இத்தால் சகலரும் அறிவது, வட்டாரம் 8 ஆதன இல. 345/4, கொழும்புத்துறை வீதியில் அமைந்துள்ள சின்னப்பு பெண் தெய்வானைப்பிள்ளை என்பவரது பெயரில் காணப்படும் ஆதனம் 8 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த திரு. பொன்னுத்துரை பாலசிங்கம் என்பவரால் 2004.11.12 ஆம் திகதி பிரசித்த நொத்தாரிஸ் பவானி சற்குணராசா முகதாவில் நிறைவேறிய 1379 ஆம் இலக்க அறுதி உறுதியால் சுண்டிக்குளிக் கோயிற்பற்று கொழும்புத்துறை இறை 'பனிக்கன்வளவு மறுபிரிவுகளும்' என்ற நாமமுடைய நிலப்பரப்பு ஆறுக்கு சொந்தக்காரரும் ஆட்சியாளருமாவார் என அறிய வருகிறது.

**இந்த நிலப்பரப்புக்கும் எல்லை**

கிழக்கு: ஒழுங்கை
வடக்கு: திருமதி. காராளகுலசிங்கம்
மேற்கு: எஸ். அருளையாவினாதனம்
தெற்கு: ஒழுங்கையும் வீரசிங்கத்தின் ஆதனமும்

மேற்படி பொன்னுத்துரை பாலசிங்கம் குறித்த ஆதனத்தின் சோலைவரிப் பெயரை தமது பெயருக்கு மாற்ற விண்ணப்பித்துள்ளார்.

எனவே சோலைவரிப் பெயர்மாற்றம் தொடர்பாக எவருக்காவது ஆட்சேபம் இருப்பின் இவ் அறிவித்தல் வெளிவந்த நாளிலிருந்து (01.04.2015-01.05.2015) ஒரு மாத காலத்திற்குள் ஆட்சேபனையை யாழ்ப்பாணம் மாநகர சபை ஆணையாளருக்கு தெரிவிக்கும் படி கேட்டுக் கொள்வதுடன் குறித்த காலப்பகுதிக்குள் சோலைவரிப் பெயர் மாற்றம் சம்பந்தமாக எவ்வித ஆட்சேபனையும் தெரிவிக்காவிட்டால் அதன் பின் சோலைவரிப் பெயரை பொன்னுத்துரை பாலசிங்கம் என்பவரது பெயருக்கு மாற்றுவதால் வரக்கூடிய எப்பொறுப்புக்கும் யாழ். மாநகர சபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மாநகர சபை
யாழ்ப்பாணம்.
24.03.2015

(சி-514)

ஆணையாளர்,
மாநகர சபை,
யாழ்ப்பாணம்.



## மடப்பள்ளி பூசகர் பதவிக்கான வெற்றிடம்

எமது ஆலயத்திற்கு மடப்பள்ளி பூசகர் பதவிக்கு வெற்றிடமுள்ளதால் தகுதியுடையவர்கள் விண்ணப்பிக்கவும். தங்குமிட வசதி வழங்கப்படும். சம்பளம் பேசித் தீர்க்கப்படும்.

தொடர்புகளுக்கு:- கிளிநொச்சி
அருள்மிகு கந்தசுவாமி
தேவஸ்தானம்.
A9 வீதி, கிளிநொச்சி.
தொலைபேசி இல.
021 3208022/ 021 228 3745

(சி-520)



## வாழ்க்கையில் வெறுப்பா ?

பிரச்சினை எதுவானாலும்,
எம்முடன் தொலைபேசியில்
அல்லது நேரில் பேசுங்கள்.
இரகசியங்களைப் பேணுவோம்.
காலை 9.00 – பி.ப 1.00
மதச்சார்பற்றது

(C-478)

**கைகொடுக்கும் நண்பர்கள்**
104, 4ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.
021 222 8117, 0779008776



## கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: அத்தம்
கி.பா: 48
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: A/L/ சொந்த தொழில்
தொ.இ: B/4340

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
கி.பா: 40 3/4 சூரிசெவ் 12 இல்
உயரம்: 5'8"
தகைமை/தொழில்: A/L/பிரான்ஸ் NOT PR
தொ.இ: B/4341

பிறப்பு: 1976 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
கி.பா: 22 சூரிசெவ் 11 இல்
உயரம்: 5'10"
தகைமை/தொழில்: A/L/ தனியார் தொழில்
எதிர்பார்ப்பு: சைவபோசனம்
தொ.இ: B/4344

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: சதயம்
கி.பா: 20 செவ் 8 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: A/L/ தனியார் தொழில்
தொ.இ: B/4346

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம்
கி.பா: 14 செவ் 12 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: A/L/ லண்டன்
தொ.இ: G/4343

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: மூலம்
கி.பா: 9 3/4
தகைமை/தொழில்: A/L/ தனியார் தொழில்
தொ.இ: G/4345

பிறப்பு: 1972 இந்து
நட்சத்திரம்: உத்தராடம்
கி.பா: 4 சூரிசெவ் 9 இல்
உயரம்: 5'
தகைமை/தொழில்: A/L/ அரச தொழில்
எதிர்பார்ப்பு: சைவபோசனம்
தொ.இ: G/4347

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: ரேவதி
கி.பா: 14 3/4
உயரம்: 5'
தகைமை/தொழில்: BBA, MA/ ஆசிரியர் சிங்கப்பூர்
தொ.இ: G/4350

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரிய கலாசாலையின் கணித,விஞ்ஞான தினவிழா

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் கணித.விஞ்ஞான மன்றம் முன்னெடுக்கும் கணித.விஞ்ஞான தின விழா நாளை வியாழக்கிழமை காலை 9.15 மணிக்கு கணித.விஞ்ஞான மன்றத் தலைவர் க.அமிர்தாஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தெல்லிப்பழை புற்றுநோய் வைத்திய நிபுணர் கிருஷாந்தி ராஜசூரியரும் சிறப்பு விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய விஞ்ஞான பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் நிருபராணி அமிர்தலிங்கமும் கலந்துகொள்ளவுள்ளனர்.

க.பொ.த. சாதாரண மாணவர்களுக்கான அங்கிகளின் பல்வகைமை குறித்த இறுவெட்டு வெளியீடு, கணித விஞ்ஞான தினத்தையொட்டி நடத்தப்பட்ட போட்டிகளுக்கான பரிசளிப்பு என்பனவும் இடம்பெறவுள்ளன.'புற்றுநோயை வெற்றி கொள்வோம்' என்ற தலைப்பில் பிரதம விருந்தினரின் சிறப்புரையும் இடம்பெறவுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)




## சிவ ஆலயங்களில் இடம்பெறும்

# உயிர் பலியிடுவதை தடுத்து நிறுத்துக!

(யாழ்ப்பாணம்)

**யாழ்ப்பாணத்தில் வலிகாமம் பகுதியிலுள்ள சிவ ஆலயங்களில் இடம்பெற்றுவரும் உயிர்ப்பலியை தடுத்து நிறுத்துமாறு இந்து கலாசார அலுவல்கள் மற்றும் மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதனிடம் அகில இலங்கை சைவ மகா சபை கோரிக்கை விடுத்துள்ளது.**

இது தொடர்பாக சைவ மகா சபை அமைச்சருக்கு அனுப்பி வைத்துள்ள மகஜரில் தெரிவித்துள்ளதாவது.

யாழ்ப்பாணத்தில் வலிகாமம் பகுதியிலுள்ள சிவ ஆலயங்களில் உயிர்ப்பலி நடைபெற்று வருவதை தாங்கள் அறிவீர்கள்.

அடுத்துவரும் வாரத்தில் சில ஆலயங்களில் தொடங்கவுள்ள இப்பலியிடுதல் ஏறத்தாழ 15 ஆலயங்களில் நடை பெறவுள்ளது.

யாழ்ப்பாணத்து சைவ ர்களின் நீண்டகால கோரிக்கையான இந்நிகழ்வுகளை ஆலயங் களில் நடத்தாமல் இருப்பதற்குரிய ஏற்பாடுகளை அரச உயர் மட்டத்தில் எடுக்குமாறு வேண்டுகின்றோம்.

மேலும் தங்கள் புதிய அரசாங்கத்தின் 100 நாட்கள் வேலைத் திட்டத்தில் உயிர் வதை தவிர்ப்பும் உள்ளடக்கப்பட்டிருப்பதை சுட்டிக்காட்டுவதோடு இந்து கலாசார அமைச்சர் என்ற ரீதியில் எமது அன்புவழிச் சைவத்தின் மேன்மையும் புனிதத்தையும் காருண்யத்தையும் காக்க நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகின்றோம் என்று அந்த மகஜரில் மேலும் வலியுறுத்தப்பட்டுள்ளது. (இ-5)

## முஸ்லிம் மக்களின் மீள்குடியேற்றம் குறித்து பிரதமர் ரணிலிடம் யாழில் மகஜர் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட முஸ்லிம் மக்களுடைய மீள்குடியேற்றப் பிரச்சினைகள், தற்போதைய நிலை மற்றும் அடிப்படைத் தேவைகள் அடங்கிய மகஜரை முன்னாள் மாநகர சபை உறுப்பினரும் யாழ். கிளிநொச்சி மாவட்ட மக்கள் பணிமனைத் தலைவருமான பி.ஏ.எஸ். சுபியான் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்ட பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் வைத்து மேற்படி மகஜர் கையளிக்கப்பட்டுள்ளது.

இதன்போது பதிலளித்த பிரதமர் உங்களது கோரிக்கைகள் தொடர்பில் உரிய கவனம் செலுத்தப்படும் என்று உறுதியளித்துள்ளதாக மக்கள் பணிமனைத் தலைவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

## வர்த்தகருக்கு பிணை

(கரணவாய்)

வர்த்தகர் ஒருவரிடமிருந்து 5 இலட்சம் ரூபா பணத்தைப் பெற்று அதனை தருவதாகக் கூறி காசோலை ஒன்றை வழங்கி ஒருவருடமாக ஏமாற்றிய சக வர்த்தகரை நெல்லியடிப் பொலிஸார் கைது செய்து பருத்தித்துறை நீதி மன்றில் நேற்று முன்தினம் ஆஜ ர்படுத்தினர்.

இந்நிலையில் பிரஸ்தாப வர்த்தகரை 50 ஆயிரம் ரூபா சரீரப் பிணையில் விடுதலை செய்த நீதவான் அவரது கடவுச் சீட்டைப் பறிமுதல் செய்யுமாறும் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். மேற்படி வழக்குத் தொடர்பான விசாரணை எதிர்வரும் 24 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. (இ-3-60)

## அன்பின் ஆழத்தினை வெளிப்படுத்தி ஆலய உயிர்ப்பலியை நிறுத்துவோம்

(யாழ்ப்பாணம்)

சைவ சமயிகளின் அன்பின் ஆழத்தை வெளிப்படுத்தி ஆலய உயிர்ப் பலியை நிறுத்துவோம் என வலியுறுத்தியுள்ள அகில இலங்கை சைவ மகாசபை சுழிபுரம் மேற்கு குடாக்கனை பேச்சியம்மன் ஆலய தர்மகர்த்தா சபைத் தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

சிவபூமி என வர்ணிக்கப்படுகின்ற ஈழமணி திருநாட்டில் வாழ்கின்ற சைவர்களாகிய நாங்கள் எந்த உயிர்க்கும் துன்பம் செய்யக்கூடாது என்ற உயரிய கொள்கையை பின்பற்றுபவர்கள்.அதனால் தான் எமது பரம்பொருளை "அன்பே சிவம்" என போற்றுகின்றோம்.

பரம்பொருளான சிவபெருமானை தாயாக வழிபடும் போது அம்மனாகவும் குழந்தையாக வழிபடும் போது முருகனாகவும் காக்கும் கருணாமூர்த்தியாக வழிபடும் போது வைரவராகவும் வழிபடுவது சைவசமயத்தர்களாகிய எங்களுடைய மரபாகும்.

அறியாத்தனமாக கொன்றுவிட்ட பசுக்கன்றுக்காக தனது மகனிற்கு மிகப்பெரிய தண்டனை வழங்கிய மனுநீதிச்சோழனது வழிவந்த அன்புவழிச் சைவத்தின் குழந்தைகளாகிய நாம் தன்னுயிர் போல் மன்னுயிர் பேணவேண்டும் அல்லவா! அனைத்து உயிர்களிற்கும் தலைவனாக விளங்கும் இறைவனை பசுபதி என அழைக்கின்றோம்.

அதனால் தான் தாயை இழந்த பன்றிக்குட்டிகளுக்கு தாய் பன்றியாக வந்து பால் சுரந்த அருட் செயலை எமது குழந்தைகளிற்கு சொல்லிக் கொடுக்கின்றோம்.

எமது பிள்ளைகள் போன்று வளர்கின்ற ஆட்டுக்கடாக்களை அனைத்து உயிர்களிற்கும் தாயான இறை சந்நிதானத்தில் வதம் செய்வது எமது எதிர்கால சந்ததிக்கு வழங்கும் தவறான முன்னுதாரணமாகும். எமது மனச்சாட்சிக்கு செய்யும் துரோகமுமாகும்.

பிட்டுக்கு மண் சுமந்த பெருமானின் பிராட்டியான அம்பாள் நாம் விரும்பி படைக்கும் பொங்கலை, குளிர்த்தியை ஏற்று மகிழ்பவளே அன்றி தன்னுடைய குழந்தையாகிய ஓர் உயிரின் இரத்தத்தையும், சதையையும் அல்ல என்பதை தாங்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்பதை அன்புவழிச் சைவத்தின் பெயரால் இருகரம் கூப்பி வேண்டுகிறோம்.

சைவம் காட்டும் உன்னத அன்பின் ஆழத்தை வெளிப்படுத்தும்வகையில் தங்கள் ஆலய உயிர்ப்பலியை கைவிடுவதன் ஊடாக எல்லா உயிரும் கைகூப்பித் தொழும் உன்னத நிலைக்கு உயரவேண்டும்என அன்புரிமையுடன் தங்களை வேண்டி நிற்கின்றோம்.

தங்களிற்கும் ஊரிற்கும் எல்லா நலன்களையும்அருள எல்லாம வல்ல அன்பின் திருவுருவாகிய அம்மையப்பனை பிரார்த்திக்கின்றோம் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(இ)






தென்மராட்சி மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்மன் தேவஸ்தான வளாகத்தில் அமைக்கப்பட்ட "கண்ணகாம்பிகை அன்னசத்திரம்" மண்டபத்திறப்பு விழா நேற்று முன்தினம் திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் ஆலய தர்மகர்த்தா சிவ.பஞ்சாட்சரம் தலைமையில் நடைபெற்றது. யாழ். மேலதிக அரச அதிபர் திருமதி றூபினி வரதலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு மண்டபத்தினைத் திறந்து வைத்தார். அமரர் வயிரமுத்து இராசலிங்கம் ஞாபகார்த்தமாக அவரது குடும்பத்தினரால் சுமார் 75இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட இம்மண்டபம் திருமதி அன்னலட்சுமி இராசலிங்கத்தால் சம்பிரதாயபூர்வமாக ஆலய தர்மகர்த்தாவிடம் கையளிக்கப்பட்டது. 30அடி அகலமும் 132அடி நீளமும் கொண்டதாக இம்மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. ஆன்மீக மற்றும் கலைநிகழ்வுகளை நடத்தக்கூடியதாக உள்ளே மேடையும் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-3-29)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கால்நடை உணவாகும் Azolla வளர்ப்பது எப்படி?

கால்நடை உணவாகும் **Azolla** வளர்ப்பது எப்படி? -ஒரு முன்னோட்ட விளக்கம்



அறிமுகம்

பொருளாதார ரீதியான மேம்பாட்டுக்கு கால்நடைவளர்ப்புத் துறை ஒரு இலாபகரமான வாழ்வாதார தொழில்முறையாக காணப்படுகின்ற போதிலும் அத்துறையில் காணப்படுகின்ற பிரதான இடர்பாடுகளில் ஒன்று கால்நடைகளுக்கான உணவூட்டல் ஆகும். இதற்கு பிரதானமாக இரண்டுகாரணங்கள் உண்டு. ஒன்றுசத்துள்ள உணவுகளின் பிராந்திய ரீதியிலான தட்டுப்பாடு மற்றையது அதிகவிலை. அதாவது உணவூட்டலுக்கான செலவு உயர்வாக உள்ளதுடன் சமநிலைப்ப டுத்தப்பட்ட உணவூட்டல் முறை இல்லாதும் காணப்படுகின்றது. அத்துடன் புரதம் அடங்கிய விலங்கு உணவுகளின் விலை உயர்வாக காணப்படுவதுடன் போதியளவுபெற்றுக் கொள்ளமுடியாமலும் உள்ளது. இத்தடைகளை எதிர்கொள்ளத் தக்கதாக அண்மைக்காலமாக பிரபலம் அடைந்தவரும் ஒரு உணவே **Azolla** ஆகும்

தற்போது **Azolla** எனப்படும் நீர்வாழ் பன்னந்தாவரத்தினை உற்பத்திசெய்து இந்தியா, சீனா போன்ற நாடுகள் கால்நடை உணவாக பயன்படுத்தப்படுகின்றன. இதனை நமதுநாட்டிலும் உற்பத்தி செய்து கால்நடைகளுக்கு உணவாக பயன்படுத்த வாய்ப்புக்கள் உண்டு. அதுகுறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தவே இக் கட்டுரை வரையப்படுகின்றது.

**Classification of Azolla**

| | |
|---|---|
| Kingdom | Plantae |
| Division | Pteridophyta |
| Class | Polypodiopsida |
| Order | Salriniales |
| Family | Salriniaceas |
| Genes | Azolla |
| Species | Azolla filiculoides |

**போசனைப் பெறுமானம்**

| | |
|---|---|
| புரதம் | 25-35% |
| கனியுப்பு | 10-15% |
| அமினோஅமிலம் | 7-10% |
| பிரதான விற்றமின்கள் | - $A_1, B_{12}$ |

மேலும் B carotene வளர்ச்சிப் பதார்த்தம் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

**கால்நடைகளுக்கு Azolla உணவூட்டலின் நன்மைகள**

இதுஉயர் போசணைப் பெறுமானத்தை கொண்டுள்ள துடன் (புரதம்) இலகுவாக சமிபாடு அடையக் கூடியதாகவும் உள்ளது. ஏனெனில் இதில் liqnin இன் அளவு குறைவானதாகக் காணப்படுகின்றது. அத்துடன் இது உயர் வளர்ச்சி வீதத்தினைக் கொண்டிருப்பதனால் விரைவாக வளர்ச்சியடைந்து தொடர்ச்சியாக அறுவடை செய்யக் கூடியதாகவுள்ளதுடன் குறைந்த உற்பத்திச் செலவினையும் கொண்டுள்ளது. அத்துடன் இதனை பயிரிடுவதற்கு குறைந்த இடவசதி போதுமானதாகவுள்ளதுடன் (100 சதுரஅடியில் பயிரிடப்படும் Azolla ஒருபசுவிற்குப் போதுமானது)முகாமைத்துவம் இலகுவானதாகவும் காணப்படுகின்றது.

முயல், மாடு, ஆடு, செம்மறியாடு, கோழி , பன்றி என்பவற்றிற்கு இதனை உணவாக வழங்கலாம். சாதாரண மாக ஒரு கறவைப பசுவிற்கு 1.5- 2 Kg நாளாந்தம் வழங்குவதன் மூலம் 15 % பால் உற்பத்தியில் அதிகரிப்பினை ஏற்படுத்தலாம். இறைச்சிக் கோழிகளுக்கு வழங்கும் போது இறைச்சி உற்பத்தி அதிகரிக்கின்றது. அத்துடன் உற்பத்திச்செலவு குறைவடைகின்றது. முட்டைக் கோழிகளுக்கு வழங்குவதனால் முட்டை உற்பத்தி அதிகரிக்கப்படுவதுடன் முட்டை மஞ்சட்கருவின் நிறம் அதிகரிக்கின்றது.இதனால் சந்தை வாய்ப்பும் அதிகரிக்கின்றது.

## ஒரு முன்னோட்ட விளக்கம்

**பயிரிடும் முறை**

(1) 2 X 2 X 0.2 m நீள, அகல, ஆழமான குழியினை தரையில் வெட்டுதல்.

(2)அதனை தனியான ஒரே பொலித்தீனினால் மூடுதல். குழியின் நிலம் ஒரேமட்டமாக மட்டப்படுத்தல்.

இடஅளவு

50% நிழல் கிடைக்கக் கூடிய , உயரமான மழைநீர் உட்செல் லாத மேடான இடம்.

(03) 10-15Kg வளமான மேல் மண், 2Kg சாணம், 30Kg super phosptat என்பவற்றினை ஒன்றாகக கலந்துஅதனுள் 10 L நீரினைச் சேர்த்துச் சேறாக்கி பின்னர் பொலித்தீன் விரிக்கப்பட்ட குழியில் இட்டு 10cm உயரம் வரும்வரைநன்னீர் சேர்த்தல்.

(04.) 0.5-1kg தூல சுத்த மான புதிய Azolla வினை தயார் செய்த நீர்த்தொட்டியினுள் இடுதல். (வெப்ப நிலை 25°C யிலும் உயர் வடையும் எனின் நிழல் வழங்குதல் வேண்டும்).

10-15 நாட்களில் Azolla தனது நீர்த்தொட்டியினை முழுமையாகப் படர்ந்து வளர்ந்து காணப்படும் அதன் பின்னர் தினமும் 500-600g அறுவடைசெய்யலாம்.

**அறுவடைமுறையும் உணவூட்ட லும**

1. அடிப்பகுதி 1-2cm துளையுள்ள வலைகொண்ட பாத்திரத்தினை பயன்படுத்தி அறுவடை செய்யலாம்.

2. அறுவடைசெய்த Azolla வினை தூய நீரினால் நன்கு சாணத்தின் மணம் போகும் வரை கழுவுதல் வேண்டும். கழுவிப் பெறப்படும் நீரினை Azolla தொட்டியில் சேர்ப்பது சிறந்தது.

3. ஆரம்பத்தில் 1:1 என்ற விகிதத்தில் Azolla வுடன் அடர் புதீன் கலந்து கால்நடைகளுக்கு அறிமுகப் படுத்தவேண்டும். 2 வாரங்களின் பின்னர் தனியாகவும் வழங்கலாம்.

4. Azolla அறுவடைசெய்யும் போது நோய்ப்பீடத்தாக்கம் ஏற்பட்டுள்ளதா என அவதானித்தல் வேண்டும்.



**பராமரிப்புமுறை**

01. Azolla தேவையேற்படாத போதிலும் நாளாந்தம் ஒவ்வொரு தொட்டியிலும் இருந்து குறைந்தது 200 Kg அறுவடை செய்தல் அவசியமானதாகும்

02. வெப்ப நிலை 25°Cயிலும் உயர்வடையாது இருப்பதற்கு நிழல் வழங்குதல் வேண்டும் (50% ஒளிஅவசியம்)

03. 5 நாட்களுக்கு ஒரு தடவை 1kg சாணம் 20 g super phosptat என்பன சேர்த்தல் வேண்டும்.

04. PHபெறுமானம் 5.5 -7 இற்கு இடையில் பேணுதல் வேண்டும்.

05. 10 நாட்களுக்கு ஒரு தடவை 25- 30% நீரினை தொடடியில் இருந்து அகற்றி புதிய நீர் சேர்த்தல் வேண்டும்.

06. 30 நாட்களுக்கு ஒரு தடவை தொட்டியில் உள்ள மண்ணில் 5 Kg அகற்றி புதிய வளமான மண் சேர்த்தல் வேண்டும்

07. 06 மாதங்களுக்கு ஒரு தடவை புதிதாக தொட்டி மாற்றீடு செய்யவேண்டும். அதாவது தொட்டியில் உள்ளநீர், மண் என்பன அகற்றி புதிதாக மாற்றீடு செய்து புதிய Azolla வளர்ப்பு சேர்த்தல் வேண்டும்.

08. நோய், பீடைத்தாக்கம் ஏற்படின் தொட்டியினை அழித்து விடுதல் வேண்டும். புதிய இடத்தில் புதிதாக தொட்டி அமைத்து Azolla உற்பத்தி செய்ய வேண்டும்.

எனவே மிக இலகுவாக வாழைத் தோட்டங்களின் கீழும் தென்னம் மரங்களின் கீழும் வளர்க்கக் கூடிய Azollaவை உற்பத்தி செய்து கால்நடைகளுக்கு வழங்கி அதிக வருமானத்தைப் பெறுவோம். இதனைப் பயிரிட விரும்புவோர் முல்லைத்தீவு கால்நடை வைத்திய அலுவலகத்துடன் தொடர்புகொண்டு மேலதிக தகவல்கள் மற்றும் பயிற்சிகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

**செ.தமிழ்வாசன்**
கால்நடைஅபிவிருத்தி உத்தியோகத்தர்
கால்நடை வைத்திய அலுவலகம்,
முல்லைத்தீவு.

# முதல்வர் பதவியை இழந்தாலும் மகிந்தவுக்கான ஆதரவு தொடரும்

## பிரசன்ன ரணதுங்க விசுவாசம்

(கொழும்பு)

முதலமைச்சர் பதவியை இழக்க நேரிட்டாலும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக்கும் முயற்சிகள் தொடரும் என மேல் மாகாண முதலமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

மகிந்தவை பிரதமராக்கும் நோக்கில் நடத்தப்பட்டு வரும் கூட்டத் தொடர்களுக்கு தொடர்ச்சியாக எனது பங்களிப்பு வழங்கப்படும்.

இதனால் முதலமைச்சர் பதவியை இழக்க நேரிட்டாலும் அதனை பொருட்படுத்தப் போவதில்லை.

மகிந்தவை பிரதமராக்கும் கூட்டத்தில் பங்கேற்க வேண்டாம் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினால் தடை விதிக்கப்பட்டுள்ளது.

சகோதரர் அர்ஜுன ரணதுங்க அமைச்சரவை அந்தஸ்துடைய அமைச்சுப் பதவியை வகித்த போதிலும் ஒரு நாளும் அரசியல் ரீதியான உதவியை அவரிடம் கோரியதில்லை என பிரசன்ன தெரிவித்துள்ளார்.

மகிந்த ஆதரவு கூட்டம் தொடர்பில் கொழும்பு ஊடக மொன்று தொலைபேசி மூலம் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (இ-5)

# நிமால் சிறிபால டி சில்வாவை பிரதமராக்க மகிந்த ஆதரவு!

## அமைச்சர் துமிந்த கோருகிறார்

பொதுத் தேர்தலில் எதிர்க்கட்சி தலைவர் நிமால் சிறிபால டி சில்வாவை பிரதமராக்கி ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியை வெற்றி பெற செய்வதற்கு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆதரவு வழங்க வேண்டுமென நீர்ப்பாசன அமைச்சர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி தலைமையகத்தில் கட்சி இளம் பாராளுமன்ற உறுப்பினர் களுக்கிடையில் இடம்பெற்ற சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவை பிரதம வேட்பாளராக நியமிக்கின்ற அல்லது தீர்மானிக்கின்ற உரிமை ஸ்ரீலங்கா சுதந்திர கட்சிக்கு மாத்திரமே இருப்பதாக அவர் கூறியுள்ளார்.

மகிந்த இன்றி முன்னோக்கி செல்ல முடியொதென்பது உண்மையற்ற ஒரு விடயமாகும்.எனினும் தேர்தலில் தோல்வியடைந்த ஒருவருக்காக எவ்வாறு பிரசாரங்களை மேற்கொள்ள முடியும்.

அதாவது சந்தையில் விலை போகாத பொருளை எவ்வாறு சந்தைப்படுத்த முடியும் என அவர் கேள்வியெழுப்பியுள்ளார்.

யாராலும் மரணிக்கும் வரை ஜனாதிபதியாக செயற்பட முடியாது. இரண்டு முறை அதிகாரத்தில் இருந்து விட்டால் வீட்டிற்கு செல்வதே சிறந்தது. இந்த கருத்து எங்கள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கும் பொருந்தும்.

எதிர்வரும் பொதுத்தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியினை மேலும் வலுவடைய செய்யவுள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வாக்களித்திருந்த சந்தர்ப்பத்தில் ஏன் வீணாக பிரச்சினை ஏற்படுத்திக் கொள்கின்றீர்கள் என அவர் மேலும் கேள்வியெழுப்பியுள்ளார். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராமநாதன் நுண்கலைப்பீட மாணவர்கள் மீண்டும் தொடர்போராட்டத்தை ஆரம்பிப்பு




(யாழ்ப்பாணம்)

இராமநாதன் நுண்கலைப் பீட மாண வர்கள் பல கோரிக்கைகளை முன்வைத்து தொடர் போராட்டத் தினை ஆரம்பித்துள்ள னர்.

யாழ்.பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைப்பீடத்தின் சித்திரமும் வடிவ மைப்பும் மாணவர்களே இப்போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

பலகோரிக்கைகளினை முன்வைத்து மூன்றாவது முறையாக முன்னெடுக்கப் பட்டுள்ள இப் போராட்டம் தீர்வு கிடைக்கும் வரை தொடரும் என போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.

நுண்கலை பீடத்தில் கல்வி கற்கும் மாணவர்களுக்கான பரீட்சைகள் கடந்த காலத்தில் சீராக நடைபெறவில்லை . இதனை சீராக்க வேண்டும்.

பல்கலைக்கழக ஏனைய பீடங்களுக்கும் பரீட்சைகள் முடிவுற்றுள்ள போதிலும் நுண் கலைப்பீடத்தில் வரைதலும் வடிவமைத்த லும் துறைக்கு பரீட்சைகள் நடைபெறவில்லை. மற்றும் தமது துறைக்கான இணைப் பாளரினை நியமனம் செய்யவில்லை.ஆகிய 3 முக்கிய கோரிக்கைகளினை முன்வைத்தே மாணவர்கள் போராட்டத்தில் ஈடு பட்டுள்ளனர்.

கடந்த 16 ஆம் திகதி குறித்த கோரிக் கைகளை முன்வைத்து மாணவர்கள் போரா ட்டம் நடத்திய போது பல்கலைக்கழக நிர் வாகம் வழங்கிய உறுதி மொழியினை யடுத்து போராட்டம் கைவிடப்பட்டிருந்தது.

இருவாரங்களாகியும் கோரிக்கை நிறை வேற்றப்படாத நிலையில் மீண்டும் கடந்த 26 ஆம் திகதியன்று போராட்டம் நடத்தியிருந்தனர்.

எனினும் இப்போராட்டத்திற்கும் முடிவு கிடைக்காத நிலையில் மூன்றாவது முறை யாக தொடர் போராட்டத்தினை மாணவர்கள் ஆரம்பித்துள்ளனர். (இ-4)

## இணையத்தளத்திற்கு எதிராக பொலிஸில் வர்த்தகர் முறைப்பாடு

நெல்லியடியிலுள்ள பிரிபல வர்த்தக நிலையம் ஒன்றுக்கு எதிராக இணையத்தளத்தில் வெளியான அவதூறுச் செய்தி தொடர்பாக நிறுவன முகாமை யாளரால் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் நேற்றுமுன்தினம் முறைப்பாடு செய்யப்பட் டுள்ளது.

மேற்படி அவதூறுச் செய்தி தொடர்பில் பிரஸ்தாப இணையத்தளத்திற்கு எதிராகப் பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர். இவ்வழக்கு நேற்று பருத்தித்துறை நீதி மன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள் ளப்பட்டது.

இதன்போது மேற்படி இணையத்தளம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுநீதிமன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு நீதிபதி பொலிஸாருக்கு பணித்துள்ளார். (இ-3-60)

## அகரவத்த பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் 3 பேர் மரணம்

(கொழும்பு)

கெட்டிபொல குளியாபிட்டி வீதியின் அகரவத்தை முச்சந்தியில் இடம்பெற்ற வாகன விபத்தில் 3 பேர் உயிரிழந்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் இரவு 11 மணியளவில் இடம் பெற்ற இந்த விபத்தில் மேலும் ஒருவர் காயமடைந்துள்ளதாக தெரியவருகிறது.

ஆட்டோவும் பேருந்தும் மோதியதில் இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.

ஆட்டோவில் பயணித்த மூவரும் ஹெட்டிபொல , இரத்தினபுரி மற்றும் மஹவ பகுதியை சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவத்தில் காயமடைந்த நபர் குருநாகல் போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் பேருந்துச் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். (இ-5)

## கொலைச் சந்தேக நபரின் பரபரப்பு வாக்குமூலம் இது

வீட்டுக்கு வந்து தனது பெற்றோரை கடுமையாக ஏசி, அவர்களை தாக்கியதனால், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் இளைய சகோதரர் பிரியந்த சிறிசேனவை கோடரியால் தாக்கினேன் என்று விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சந்தேகநபர் இஷார லக்மால் சபுதந்திரி தெரிவித்துள்ளார்.

வெலி ராஜு என்றழைக்கப்படும் பிரியந்த சிறிசேனவின் படுகொலைச் சந்தேகநபராக லக்மால் சபுதந்திரி, நீதிமன்ற உத்தரவுக்கிணங்க விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். அவரிடம் பொலிஸார் தொடர்ந்து விசாரணைகளை நடத்தி வருகின்றனர். இந்த விசாரணையின் போதே அவர் மேற்கண்டவாறு வாக்குமூலமளித்துள்ளார்.

தனது வாக்குமூலத்தில் சந்தேக நபர் மேலும் கூறியுள்ளதாவது,

'வெலி ராஜுவும் நானும் நீண்ட காலங்களாக நல்ல நண்பர்களாக இருந்தோம். எந்தவொரு இடத்துக்கும் நாமிருவரும் சேர்ந்தே செல்வோம். இருப்பினும், எம்மிருவருக்கும் இடையில் தனிப்பட்ட காரணத்துக்காக அண்மையில் முரண்பாடு ஏற்பட்டது.

அன்றுமுதல் அவர் என்னை தொலைபேசியில் அழைத்து திட்டுவார். போதாக்குறைக்கு, என்னுடைய வீட்டுக்கும் வந்து என்னுடைய பெற்றோரிடம் கூறி திட்டுவார். பெற்றோரையும் திட்டிச் சென்றிருந்தார்.

சம்பவம் இடம்பெற்ற நாளன்றும் வெலிராஜு என்னுடைய வீட்டுக்கு வந்திருந்தார். என்னுடைய பெற்றோரை அவர் அப்போது கடுமையாக ஏசினார். அச்சுறுத்தினார். அடித்து துன்புறுத்தினார். இதன்போது என்னுடைய பொறுமை எல்லை மீறியது. கோபத்தை தாங்கிக்கொள்ள முடியாமல், வீட்டிலிருந்த கோடரியை எடுத்து அவரது தலையில் தாக்கினேன்' என்று சந்தேகநபரான இஷார லக்மால் சபுதந்திரி, வாக்குமூலமளித்துள்ளார்.

இந்நிலையில், பிரியந்த சிறிசேனவின் பிரேத பரிசோதனையை மேற்கொண்ட கொழும்பு உதவி சட்டவைத்திய அதிகாரி ஜே.எம். ஹேவகேயின் சட்டவைத்திய அறிக்கையில், 'கூரிய ஆயுதமொன்றினால் தலையில் தாக்கப்பட்டுள்ளமையால் மூளையின் உட்பகுதிக்கு இரத்தக் கசிவு ஏற்பட்டுள்ளது. இதனாலேயே இந்த மரணம் சம்பவித்துள்ளது' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-5)

## க.பொ.த. சாதாரண தர பெறுபேறுகள்-2014

**வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம் ஆங்கில மொழிமூலம்-9ஏ**

ம.கம்சனா, கே.இலக்கியா, ச.கேதிகா, தி.திவியா, சூ.தபோசினி, சி.நிலாணி, வ.நிதுர்சா, தா.தனுராகவி ஆகியோர் அதிவிசேட சித்திகளைப் பெற்றுள்ளனர். இதேவேளை ஆங்கில மொழிமூல மாணவர்கள் உட்பட 22 மாணவிகள் 8 பாடங்களில் அதிவிசேட சித்திகளையும் ஒரு பாடத்தில் பி தர சித்தியையும் பெற்றுள்ளனர். (250)

**மு/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி**

சி.தர்சிகன்-9ஏ, த.மதுறன்-9ஏ, அ.திருக்குமரன்-9ஏ,ஏ.பவதாரணி-8ஏபி, செ.அருந்துசன்-8ஏசி, நிதுசன் -8ஏசி, க.சானுசன்-7ஏபிசி, பா.சஜிந்தா-7ஏபிசி, தமயந்தி-7ஏபி, பிரசன்யா-7ஏ2எஸ்,ரிலுக்சனா-7ஏ2எஸ்,ல.கஜலவன்-6ஏ2பிசி, ரிசியா-6ஏ2பிசி, அனுசியா- 6ஏ2 பிசி, கெ.தேனுகா- 6ஏ2பிசி, த.தனுசாந்தன்-6ஏபிசிஎஸ்.(250)

**யா/நடேஸ்வரா கல்லூரி**

ப.சாருஜா-2ஏபி3சி3எஸ், சா.டயானா-ஏபி2சி3எஸ், க.சர்மிளா- ஏபிசி3எஸ், இ.ஜெகதேசன்-3பி4சி2எஸ்,ம.சுயாணா-பி4சிஎஸ்;கு.மயூரன்-பி2சி4எஸ், இ.ஜெயந்தா-5சி2எஸ்.

**கிளி/பளை மத்திய கல்லூரி**

கே.திவாரகா-9ஏ,ஜெ.கலைக்ஷன்-7ஏபிசி, சி.அபினயா-7ஏபி சி,சி.தேனுஷா-7ஏபிசி, அ.டன்சி-7ஏபிசி, ம.மதீஷன்-7ஏபிசி,நி.நிகல்யா-5ஏ3பிஎஸ், சி.ஷாழினி-4ஏ4பி, க.அபிநயா-4ஏ3பி2சி, க.யாழரசன்-4ஏ2பி2சி, த.தனுஷன்-3ஏ3பி2சி, கு.இசையமுதன்-3ஏபி3சி, பு.வினுஷிகா-3ஏபி2சிஎஸ், சி.யசீதா-2ஏபி4சிஎஸ், ற.பிரியதர்சன்-2ஏ3பி2சி, செ.சுறாஜ்-2ஏ2பி2சி2எஸ், ப.சுகிர்தன்-2ஏ2பிசி2எஸ்.

**யா/மகாஜனக் கல்லூரி தெல்லிப்பழை**

வி.சங்கீத்-9ஏ, த.ரஜிவர்மன்-9ஏ,க.துளசிகன்- 7ஏபிஎஸ், லி.விக்னேஸ்-7ஏபிஎஸ், யோ. அனுஷா-6ஏ2பிசி, சி.குணமேகலா-6ஏ2பிசி, பு.ஹம்சத்வணி-6ஏ2பிஎஸ், மு.லக்சனா-5ஏ3பிஎஸ், மு.டிதுர்சன்-5ஏ2பி2சி, த.கோபிகன்-5ஏ2பிசிஎஸ், த.திலக்ஷன்-5ஏ2பிசி, க.நிரஞ்சன்-5ஏ2பிசி, சு.சுகப்பிரதா-5ஏபி2சிஎஸ், சி.சுபாங்கன்-5ஏ2பிசி, த.ராஜ்குமார்-5ஏ3சி, பி.கிருஷிகா- 5ஏ2பி2சி, மு.ஜெனிபராஜ்-4ஏ3பிசிஎஸ், நா.நிதர்சன்-4ஏ2பி3சி,கே.வேணுஜா-4ஏ2பிசி2எஸ்.

**சாவகச்சேரி இந்துக் கல்லூரி**

ம.கீதானந்-9ஏ, த.பிரதீபன்-9ஏ, இ.மதுஷா-9ஏ, வி.மதனிகா-9ஏ, சி.சோபனா-9ஏ, இ.விஹானி-9ஏ, ம.சுர்த்திகா-9ஏ, சி.மேனகா-9ஏ, பு.மிதுலன்-8ஏபி, கு.திலக்சன்-8ஏபி, சி.மிரோமினா-8ஏபி, மௌ.மைட்றேயன்-8ஏசி, ஜெ. ஜெயதாரணி- 8ஏசி, சி.கோபிகா-8ஏசி. சி.சங்கவி-8ஏசி, இ.தாட்சாயினி-8ஏசி, ந.வர்ணராஜ்-7ஏ2பி, த.தசிதா-7ஏ2பி, ஆ.சாரங்கன்-7ஏ2பி, சி.தேனுஷா-7ஏ2பி, பா.தினூசன்-7ஏபிசி, யோ.அனோஜன்-7ஏபிசி, சி.இளங்குமரன்-7ஏபிசி, சி.ஜனந்தன்-7ஏபிசி, சி.யாழினி-7ஏபிசி, க.தர்ஷன்-7ஏ2சி, த.மிதுலா-7ஏ2சி, இ.பிரதீப்-7ஏபி.

**மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி**

த.பாசுபதன்-9ஏ, த.லக்சிகா-9ஏ.

**விடத்தற்பளை கமலாசினி வித்தியாலயம்**

ந.லிரூஷனன்-9ஏ.

**கிளி/கிளிநொச்சி இந்துக் கல்லூரி**

ம.யூலியற் சங்கீதா-9ஏ, வி.மிதுசா-8ஏபி, சி.கீர்த்தனா-7ஏ2பி, சி.ரிதுசா-6ஏபி2சி, த.எழில்வாணி-6ஏ2பிசி, ர.ரேணுகா-5ஏ3பிசி, ஏ.டக்சன்-5ஏ2பி2எஸ், சி.யாழரசி-5ஏ4சி.

(2-277)

**மு/உடையார்கட்டு மகா வித்தியாலயம்**

ஸ்.சஜித்தா-8ஏசி, சி.தனுஷா-8ஏசி, இ.தரணிசன்-8ஏஎஸ், ர.பாவலன்- 6ஏ2பிசி, உ.சஜந்தினி-5ஏ3பிசி, யூ.அபிஷா-5ஏ2பி2சி, ம.நிதர்ஷன்-5ஏ3பி, ஜோ. பானுசன் -4ஏ3பிசிஎஸ், கே.பிறையரசி-4ஏ3பிசி, அ.றொஜிஸ்ரன் ஜோய்-4ஏ3பிசி, சி.குலளினி-4ஏ2பி2சி, சி.கலைப்பிரியா-3ஏ5பிசி, ச. சஜித்தா-3ஏ4பிசி, சி.சர்மிளன்-3ஏ4சிஎஸ், ச.தனுஷன்-3ஏ2 பி3எஸ், ப.கஜேந்திரன்-2ஏ 4பி2சி, செ.பகிசன்-2ஏபி3 சிஎஸ், அ.சர்மிகா-ஏ2பி2 சி4எஸ், ஆ.அனுஷா-ஏ3பிசி 3எஸ், கி.பிரகதிஸ்-3பி2சி 3எஸ், ச.எலிசபெத்-2பி2சி 2எஸ், க.சோதிகா-பி4சி4எஸ், ம.விபூசிகன்-4சி4எஸ். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துரோகத்தனமான செயல்களை மறந்து இணைந்து செயற்பட தயாராகவுள்ளோம்

## வினோ எம்.பி தெரிவிப்பு

கடந்தகால அரசாங்கங்கள் தமிழ் மக்களுக்கு செய்த துரோகத்தனமான செயற்பாடுகளை நாங்கள் மறந்து இணைந்து செயற்பட தயாராக இருக்கின்றோம் என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோதராதலிங்கம் தெரிவித்துள்ளார்.

வவுனியா, பூவரசன்குளம் மகா வித்தியாலயத்தில் தொழில்நுட்ப ஆய்வுகூடத்தை கல்வி இராஜாங்க அமைச்சர் வே. இராதாகிருஸ்ணன் அண்மையில் திறந்து வைத்தார். இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய அவர், வன்னி மாவட்டம் கல்வி நிலையில் தற்போது பின்தங்கி இருக்கின்றது. இதனை முன்னுக்கு கொண்டு வரவேண்டிய பொறுப்பு தங்களிடம் இருக்கின்றது. அதற்கு நாமும் ஆதரவு தருவோம்.

வன்னி மாவட்டத்தில் உள்ள கல்வித்துறை சார்ந்தவர்களின் ஆலோசனைகளைப் பெற்று அதனடிப்படையில் சில வேலைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. அதற்கான ஏற்பாடுகளை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என கல்வி இராஜாங்க அமைச்சரை கேட்டுக் கொண்டார்.

தற்போது தேசிய அரசாங்கம் ஒன்று அமைந்துள்ளது. நாங்கள் தேசிய அரசாங்கத்திற்கு நேரடியாக ஆதரவு வழங்காவிட்டாலும் கூட அவர்களுடன் இணைந்து பேசி, பணியாற்றுவதற்கு தயாராக இருக்கின்றோம். இதனாலேயே கட்சி பேதமில்லாமல் இந்த மேடையில் ஒன்றாக இருக்கின்றோம். இந்த நிலை தொடர வேண்டும் என்பதே தமிழ் பேசும் மக்களினுடைய விருப்பமாகவுள்ளது. ஆகவே கடந்த காலங்களை நாங்கள் மறந்து, கடந்தகால அரசாங்கங்கள் தமிழ் மக்களுக்கு செய்த துரோகத்தனமான செயற்பாடுகளை நாங்கள் மறந்து இணைந்து செயற்பட தயாராக இருக்கின்றோம். அதற்கு இப்போதைய நிலை தொடர வேணடும். அதன்மூலம்தான் நல்லிணக்கத்தை கட்டியெழுப்ப முடியும். ஆனால் எங்கள் பிரதேசங்களில் நடைபெறுகின்ற சில சம்பவங்கள் நல்லிணக்கம் தொடர்பாக சந்தேகத்தை ஏற்படுத்துகின்றன.

இது தொடர்பில் எல்லோரும் கவனம் செலுத்த வேண்டும். இவ்வாறு எமது பகுதியில் சில சில மாற்றங்கள் ஏற்பட்ட போதும் நிரந்தர தீர்வு விடயத்தில் தமிழ் மக்களாகிய நாம் ஏமாந்து விடுவோமோ என்ற சந்தேகம் எமது மக்களிடம் உள்ளது. எனவே, இது பற்றி கவனம் செலுத்தி உரிய அதிகாரிகள் செயற்படவேண்டும் என்றார். (2-250)




## அழககங்களின் சம்மேளன அங்குரார்ப்பணம்

(கிளிநொச்சி)

வடமாகாண அழககங்களின் சம்மேளனம் கடந்த 22 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்டத்தில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

இதன்பின்னர் யாழ்.மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்கங்களின் ஒன்றியத்திடம் விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கு அமைய 8 கிளை சங்கங்களுடனும் கலந்தாலோசித்து அங்கீகாரம் பெறப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதற்கமைய அனைத்துலக கிளைகளுக்கும் ஞாயிற்றுக்கிழமை வாராந்த விடுமுறை தினமாகும்.

திங் கட்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரை காலை 7 மணி முதல் இரவு 9 மணிவரை தொழில் நிலையம் திறந்து இருக்கும. சனிக்கிழமைகளில் மட்டும் காலை 7 மணி முதல் இரவு நேரக் கட்டுப்பாடு நீக்கப்பட்டுள்ளது. மேற்படி தீர்மானங்கள் மிக கடுமையான முறையில் ஒன்றிய நிர்வாகத்தினால் அமுல்படுத்தப்படும் எனவும் தவறும் பட்சத்தில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் யாழ்.மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்கங்களின் ஒன்றியம் அறிவித்துள்ளது. (2)

## தந்தை செல்வா ஜனனதினம் வவுனியாவில் நேற்று அனுஷ்டிப்பு



(குருமன்காடு)

தமிழரசுக் கட்சியின் ஸ்தாபகர் தந்தை செல்வாவின் 117 ஆவது ஜனனதினம் வவுனியாவில் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

வவுனியா மணிக்கூட்டு கோபுர சந்தியில் உள்ள தந்தை செல்வாவின் திருவுருவப்படத்திற்கு மலர் மாலை அணிவித்து நினைவு நாள் நிகழ்வுகள் இடம்பெற்றன. அஞ்சலி நிகழ்வைத் தொடர்ந்து தமிழரசுக் கட்சியின் வவுனியா தாயகம் அலுவலகத்தில் இரத்ததான நிகழ்வும் இடம்பெற்றது.

இந் நிகழ்வுகளில் தமிழரசுக் கட்சியின் வவுனியா கிளைத் தலைவரும் வடக்குமாகாண சுகாதார அமைசசருமான ப.சத்தியலிங்கம், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோதரா தலிங்கம், வவுனியா நகரசபையின் முன்னாள் நகரபிதா எஸ்.என்.ஜி. நாதன், வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை தவிசாளர் க.சிவலிங்கம் மற்றும் கட்சி உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (2-250)

# சிறுபோக கூட்டத் தீர்மானத்திற்கு அமைவாக நடவடிக்கை எடுங்கள்

## விவசாயிகள் கோரிக்கை

கிளிநொச்சி புதுமுறிப்பு குளத்தின் கீழ் சிறுபோக நெற்பயிர்ச் செய்கைக்கான பொதுக்கூட்டம் கடந்த 8 ஆம் திகதி நடைபெற்றது.

இக் கூட்டத்தில் மத்திய வகுப்பு காணிகளில் 240 ஏக்கரும் சிவநகர், ஜெயந்திநகர் ஆகிய இடங்களில் உள்ள விவசாயக் காணிகளுக்கு தலா 1 1/2 ஏக்கர் வீதமும் சிறுபோகம் விதைப்பதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டது.

புதுமுறிப்புக் குளத்தின் கீழுள்ள கற்பக விநாயகர் ஆலயத்தின் நிர்மாணப் பணிகளுக்கு மத்திய வகுப்பு விவசாயிகளுக்கு தலா 25 ஆயிரம் ரூபா வழங்குவது எனவும் தீர் மானிக்கப்பட்டது.

பொதுப்பங்குகள் எவையும் வழங்கப்படவில்லையெனவும் பொதுப்பங்குகளுக்கான கோரிக்கைகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் இது தொடர்பில் பின்னர் தீர்மானம் எடுக்கப்படுவதாகவும் கிளிநொச்சி மாவட்ட பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளரினால் தெரிவிக்கப்பட்டது.

இதன்பின்பு ஏனைய அதிகாரிகளுடனோ பொதுப்பங்குகளுக்கு விண்ணப்பித்தவர்களுடனோ கலந்தாலோசிக்காமல் சொந்த விருப்பின் பேரில் இயங்காத நிலையிலுள்ள பொது அமைப்புக்கள் சிலவற்றிற்கும் பொதுப்பங்குகளை வழங்கி அதனை ஏலத்திற்கும் விட்டுள்ளனர்.

கூட்டத்தீர்மானத்தின்படி மத்திய வகுப்புக் காணிகளுக்கு 240 ஏக்கருக்குப் பதிலாக தற்போது 219 ஏக்கர்கள் மட்டுமே கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் பொதுப்பங்குகளை நடைமுறைப்படுத்தியதாலும் மத்திய வகுப்பு விவசாயிகள் தாம் முன்னர் இணங்கியதற்கமைய 25 ஆயிரம் ரூபாவை செலுத்த இயலாத நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் விவசாயிகளால் விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

பொதுப்பங்குகளுக்கான விதைப்பதற்குரிய காரணிகள் மேலதிகமாகப் பெற்று கூட்டத்தீர்மானத்திற்கு முரணான வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவது போல தெரிவதாக விவசாயிகளால் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த காலங்களிலும் கூட்டத் தீர்மானத்திற்கு முரணான வகையில் நடைபெற்றமை போல் அல்லாது இம்முறை சிறந்த முறையில் எடுக்கப்பட தீர்மானங்களை நடைமுறைப்படுத்த கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் கூட்டத் தீமா னத்தை மீளாய்வு செய்து விவசாயிகளுக்கு உதவ முன்வர வேண்டுமென கோரிக்கை விடுக்கப்படுகின்றது. (2-254)

# காணிப்பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் வாழும் தமிழ் முஸ்லிம் மக்களின் காணிப்பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

அத்துடன் சட்ட விரோத மீன்பிடிவலைகளைக் கொண்டு மீன்பிடிப்பது தொடர்பில் கடற்றொழில் அதிகாரிகள் உரிய நடவடிக்கையை எடுக்க வேண்டுமென பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

வடக்கிற்கான மூன்று நாட்கள் உத்தியோபூர்வ விஜயத்தை மேற்கொண்ட பிரதமர் கடந்த ஞாயிற்றுக்கிழமை முல்லைத்தீவு மாவட்டத்துக்கு வருகைத்தந்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் யுதத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நட்டஈட்டுக் கொடுப்பனவுகளையும் வழங்கி வைத்த பிரதமர், முல்லைத்தீவு மாவட்ட அரச திணைக்களங்களின் அதிகாரிகளுடனான கலந்துரையாடல் ஒன்று முல்லை. அரச அதிபர் பணிமனையில் நடைபெற்றது.

இந்த கலந்துரையாடலில் கைத்தொழில் மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் றிசாத் பதியுதீன், மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம். சுவாமிநாதன், பிரதியமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சிவசக்தி ஆனந்தன, ஹுனைஸ் பாருக், வடமாகாண சபை உறுப்பினர்கள், வடமாகாண ஆளுநர், முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் உள்ளிட்ட அரச திணைக்களங்களின் அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் நாயாறு பகுதியில் தென்பகுதி மீனவர்கள் அத்துமீறி தொழில் செய்வதாக ஆரம்பத்தை விட தற்போது 250 தென்பகுதி மீனவர்கள் நாயாறு கடற்பகுதியில் மீன்பிடிப்பதாகவும் மீனவர்கள் இதன்போது சுட்டிக்காட்டினர்.

இதற்கு பிரதமர் மீனவர்கள் தொடர்பில் அதிக கவனம் செலுத்துவதாகவும், 1983 ஆம் ஆண்டுக்கு முன்னர் முல்லைத்தீவு மாவட்டத்துக்கு தென்னிலங்கை மீனவர்கள் மீன்பிடி தொழிலில் ஈடுபடவருகைத தந்திருந்தால் அவர்கள் தவிர அதற்கு பிற்பட்ட காலத்தில் தென்னிலங்கை மீனவர்கள் இங்கு வந்து நாயாறு பகுதியில் மீன்பிடித்தொழிலில ஈடுபட்டால் அவர்கள் தொடர்பில் உரிய நடவடிக்கையெடுக்குமாறு பிரதேசத்துக்கு பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபரிடத்தில் பிரதமர் கேட்டுகொண்டார்.

அத்துடன், உள்நாட்டு மீனவர்களின் பிரச்சினைகள் தொடர்பில் கடற்றொழில் அமைச்சருடன் பேசவுள்ளதாகவும், தமிழக மீனவர்கள் அத்துமீறி வருவது தொடர்பில் உரிய பொறிமுறையொன்று செயற்படுத்தப்படும்.

அதேவேளை இழுவை பட குகள் தொழிலாளர்களின் கோரிக்கை தொடர்பிலும் உரிய நடவடிக்கையெடுக்கப்படும் எனவும் உறுதியளித்தார்.

சட்டவிரோத மீன்பிடி வலைகளைக் கொண்டு மீன்பிடிப்பது தொடர்பில் கடற்றொழில் அதிகாரிகள் உரிய நடவடிக்கையினையெடுக்க வேண்டும்.

அத்துடன், கிளிநொச்சி, யாழ்ப்பாணம் உள்ளிட்ட வடக்கில் உள்ள தேசிய பாடசாலைகள் தொடர்பிலும், பிரதேசத்தின் கல்வி சார் நடவடிக்கை தொடர்பிலும் அதிக கவனம் செலுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் கூறினார்.

வடக்கில் ஆசிரிய நியமனங்களை பெறுகின்றவர்கள் 10 வருடங்கள் தாம் நியமனம் பெறும் பாடசாலைகளில் கற்றல் செயற்பாடுகளில் ஈடுபட வேண்டும், அவ்வாறு இல்லாதவிடத்து அது தொடர்பில் மாற்று நடவடிக்கைகளை எடுக்க நேரிடும் என்றும் பிரதமர் இங்கு குறிப்பிட்டார்.

இதேவேளை, முல்லைத்தீவு மாவட்டத்தில் பொதுமக்களின் காணிகள் இராணுவத்தினரால் கையகப்படுத்தி வைக்கப்பட்டுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள், பிரதமரிடம் தெரிவித்தனர்.

இவ்வாறு இராணுவத்தினரால் சுவீகரிக்கப்பட்ட பொதுமக்களின் மேட்டு மற்றும் வயல்நிலக் காணிகளை உடனடியாக விடுவிக்க வேண்டும் எனவும் இதன்போது சுட்டிக்காட்டினார்.

அத்துடன், 1990ஆம் ஆண்டு முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து இடம்பெயர்ந்து புத்தளம் மாவட்டத்தில் வாழும் முஸ்லிம் மக்கள் தமது சொந்த மண்ணில் மீள்குடியேறுவதற்கு காணி, வீடு உள்ளிட்ட பிரச்சினைகள் காணப்படுவதாக அமைச்சர் றிசாத் பதியுதீன் பிரதமரிடம் தெரிவித்தார்.

எனவே, வடமாகாண முஸ்லிம் மக்களின் காணிப்பிரச்சினைக்கு உரிய தீர்வைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்த பிரதமர்,

முல்லைத்தீவு முஸ்லிம் மக்களின் மீள்குடியேற் றம் தொடர்பில் அறிக்கையொன்று சமர்ப்பிக்குமாறு மீள்குடியேற்ற அமைச்சரிடம் கேட்டுக்கொண்டார். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# உப்பைப் போன்ற பாசம்!

...அதற்குள் அரண்மனையில் ராணியின் அட்டிகை காணாமற்போனதால் ஒரே பரபரப்பு ஏற்பட்டது. அட்டிகையைக் கண்டு பிடிப்பவர்களுக்கு, அவர்கள் விரும்புவது எதுவானாலும் தரப்படும் என்று ராஜா தண்டோராப் போடச் செய்தார்.

அடுத்தநாள் காலை, விறகு வெட்டி தன் வேலைக்குக் போகும்போது, தன் குடிசையின் கூரையில் ஏதோ பளபளவென மின்னுவதைக் கண்டு தன் மனைவியான இளவரசியை அழைத்தான். வெளியே ஓடி வந்த அவள கூரையின் மேல் விழுந்திருந்த வைர அட்டிகையைக் கண்டு திகைத்துப் போனாள. அதை விறகு வெட்டி கூரையிலிருந்து எடுத்து அவள் கையில் தர, "அடடே! இது என் தாயின் அட்டிகை அல்லவா? இது எப்படி இங்கே வந்தது?" என்று ஆச்சரியத்துடன் குழம்பியவள், "என்னுடைய தந்தை என்னைப் புரிந்து கொள்ளும் காலம் இத்தனை சீக்கிரம்வரும் என்று நான் நினைக்கவில்லை" என்றாள.

அப்போது தூரத்தில் அரண்மனை ஆள் ஒருவன் தண்டோராப் போட்டு வைர அட்டிகையைப் பற்றி அறிவிப்பது கேட்டது. அதைக் கேட்டதும் இளவரசியின் முகம் மலர்ந்தது. அவள் தன் கணவனை நோக்கி, "அரண்மனைக்குச்சென்று என் தந்தையை சந்தித்து இந்த அட்டிகையைக் கொடுங்கள். நீங்கள் யாரென்று அவருக்குத் தெரியாமல் மாறு வேடத்தில் செல்லுங்கள். அவரிடம் பரிசு எதையும் கேட்காதீர்கள். நாளைக்கு நம் வீட்டில் விருந்துண்ண வருமாறு அழையுங்கள். அதுவே போதும்" என்றாள்.

அதன்படியே, விறகு வெட்டி அரண்மனையை அடைந்து, ராஜாவை சந்தித்து அட்டிகையைக் கொடுத்தான். "மகாராஜா! பாக்கியவசமாக, மகாராணியின் அட்டிகையைக் கண்டு பிடித்தேன். இதைப் பெற்றுக் கொள்ளுங்கள்!" என்று சொன்னதும், ராஜா அதைக் கையில் வாங்கிப் பரிசோதித்தார். அது ராணியின் நகைதான் என்று தெரிந்ததும் மிக்க மகிழ்ச்சியுடன், "நீ யார்? உனக்கு என்ன பரிசு வேண்டும்? நான் முன்னமே அறிவித்தபடி நீ எது கேட்டாலும் அதைப் பெறலாம்" என்றார். "மகாராஜா! நான ஒரு ஏழை விறகு வெட்டி! ஆனால் உங்களிடமிருந்து பரிசு எதையும் நான் விரும்பவில்லை. ஆனால் நீங்கள் நாளைக்குத் தனியாக என் குடிசைக்கு வருகை தந்து விருந்துண்ண வேண்டும்!" என்று வேண்டினான்.





அதைக் கேட்ட ராஜா தர்மசங்கடத்திற்கு உள்ளானார். ஆனாலும் தான முன்னமே அறிவித்தபடி அவன் வேண்டுகோளை மறுக்க முடியவில்லை. மறுநாள் ராஜா மட்டும் விறகு வெட்டியின் குடிசைக்குச் சென்றார். இளவரசி தன் முகத்தை ஒரு திரையினால் மறைத்துக் கொண்டு ராஜா முன் வந்து அவரை வணங்கினாள். ராஜாவினால் தன் பெண்ணை அடையாளம் கண்டு பிடிக்க முடியவில்லை. பின்னர் ராஜா விருந்துண்ண அமர்ந்தார். அவருக்கு இளவரசி இனிப்புப் பண்டங்களாகப் பரிமாறினாள்.

அவற்றை அவர் உண்டபிறகு, மீண்டும் இனிப்புகளையே பரிமாற, அவருக்குத் திகட்டி விட்டது. "எனக்கு இனி மேல் இனிப்பு வேண்டாம்! உப்புள்ள பண்டங்களை உண்ண என் நாக்கு துடிக்கிறது. அவற்றில் ஏதாவது இருந்தால் கொண்டுவா!" என்றார் ராஜா! உடனே உப்பே இல்லாத உணவை அவர்முன் வைத்தாள். அதை உண்ட அவர், முகம் சுளித்து தட்டைத் தள்ளிவிட்டார்.

இதற்காகவே காத்திருந்த இளவரசி, அவர் முன் வந்து நின்று தன் முகத்திரையை அகற்றி, "அப்பா! அன்று ஒருநாள் உங்களை உப்பைப் போல் நேசிக்கிறேன் என்று சொன்னதற்காக என் மேல் கோபம் கொண்டீர்கள்.

இப்போதாவது இனிப்பை எப்போதும் உண்ண முடியாது என்பதையும், உப்பில்லாப் பண்டம் குப்பையிலே என்பதையும் புரிந்து கொண்டீர்களா?" என்றாள்.

ராஜா தன் தவறை உணர்ந்தார். இளவரசியை நோக்கி, "மகளே! உப்பின் அருமையை இன்று புரிந்து கொண்டேன். நீதான் அனைவரையும்விட என்மீது பாசம் உள்ளவள் என்பதைப் புரிந்து கொண்டேன். நான் சொனனேன் என்பதற்காக வசதியைப் பற்றி கவலைப்படாமல் ஒரு ஏழையை மணந்து வறுமையில் வாடுகிறாய். என்னை மன்னித்து விடு!" என்று கூறி கண்ணீர் வடித்தார்.

தன் பெண்ணின் பாசத்தை சரியாக உணர்ந்த ராஜா, அவள் கணவனுக்கு தன் ராஜ்யத்தின் ஒரு பகுதியை அளித்து ஆட்சி புரியச் செய்து, அவனையும் மன்னனாக்கி அழகு பார்த்தார். (முற்றும்)

## 04.2015 01 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1793 - ஜப்பானில் உன்சென் எரிமலை வெடித்ததை அடுத்து நிகழ்ந்த நிலநடுக்கத்தில் 53,ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர்.
- 1826 - சாமுவேல் மோரி உள் எரி பொறிக்கான காப்புரிமம் பெற்றார்.
- 1867 - சிங்கப்பூர் பிரித்தானிய குடியேற்ற நாடாகியது.
- 1891 - சிக்காக்கோவில் றிக்லி நிறுவனம் (Wrigley Company) ஆரம்பிக்கப்பட்டது.
- 1924 - அடொல்ஃப் ஹிட்லர் ஐந்தாண்டுகள் சிறைத் தண்டனை பெற்றார். ஆனாலும் அவர் 9 மாதங்களில் விடுதலை பெற்றார்.
- 1935 - இந்திய ரிசர்வ் வங்கி ஆரம்பிக்கப்பட்டது.
- 1937 - ஜேர்மனின் ஏடென் பிரித்தானிய குடியேற்ற நாடாகியது.
- 1939 -ஸ்பானிய உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்தது.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: ஐக்கிய அமெரிக்காவின் படைகள் ஜப்பானின் ஒக்கிநாவா தீவுகளில் இறங்கின.
- 1946 - மலாய் கூட்டமைப்பு உருவானது.
- 1948 - பரோ தீவுகள் டென்மார்க்கில் இருந்து தன்னாட்சி பெற்றது.
- 1949 - சீனக் கம்யூனிஸ்ட் கட்சியுடன் -சீனத் தேசியக் கட்சியுடன் பெய்ஜிங்கில் நடத்திய பேச்சுக்கள் தோல்வியில் முடிந்தன.
- 1957 - இந்தியாவில் நயா பைசா நாணயம் அறிமுகப்படுத்தப்பட்டது.
- 1973 - புலிகளைக் காப்பதற்கான செயற்றிட்டம் இந்தியாவின் ஜிம் கார்பெட் தேசியப் பூங்காவில் தொடங்கப்பட்டது.
- 1976 - ஆப்பிள் கணினி ஸ்டீவ் ஜொப்ஸ், Steve Wozniak ஆகியோரால் தொடங்கப்பட்டது.
- 1979 - ஈரான் 98% மக்கள் ஆதரவுடன் ஓர் இஸ்லாமியக் குடியரசாகியது.
- 1981 - சோவியத் ஒன்றியத்தில் பகலொளி சேமிப்பு நேரம் முதற்தடவையாக அறிமுகப்படுத்தப் பட்டது.
- 1997 - ஹேல்-பொப் வால்வெள்ளி பூமியின் சுற்றுப் பாதை வீச்சைக் கடந்தது.
- 2001 - யூகொஸ்லாவியாவின் முன்னாள் ஜனாதிபதி சுலோபதான் மிலோசெவிச் போர்க்குற்றங்களுக்காக காவற்றுறையினரிடம் சரணடைந்தார்.
- 2001 - நெதர்லாந்து சமப்பால் திருமணத்தை சட்டபூர்வமாக்கிய முதலாவது நாடானது.
- 2004 - கூகிள் 1000 மெகாபைட் கொள்ளளவுள்ள தான ஜிமெயில் என்ற இலவச மின்னஞ்சல் சேவையை அறிமுகப்படுத்தியது.

### பிறப்புகள்

- 1815 - ஒட்டோ ஃபொன் பிஸ்மார்க், ஜேர்மனிய அரசியலாளர் (இ. 1898)
- 1865 - ரிச்சார்ட் சிக்மோண்டி, நோபல் பரிசு பெற்றவர் (இ. 1929)
- 1875 - எட்கார் வாலஸ், ஆங்கில எழுத்தாளர் (இ. 1932)
- 1878 - சி. கணேசையர், ஈழத்துத் தமிழறிஞர் (இ. 1958)
- 1919 - ஜோசப் மறி, நோபல் பரிசு பெற்றவர்
- 1929 - டி. கே. கோவிந்த ராவ் கர்நாடக இசைக் கலைஞர் (இ. 2011)
- 1933 - குளோட் கொஹென்-டனூட்ஜி, நோபல் பரிசு பெற்றவர்
- 1940 - வங்காரி மாதாய், அமைதிக்கான நோபல் பரிசு பெற்றவர்

### இறப்புகள்

- 1960 - துங்கு அப்துல் ரகுமான், மலேசியாவின் மன்னர் (பி. 1895)
- 1968 - லேவ் லண்டாவு, நோபல் பரிசு பெற்ற ரஷ்ய இயற்பியலாளர் (பி. 1908)
- 1976 - மக்ஸ் ஏர்ண்ஸ்ட், ஜேர்மனிய ஓவியர் (பி. 1891)
- 2007 - தி. வே. கோபாலையர், தமிழறிஞர் (பி. 1926)

சிறப்பு நாள்

முட்டாள்கள் தினம்

### முட்டாள்கள் தினம்

இன்று ஏப்ரல் 1- உலகம் முழுக்க முட்டாள்களின் தினமாகக் கொண்டாடப்படுகிறது.

இந்நாள் பெரியளவிலாகக் கொண்டாடப்படுவதில்லை என்றாலும், நண்பர்கள், குடும்பத்தினர் என தெரிந்த நபர்களிடம் வேடிக்கை செய்வதும் அவர்களை முட்டாளாக்கி மகிழ்வதிலும் பெரும்பாலான மக்கள் ஈடுபடுகிறார்கள்.



April fool....

இன்று காலையிலேயே உங்களை ஏதாவது சொல்லி ஏமாற்றப் பார்ப்பார்கள். சிலர் சொல்லும் தகவல்கள் 100 சதவீதம் அப்படியே உண்மைதான் என்று நம்பும்படி இருக்கும். எனவே நம்பி, ஏமாந்துவிடாதீர்கள். கொஞ்சம் உஷாராக இருங்கள். ஆனால், சில நேரங்களில் ஏப்ரல் 1 அன்று காமெடி என்ற பெயரில் சிலர் செய்வது மோசமான விளைவுகளை ஏற்படுத்துகின்றன.

பிரான்ஸ் பேரரசர் நெப்போலியன் போனபார்ட், ஆஸ்திரியாவைச் சேர்ந்த மேரி லூயிஸை 1810 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1 ஆம் திகதி அதாவது இன்றைய தினம் திருமணம் செய்துகொண்டார். இந்நாள் முட்டாள் தினம் என்பதால் மணமகளை எல்லோரும் கேலி செய்தனராம். 'நெப்போலியன் உண்மையாகத் திருமணம் செய்யவில்லை. உன்னை முட்டாளாக்கவே திருமணம் செய்திருக்கிறார்' என்று எள்ளி நகையாடியதாகக் கூறப்படுகிறது..

வரலாற்றில் பல நல்ல விடயங்களின் துவக்க நாளாக இருந்ததும் இதே ஏப்ரல் 1 தான் என்பதை மறக்கக்கூடாது. காரணம் 1935 ஏப்ரல் 1 ஆம் தேதி இந்திய ரிசர்வ் வங்கி தொடங்கப்பட்டது. 2004 இல் கூகுளின் மெயில் சேவை தொடங்கப்பட்டது என நல்ல விடயங்களின் தொடக்கம் நாள் ஏப்ரல்-1 தான் என்பது நினைவிருக்கலாம். இன்னொன்று வசந்த காலத்தின் வருகையை அறிவிக்கும் நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த்

## வாழ்க்கை வரலாறு

94

...முதலாளியம்மா விஜய சாந்தியை ரஜினி மணந்து கொண்டாலும், வழக்கம்போல தொழிலாளருக்கான சீருடை அணிந்து, வேலையை தொடருகிறார். இதனால் தொழிலாளர்களின் ஆதரவு அவருக்கு கூடுகிறது.

இதை உணர்ந்துகொண்ட விஜயசாந்தி, ரஜினியின் செல்வாக்கை தகர்க்கும் நோக்கத்தில் தொழிற்சாலையின் பழைய பொறுப்பாளர்களை நீக்கிவிட்டு தனக்கு விசுவாசமான புதியவர்களை நியமிக்கிறார்.

இதனால் தொழிற்சாலையில் போராட்டம் வெடிக்கிறது. காலவரையற்ற வேலை நிறுத்தம் தொடங்குகிறது.

இந்த வேலை நிறுத்தத்தை பொறுப்பேற்று நடத்துபவர ரஜினி என்பதை அறியும் விஜயசாந்தி, ஆத்திரம் மேலிட தொழிற்சாலையை மூடுகிறார். தனது தந்தையின் புத்திமதியையும் ஏற்க மறுக்கிறார்.

நீண்டநாள் ஸ்டிரைக்கில் இருக்கும் இந்த தொழிற்சாலையை அரசாங்கம் தனது பொறுப்பில் எடுக்க முடிபு செய்கிறது. இது தெரிந்த விசு, தொழிலாளர் பிரச்சினையைச் சரி செய்து தொழிற்சாலையைத் திறக்க முடிபு செய்கிறார்.



ரஜினி-விஜய்சாந்தி "மன்னன்"

இந்த முடிபு தொழிலாளர்களுக்கு வெற்றியாக அமைந்து விடவே, எரிமலையாகிறார் விஜயசாந்தி.

தனது கணவரின் வெற்றியை தனக்கு நேர்ந்த அவமானமாக கருதியவர் தனது பங்களாவில் இருக்கும் அத்தனை பொருட்களையும் அடித்து நொறுக்குகிறார்.

இப்போது தனது மனைவியை சந்திக்கும் ரஜினி, புத்திமதி சொல்கிறார்.

"வீண் பிடிவாதம் வாழ்க்கையின் சந்தோஷ ஆணிவேரை தகர்த்துவிடும்" என்பதை புரிய வைக்கிறார்.

விஜயசாந்தியின் அறிவுக்கண் திறக்க, கணவரின் உயர்ந்த உள்ளம் பிடிபடுகிறது.

தன்னை மாற்றிக்கொண்டு மன்னனுக்கேற்ற மகாராணியாகிறார்.

பி.வாசு

கன்னடத்தில் வெற்றி கண்ட "அனுராக அரளிது" என்ற படத்தின் ரீமேக்தான் "மன்னன்" வசனம் எழுதி இயக்கியவர் பி.வாசு.

1992 பொங்கலுக்கு வெளிவந்த இப்படம் 200 நாட்கள் ஓடி வெற்றி கண்டது.

இந்தப்படத்தில், ரஜினியை ஒருதலையாக காதலிக்கும் பாத்திரத்தில் குஷ்பு நடித்தார்.

வாலி, கங்கை அமரன் எழுதிய பாடல்களுக்கு இசை: இளையராஜா.

'அம்மா என்றழைக்காத உயிரில்லையே' என்ற பாடலை ரஜனிக்காக உருக்கமாகப் பாடியிருந்தார் கே.ஜே.ஜேசுதாஸ்.

ரஜினி - விஜயசாந்தியின் முதலிரவுப் பாடலாக இடம்பெற்ற 'அடிக்குது குளிரு' பாடலில் வசனப் பகுதியை மட்டும் ரஜினி பேசியிருந்தார்.

மற்றும் 'கும்தலக்கடி கும்தலக்கடி' பாட்டு, 'சண்டிராணியே நீ எனக்கு கப்பம் கட்டு', 'ராஜாதி ராஜா உன் மந்திரங்கள்' போன்ற பாடல்களிலும் இளையராஜாவின் கொடி பறந்தது.

படத்தில் ஒரே ஒரு காட்சியில் வந்து போவார் பிரபு. படத்தின் தயாரிப்பாளர் இவரே.

படம் முழுக்க கலகலப்பாக வந்த ரஜினி, கவுண்டமணியுடன் சேர்ந்து காமெடியிலும் தூள் கிளப்பினார்.

இந்தப்படம் பிறகு 'கரான மொகுடு' என்ற பெயரில் தெலுங்கிலும், 'வாட்லா' என்ற பெயரில் இந்தியிலும் தயாரிக்கப் பட்டது.

(தொடரும்)





# கருவாச்சி காவியம்

## வைரமுத்து- 105

...மூஞ்சிக்கு முன்னால பறக்கிற ஈயோட மல்லுக் கட்டித் தலையத் தலைய ஆட்டிக்கிட்டு இவங்க ரெண்டு பேரையும் தொடுத்து வருது பூலித்தேவன்.

பாதையில கெடந்த கருவேல முள்ளு ஒண்ணு போயிக்கிட்டிருந்த கருவாச்சியப்போட்டுப் பாத்துருச்சு. முள்ளுத்தச்ச கால மேல தூக்கிக் கட்டுமேல இருந்த கையக் கீழ எறக்கி தச்ச முள்ள அவ எடுக்கவும் வாரேன்னு ஒரு பாதி முள்ளு வெளிய வந்திருச்சு; போறேன்னு ஒரு பாதி உள்ள போயிருச்சு.

அதுக்கே கலங்கிப்போனா கனகாம்பரம்: அய்யய்யோ முள்ளா?

பொழப்பே முள்ளுக்குள்ள கெடக்கு. இதுல உள்ளங்கால்ல முள்ளுத்தச்சா உசுரா போயிரும்?

முறிஞ்ச முள்ளத் தூக்கி எறிஞ்சா கருவாச்சி.

நீயாச்சும் முள்ளுக்கு வாக்கப் பட்டு முறிச்சுப் போட்டுட்ட... முள்ளோடதான என் பொழப்பே போய்க்கிட்டிருக்கு.

இப்ப என்ன சொல்றான் ஓம் புருசன்?

கட்னா மச்சினிச்சியக் கட்டுவேன்.... இல்லாட்டிக் காவி கட்டுவேங்கிறாரு.

மச்சினிச்சிக்கும் பிள்ள பெறக்கலேன்னு வச்சுக்க... காவிதான் கட்டியாகணும் கடைசியில. மூணு வருசமா ஒன்னிய வாமாவெட்டியாவே விட்டுட்டான்பாரு, பாறாங்கல்லுக்குப் பெறந்த பய. அவன் ஒன்னையும் நெனைக்கல;



சாகப்போற நாளையில ஒங்கப்பனையும் நெனைக்கலையே. அந்த ஆளு எங்க மூணு பேருமேலயும் ஆசை இல்ல கருவாச்சி; ஒரே நோக்கம் மோதிரத்து மேலதான்.

இதென்னடி கூத்தா இருக்கு. மோதிரமா பிள்ள பெறப்போகுது முழுகாம இருந்து? எனக்கு எங்க ஆத்தாள நெனச்சாலும் கண்ணீர் வருது. ஒங்கப்பன நெனச்சாலும் கண்ணீர் வருது. ஒங்களக் கரைசேப்பாரோ இல்ல கரை சேந்துருவாரோ தெரியலையே. ஒண்ணா மண்ணாக் கெடந்து ஒண்ணா மண்ணா வளந்த நம்ம ரெண்டு பேரு பொழப்பும் இப்படி ஆகிப்போச்சே! எனக்கு அப்பப்ப ஒரு ஏக்கம் வரும் கனகு.

என்னா ஏக்கம்?

பொம்பளப்பிள்ளைக வயசு பத்துப் பன்னண்டோட நின்டுபோகக் கூடாதா? அந்த ஓடை மண்ணு, நெலாவெளிச்சம், கிளித்தட்டு வெளையாட்டு, அவிச்ச மொச்ச, அச்சு வெல்லம், ஆத்தா கிட்ட ஒரு அடி, அப்பன் கிட்ட ஒரு வசவு, தாத்தன்பாட்டி மடியில பொதைஞ்சு ஆத்தா அடிச்சுப்புட்டான்னு அழுகுற சோகம், வெவரமில்லாத மனசு; வெள்ளிந்தி வயசு, அது அப்படியே இருந்திருக்கப்படாதா? பெரிய மனுசியாகாமலே கெழவியாகி, போதும் பொழப்புங்கிறப்பப் போய்ச் சேந்திரக்கூடாதா? (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கதிரைவேற்பிள்ளை பெருமகனாரின் 108 ஆவது குருபூசை தினம் இன்று

"செந்தமிழ் அணங்கின் சிந்தையில் என்றும் தங்கும் தமிழொளித் துங்கவன்" எனப் போற்றப்படுகின்றவரும்,

தமிழ் நாட்டில் சைவமும் தமிழும் வளர்த்துப் புகழீட்டியவருமான மேலைப் புலோலி சதாவதானம் கதிரைவேற்பிளளை பெருமகனார் பெருமை சொல்லுந்தரத்தன்று. நாவலர் அவர்களுக்குப் பின்னர் தமிழ்மொழிக்கும் சைவத்திற்கும் அரும்பணியாற்றியவர்களில் சதாவதானியும முக்கிய பங்கினை வகித்தார். பெருமகனார் சதாவதானி அவர்கள் 1871 பிரசோற்பத்தி வருடம் மார்கழி மாதம் 3 ஆம் திகதி இலங்கைத் தீவின் வடபகுதியில் அமைந்துள்ளதும் "புலவர் ஒலி" தொடர்ச்சியாக எழுகின்றதுமான மேலைப் புலோலியிலே நாகப்பிள்ளை சிவகாமி தம்பதியரின் குழந்தையாக அவதரித்தார். பெருமகனார் தனது ஆரம்பக்கல்வியினை அயலில இருந்த சைவப்பிரகாச வித்தியாசாலையில் பெற்றதுடன் சிறுவயது தொட்டு படிப்பில் மகாவிவேகியாகவும், அதிலே தளராத விருப்பும், அளப் பெரிய ஆற்றலும் மிக்கவராக விளங்கினார். பின்பு தான் கற்ற பாடசாலையிலே ஆசிரியராகக் கடமையாற்றிய காலத்தில்தான் பெருமகனாருக்கு தாம் கற்றவை கைமண்ணளவு கூடவில்லையே என்ற ஏக்கமும் மேலும் பல நூல்களை ஐயந்திரிபுறப் பெரியார் வாய்க் கேட்டறிதல் வேண்டுமெ ன்ற தளராத விருப்பினால் தனது இருபத்திரண்டாவது அகவையில் தமிழ் நாட்டுக்குப் பிரயாணமாகினார்.

அக்காலத்திலே தான் தமிழ் நாட்டிலே தி.க. கனகசுந்தரம்பிள்ளை குன்றின் மேல் இட்ட சுடர் போல ஒளிவிட்டுப் பிரகாசித்துக் கொண்டிருந்தார். தமிழ் கற்கப் புகுவார்க்குக் கலங்கரை விளக்கம் போலிருந்த கனகசுந்தரம்பிள்ளையவர்களிடம் கதிரைவேற்பிள்ளை அண்டினார். நாளடைவில் தொல்காப்பிய சங்கவிலக்கியம் முதலான அருங்கலை நூல்களை வேறும் பல வித்துவான்களிடம் பாடங் கேட்டு விற்பன்னர் ஆனார். செந்தமிழ் இலக்கணத்தையும் சைவசித்தாந்த சாத்திரங்களையும் நுணுகியாராய்வதற்கு இன்றியமையாத வடமொழியையும் கற்று அதிலே ஆழ்ந்த புலமையெய்தினார்.

பின்னர் 1897 ஆம் ஆண்டு முதலாக ஆசிரியர் வேலை கிடைக்கப்பெற்று முதலில் வேப்பேரி உயர் நிலைப் பள்ளியிலும் பின்னர் சென்தோம் உயர்நிலைப் பள்ளியிலும் ஆசிரியராய் கடமையாற்றுவராகினார்.

இவருடைய சீரிய தொண்டினைப் பாராட்டி சென்னையில் ஒரு மாபெருங் கூட்டத்திலே ஸ்ரீலஸ்ரீ காசிவாசி செந்திநாதையர் தலைமையில் இவருக்கு "மாயாவாத துவம்ச கோளரி" என்னும் பட்டம் வழங்கப்பட்டது. அதைத் தொடர்ந்து சைவத் தமிழன்பர்கள் தமிழ் நாட்டின் பல இடங்களிலும் பேரவை கூட்டிப் பிள்ளையவர்களைக் கொண்டு பிரசங்கங்கள் செய்வித்து மேலும் பல விருதுகளும் பட்டங்களும் வழங்குவராகினர்.

சைவசித்தாந்த மகாசரபம், அத்துவிதசித்தாந்த மகோத்தரணர், மகா வித்துவான், நாவலர் பெருஞ்சொற்கொண்டல் என்பன போன்ற பட்டங்கள் பிள்ளையவர்களின் பெயரை மொய்த்தன. ஆரணி சமஸ்தான வித்துவானாய் இவர் அவ்விடத்தை அலங்கரித்த காலத்திலேதான் அவ்வாதீனத் தலைவர் இவருக்கு அத்துவித சித்தாந்த மகோத்தாரணர் என்னும் பட்டத்தை நல்கினார் என்பர்.

மேலும் மேலைப் புலோலி நா.கதிரைவேற்பிள்ளையவர்கள் பதிப்பித்த அகராதியே இற்றை வரை வெளிவந்த அகராதிகளுள் தலைசிறந்தது. அவர் நிரம்பிய புலமையும் புத்திக்கூர்மையும் அபூர்வஞானமும் படைத்தவர்.

அவரைப் போன்ற விவேகிகளை இக்காலத்திற் காண்பதரிது. இவர் கல்வி கற்பித்தலிலும், பிரசங்கஞ் செய்வதிலும் நூல்களை எழுதி அச்சிற் பதிப்பதிலும் இணையற்றவர். இவ்வாறு தமிழ்மொழிக்கும், சைவத் திற்கும் அரும்பெரும்பணிகள் ஆற்றிய பெருமகனார் 1907 பராபவ வருடம் பங்குனி மாதம் (தமிழ்) பதின்மூன்றாம் திகதி செவ்வாய்க்கிழமை மக நட்சத்திரங்கூடிய துவாதசித் திதியிலே அகண்டாகாரப் பொருளாஞ் சிவத்துடன் இரண்டறக் கலந்தார்.

**அம்பலவாணர் துரைசிங்கம்**

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## கறிவேப்பிலை

**Botanical Name:-** Murraya Koenigii
**Family**:-Rutaceae
**Engl:**-Curry-Leaf
**Sinh:**-Karapincha

சுமார் 20-25 அடி உயரம் வரைக்கும் வளரும் மரம். கிளை, குச்சிகள் யாவும் கருமை நிறமுடையது. கனமும் அழுத்தமுள்ள இலைகள் நீண்டு சுமார் 2-6 செ.மீ நீளமும் 1-2 செ.மீ. அகலமும் உள்ளதாய் இருக்கும். காம்பின் இருமருங்கிலும் சுமார் 10 முதல் 20 வரைக்கும் இலைகள் வரிசையாக எதிர்எதிராக அழகாக அமைந்திருக்கும். வைகாசி மாதங்களில் கொத்து கொத்தாக பூக்கும். காய் பச்சையாகவும் பழம் கருமையாகவும் இருக்கும். பல ஆண்டுகள் வரை இம்மரம் உயிர் வாழும்.

விதைகள் மூலமும் வேர்கன்றுகள் மூலமும் இலை விருத்தி செய்யலாம்.

**100 கிராம் இலையிலுள்ள சத்துக்கள்.**

புரதம்-6.1 கிராம்
கொழுப்பு-1.0 கிராம்
காபோவைதரேற்று-18.7 கிராம்
கல்சியம்-830 மி.கிராம்
பொசுபரசு-57 மில்லிகிராம்
இரும்பு-7.0 மில்லிகிராம்
உயிர்ச்சத்து C- 4.0மில்லிகிராம
கரோட்டின் 7560 மைக்ரோ கிராம
தயமின் 80 மைக்ரோகிராம்
ரைபோபிளேவின் 120 மைக்ரோ கிராம்

**மருத்துவ பயன்கள்:**

கறிவேப்பிலை கீரையை நிழலில் உலர்த்தி அத்துடன் மிளகு, உப்பு, சீரகம், சுக்கு சேர்த்து பொடியாக்கிச் சோற்றுடன் சேர்த்து கொஞ்சம் நெய் பிசறி உண்ண பசியின்மை, வயிற் றுப்பொருமல், மலக்கட்டு, சமிபாடின்மை, வயிற்றில் மந்தம் முதலியன குணமாகும்.

கறிவேப்பிலை கீரையுடன் சுட்ட புளி, வறுத்த உப்பு, வறுத்த மிளகாய் ஆகியவைகளை சேர்த்து துவையல் செய்து உணவுடன் உள்ளெடுக்க ருசியின்மை, பித்த வாந்தி, வயிற்றோட்டம் குணமாகும்.



இஞ்சி, கொத்தமல்லி, கறிவேப்பிலை இம்மூன்றையும் ஜீரண உறுப்புக்களின் நண்பன் எனக் கூறலாம். உதாரணமாக கறிவேப்பிலை 3 கிராம், தோல் நீக்கிய இஞ்சி 3 கிராம் இரண்டையும் நன்றாக அரைத்து ஒரு லீற்றர் மோரில் கலக்கி சாப்பிட பசி அதிகரிக்கும். பலவீனம் குறையும். ஈர்ப்புத்தன்மை (Concentration) அதிகரிக்கும்.

கறிவேப்பிலைகளை நிழலில் உலர்த்தி பொடித்து அரித்து 2கிராம் அளவு 5கிராம் வெண்ணெயுடன் கலந்து காலை,மாலை சாப்பிட சுவை நரம்புகள் தூண்டப்பட்டு பசி அதிகரிக்கும். உணவு சரியான முறையில் உடலில் சேர்த்துக் கொள்ள வழிவகுக்கும்.

"கறிவேப்பிலையோ வேப்பிலை காய்கறிக்கெல்லாம் தாய்ப்பிள்ளை"

எனும் பழமொழி கறிவேப்பிலை மரமும் நன்றாக உழைக்கும் வலுப்பெற்றது. அதாவது உழவுக் கருவிகள் செய்ய இம்மரத்தை பயன்படுத்துகிறார்கள். அதாவது முன்னைய காலங்களில் விவசாயத்தில் கூட இயற்கை முறைகள் பயன்படுத்தி வந்தமையை விளம்பி நிற்கிறது.

கறிவேப்பிலைகளை சேகரித்து நிழலில் உலர்த்தி பொடித்து அரித்து 2கிராம் அளவு வெந்நீருடன் காலை,மாலை உட்கொள்ள நீரிழிவு குறையும்.

கறிவேப்பிலை, வெள்ளைக்கரிசாலை,மருதோன்றியிலை இவைகளை ஒரேயளவாக எடுத்து நன்றாக நிழலில் உலர்த்தி தனித்தனியாக பொடித்து பின்பு மூன்றையும் ஒன்றாகக் கலந்து மீண்டும் இடித்து, அரித்து போத்தலில் சேகரித்து வைத்துக்கொண்டு இளநரை, செம்பட்டைமயிர் உள்ளவர்கள் செயற்கை சாயப்பொடிக்கு பதிலாக இயற்கையான சாயப்பொடிக்காக தேவையானளவு பொடியை எடுத்து வெந்நீரில் கலந்து அரைமணி நேரம் ஊறவைத்து நன்றாகப்பூசி ஒரு மணிநேரம் ஊறவிட்டு தலை முழுகி வர இளநரை, செம்பட்டை நீங்கும்.

முகத்தில் ஏற்படும் அம்மைவடுமாற கறிவேப்பிலை ஒரு கைப்பிடியளவு, கசகசா 15 கிராம், கஸ்தூரிமஞ்சள் 8கிராம் இவைகளை அம்மியில் வைத்து மைபோல அரைத்து முகத்தில் கனமாகப் பூசி 15நிமிடங்கள் ஊறவைத்து பிறகு இளஞ்சூட்டு நீர் கொண்டு கழுவி விட வேண்டும். இவ்விதம் இவ்விதம்காலை,மாலை செய்து வந்தால் அம்மைவடு படிப்படியாக மறையும்.

கறிவேப்பிலையை மைபோல அரைத்து 5கிராம் அளவு காலை, மாலை பாலுடன் அருந்திவர தலைமயிர் உதிர்தல் நின்று தலைமயிர் நன்கு வளரும்.

கறிவேப்பிலை, சுக்கு, வெந்தயம், மஞ்சள் ஆகியவற்றை நன்றாக வறுத்து பொடித்து, அரித்து தினமும் காலை,மாலை இருவேளையும் உணவிற்கு பின் 5கிராம் அளவு சாப்பிட்டால் மூட்டுவலி, வாத நோய்கள் படிப்படியாக குணமாகும்.

கறிவேப்பிலை 250கிராம் உலர்த்தி பொடித்து அதில் பெருங்காயத் தூள் 25கிராம் சேர்த்து தினமும் உணவிற்கு பின்பு 2கிராம் அளவு சாப்பிட்டுவந்தால் வாய்வுக்கோளாறுகள் நீங்கும்.

கறிவேப்பிலை அரைத்து சாறு எடுத்து,தேங்காய் எண்ணெயில் கலந்து தலைக்குத் தேய்த்து வந்தால் நரைமுடி மறையும்.

டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரும்பான்மை பலமில்லாதவரை சபாநாயகர் அறிவிக்க முடியாது!

### எதிர்க்கட்சித் தலைவர் பதவி குறித்து தினேஷ் குணவர்த்தன கருத்து

**(கொழும்பு) பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை பெறுவதற்கான பெரும்பான்மை பலம் எங்களிடமே இருக்கின்றது. எனவே பெரும்பான்மை பலமில்லாத ஒருவரை எதிர்க் கட்சித் தலைவராக சபாநாயகர் அறிவிக்க முடியாது என்று மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவரும முன்னாள் அமைச்சருமான தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.**

எதிர்க்கட்சித் தலைவர் விவகாரம் குறித்து குறிப்பிடு கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் இணைந்து தேசிய அரசாங்கத்தை அமைத்துள்ள நிலையில், எதிர்க்கட்சி தலைவராக உள்ள நிமால் சிறிபால டி.சில்வா அந்த பதவியை வகிக்க முடியாது என்று கூறப்பட்டு வருகின்றது.

இதேவேளை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராக மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவர் தினேஷ் குணவர்த்தனவை நியமிக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டு வருகின்றது.

மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான தினேஷ குணவர்த்தன இந்த விடயம் குறித்து மேலும் தெரிவிக்கையில்,

பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் யார் என்ற கேள்வி தற்போது மிகப் பெரிய விவகாரமாக எழுந்துள்ளது.

இந்நிலையில் என்னை எதிர்க்கட்சித் தலைவராக்கும்படி சிலர் கோரிக்கை விடுக்கின்றனர். என்னை எதிர்க்கட்சித் தலைவராக சபாநாயகர் அறிவித்தால் அதற்கான செயற்பாடுகளை மேற்கொள்ளவும் அந்த வகிபாகத்தை வகிக்கவும் நான் தயாராக இருக்கின்றேன்.

இதேவேளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனை எதிர்க்கட்சித் தலைவராக அறிவிக்க முடியாது. காரணம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேசிய நிறைவேற்று சபையில் அங்கம் வகிக்கின்றது. எனவே கூட்டமைப்பின் தலைவர் எதிர்க்கட்சித் தலைவராக வர முடியாது.

மேலும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தேசிய அரசாங்கத்தில் பங்கெடுத்திருந்தாலும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஏனைய பங்காளிக் கட்சிகள் எதுவும் இணைந்து கொள்ளவில்லை.

எனவே எமக்கே பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை பெறுவதற்கான பெரும்பான்மை பலம உள்ளது.

எனவே எதிர்வரும் ஏழாம் திகதி சபாநாயகர் வெளியிடும் அறிவிப்புக்காக நாங்கள் காத்திருக்கின்றோம். பெரும்பான்மை பலமில்லாத ஒருவரை எதிர்க்கட்சித் தலைவராக சபாநாயகர் அறிவிக்க முடியாது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# கலைஞர்களுக்கு காணி வழங்க மைத்திரி அரசாங்கம் நடவடிக்கை

கலைஞர்களுக்கு காணித் துண்டுகளை வழங்க மைத்திரி அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக சமூக சேவைகள், நலன்புரி மற்றும் கால்நடை வள பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்துள்ளார்.

வீடமைப்பு மற்றும் சமுர்த்தி அமைச்சர் சஜித் பிரேமதாசவுடன் இணைந்து இந்த திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இதன் முதற்கட்டமாக பனாகொடை இம்புல்கொட பகுதியில் அமைந்துள்ள காணியொன்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

கொடகம மற்றும் பனாகொடை ஊடாக இந்தப் பகுதிக்கு செல்ல முடியும் என தெரிவிக்கப்படுகிறது. இந்த இடத்திலிருந்து கொழும்பிற்கு பயணம் செய்ய ஒரு மணித்தியாலம் தேவைப்படும்.

காணித்துண்டுகள் தேவைப்படும் கலைஞர்கள் தங்களது விபரங்கள் அடங்கிய விண்ணப்பம் ஒன்றை சமூக சேவைகள் மற்றும் கால் நடைவள அமைச்சுக்கு அனுப்பி வைக்க வேண்டுமென பிரதி அமைச்சர் மேலும் கோரிக்கை விடுத்துள்ளார். (இ-5)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி | சுன்னாகம் | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 30 | 30 | 40 | 40 | 20-40 | 25 |
| உருளைக்கிழங்கு | 100 | 90 | 90 | 80 | 90 | 90 |
| பச்சைமிளகாய் | 40 | 40 | 60 | 80 | 50 | 40 |
| தக்காளி | 80 | 50 | 60 | 80 | 40 | 50 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 50 | 60 | 40 | 40 |
| கோவா | 80 | 20 | 40 | 50 | 30 | 40 |
| கரட் | 200 | 80 | 100 | 120 | 100-120 | 100 |
| பூசணி | 50 | 40 | 50 | 50 | 40 | 50 |
| புடோல் | 50 | 40 | 40 | 40 | 40 | 40 |
| வாழைக்காய் | 50 | 50 | 60 | 60 | 40 | 50 |
| சின்ன வெங்காயம் | 100 | 60 | 70 | 80 | 60 | 60 |
| பெரிய வெங்காயம் | 100 | 80 | 80 | 80 | 90-100 | 90 |
| பாகற்காய் | 120 | 80 | 90 | 80 | 80 | 80 |
| வெண்டிக்காய் | 60 | 50 | 40 | 60 | 30 | 50 |
| கருணைக் கிழங்கு | — | 60 | 60 | 80 | 50 | 80 |
| பயற்றங்காய் | 60 | 40 | 60 | 40 | 40 | 40 |
| லீக்ஸ் | 200 | 120 | 190 | 180 | 120 | 140 |
| பீற்றூட் | 60 | 40 | 80 | 60 | 60 | 40 |
| கறிமிளகாய் | 200 | 100 | 100 | 80 | 80-100 | 100 |
| முருங்கைக்காய் | 300 | 350 | 350 | 300 | 400 | 500 |
| போஞ்சி | 200 | 80 | 70 | 100 | 100 | 100 |
| கத்தரிதம்புள்ள | 20 | 20 | 30 | 30 | — | 20 |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 20 | 20 | 30 | 25 |
| தேசிக்காய் | 80 | 100 | 80 | 50 | 60-70 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 25-60 | 50 | 60 | 50-60 | 60 | 60 |
| இராசவள்ளி | 150 | 80 | 100 | 100 | 120 | 120 |
| வெங்காயப்பூ | 100 | 120 | — | — | — | 80 |
| முள்ளங்கி | 30 | 30 | 40 | 60 | 30 | 40 |
| பொன்னாங்காணி | 30 | 20 | 20 | 40 | 30 | 30 |
| வல்லாரை | 10 | 10 | 20 | 15 | 10 | 20 |

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 328

துர்க்கா துர்க்காயினி

அன்பைக் கொடுத்து ஏமாந்து விடாதீர்கள் அன்பைப் பெற்று ஏமாற்றி விடாதீர்கள் இரண்டிற்கும் வலி அதிகம்...

சரவணன் சுகுமார்




சிந்து சிந்துஜா




துளசி துளசிகா




கஜன் கஜமுகன்




கண்ணன் ராதாரவி

பணம் உன்னிடம் இருந்தால் உனக்கு யாரையும் தெரியாது.



பணம் உன்னிடத்தில் இல்லை என்றால் உன்னை யாருக்கும் தெரியாது.

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் அரசியலுக்கு வருவாரா மகிந்த ?



மகிந்த ராஜபக்சவுக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எதிராக சுமத்தப்படும் ஊழல், மோசடிக் குற்றச்சாட்டுக்கள் நீதிமன்றில் நிரூபிக்கப்படாவிட்டால், ராஜபக்சவைவ் ஆதரிக்கும் 5.8 மில்லியன் வாக்காளர்களும் அவரை ஒரு அதிகாரத்துவ ஆட்சியாளராக நோக்குவதை விட, ஒரு அரசியல் தியாகியாகவே கருதுவார்கள்.

**இவ்வாறு, 'சிலோன் ருடே' நாளிதழில், இந்திய ஆய்வாளரான 'கேணல் ஆர்.ஹரிகரன்' எழுதியுள்ள கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.**

ஜனவரி 2015 இல் இடம்பெற்ற இலங்கை ஜனாதிபதித் தேர்தலில் தோற்கடிக்கப்பட்ட இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, பிரதமராக வருவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்கிறாரா?

இலங்கையில் தற்போது செயற்படும் தேசிய ஐக்கிய அரசாங்கத்தின் நகர்வுகளும், ராஜபக்சவுக்கு ஆதரவான அரசியற் சக்திகளின் செயற்பாடுகளையும் விரிவாக நோக்க வேண்டும். இலங்கையின் அரசியற் சூழ்ச்சிகளின் தலைவராக விளங்கும் ராஜபக்ச மீண்டும் பிரதமராகலாம் என்கின்ற சந்தேகம் ஊடகங்கள் மற்றும் அரசியல் வட்டாரங்களின் ஊகமாகக் காணப்படுகின்றது.

மகிந்த ராஜபக்ச பத்து நாட்களுக்கு முன்னர் 'தி ஹிந்து' ஊடகத்திற்கு வழங்கிய நேர்காணலில்கூட தான் மீண்டும் அரசியலுக்கு உள்நுழையவுள்ளதாக நேரிடையாகக் கூறவில்லை. இதற்குப் பதிலாகத் தனது குடும்ப உறுப்பினர்கள் மற்றும் கூட்டாளிகளுக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள ஊழல மோசடி விசாரணை தொடர்பாக முறைப்பாடு செய்ததன் மூலம் தன்னை ஒரு 'தியாகியாகச்' சித்தரிப்பதற்கு இவர் முயற்சி செய்துள்ளார்.

'நான் இந்த அரசாங்கத்திற்கு எனது ஆதரவை வழங்குகிறேன். ஆனால் அவர்கள் எம் மீது மோசடிக் குற்றச்சாட்டை முன்வைத்து எம்மைச் சிறையிலடைக்க விரும்புகிறார்கள். எங்களுடைய கடவுச்சீட்டுக்களை எவ்வித சாட்சியமுமின்றி எடுத்துள்ளனர். இவ்வாறான ஒரு சூழலில் நான் எவ்வாறு அரசியலிலிருந்து ஓய்வுபெற முடியும்? நான் ஓய்வுபெறப் போகிறேன் என ஒருபோதும் கூறவில்லை. தற்போது நான் ஓய்வெடுக்கிறேன்' என ராஜபக்ச நேர்காணலில் குறிப்பிட்டுள்ளார்.

ஆகவே ஏப்ரல் 2015ல் இலங்கையில் இடம்பெறவுள்ள பொதுத தேர்தலில் ராஜபக்ச போட்டியிட விரும்புகிறார் என்பது உறுதியாகிறது.

நிச்சயமாக, ராஜபக்ச மற்றும் அவரது உறவினர்களுக்கு எதிராக நாள்தோறும் ஊழல் மோசடிக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்ற நிலையில், முன்னாள் ஜனாதிபதி தனது தீர்மானத்தை மிக விரைவாக எடுக்க வேண்டியுள்ளார். ராஜபக்சவாலும் அவரது உறவினர்களாலும் மேற்கொள்ளப்பட்ட ஊழல்கள் மற்றும் அதிகார துஷ்பிரயோகம் போன்றன இவர்களின் பெயருக்குக் களங்கத்தை ஏற்படுத்தியுள்ளன என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

ஆனால் இக்குற்றச்சாட்டுக்கள் நீதிமன்றில் நிரூபிக்கப்படாவிட்டால், ராஜபக்சவை ஆதரிக்கும் 5.8 மில்லியன் வாக்காளர்களும் ராஜபக்சவை ஒரு அதிகாரத்துவ ஆட்சியாளராக நோக்குவதை விட இவரைத் தொடர்ந்தும் ஒரு அரசியல் தியாகியாகவே கருதுவார்கள்.

மக்களின் மனநிலையைத் தனக்குச் சாதகமாகத் தக்கவைத்துக் கொள்வதில் ராஜபக்ச மிகவும் எச்சரிக்கையுடன் செயற்படுவது போல் தெரிகிறது. அரசியல் போட்டியல் மீண்டும் குதிப்பதற்கு முன்னர் சிங்கள மக்களின் ஆதரவை மேலும் பலப்படுத்திக் கொள்வதற்கான நகர்வுகளிலும் ராஜபக்ச ஈடுபடுகிறார்.

இவரது ஆதரவாளர்களாலும் தேசிய சுதந்திர முன்னணி போன்ற சிறிய கட்சிகளாலும் ஒழுங்கு செய்யப்பட்ட இரண்டு ஆர்ப்பாட்டப் பேரணிகள் மிகவும் சிறப்பாக நடந்தேறின. இப்பேரணியில் கலந்து கொண்ட ஆர்ப்பாட்டக்காரர்கள் ராஜபக்ச பொதுத்தேர்தலில் போட்டியிட்டு மீண்டும் ஆட்சிப் பீடத்தில் அமரவேண்டும் என உந்துதலளிப்பதாகக் காணப்பட்டது.

ராஜபக்ச மீண்டும் ஆட்சிக்கு வரவேண்டும் என சிறிய கட்சிகள் விரும்புவதில் தனிப்பட்ட நலன் உள்ளடங்கியுள்ளது. இவர மீண்டும் ஆட்சியைப் பிடிக்காவிட்டால் தேசிய சுதந்திர முன்னணி, தொழிற்கட்சி மற்றும் மகாஜன எக்சத் பெரமுன போன்ற கட்சிகள் அரசியலிலிருந்து விலக வேண்டிய நிலையேற்படலாம். ஏனெனில் இவை அனைத்தும் மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக்காலத்தில் பல்வேறு நலன்களைப் பெற்றிருந்தன.

ராஜபக்சவோ அல்லது இவரால் பல ஆண்டுகளாக வளர்க்கப்பட்ட சிறிலங்கா சுதந்திரக் கட்சியோ ஆர்ப்பாட்டப் பேரணிகளில் பங்கெடுக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். இவ்விரு ஆர்ப்பாட்டப் பேரணிகளும் தேசிய சுதந்திர முன்னணியின் த்லைவர் விமல் வீரவன்சவின் தலைமையிலேயே மேற்கொள்ளப்பட்டது.

பொய்யான காரணத்தை முன்வைத்து விமல் வீரவன்சவின் மனைவியார் இராஜதந்திர கடவுசசீட்டைப் பெற்றுக் கொண்டதாக குற்றம் சாட்டப்பட்டுள்ள நிலையில் தற்போதைய இலங்கை அரசாங்கத்தைத் தனிப்பட்ட ரீதியில் விமல் வீரவன்ச எதிர்த்து நிற்கிறார். இதனால் இவர் ராஜபக்சவுடன் இணைந்து ஆர்ப்பாட்டங்களை முன்னெடுப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டார்.

ராஜபக்ச மீண்டும் ஆட்சிக்கு வராவிட்டால் மூன்று முக்கிய விடயங்களைத் தாம் இழந்து விடுவோமோ என சிங்கள மக்களும் அரசியற் கட்சிகள் சிலவும் கருதுகின்றன.

ராஜபக்ச இல்லாதவிடத்து அரசியல் நிலைத்தன்மை பாதிக்கப்படும் எனவும், நாட்டில் தொழில வாய்ப்பு மற்றும் அபிவிருத்தி வாய்ப்புக்களை வழங்கும் சீனாவின் பாரிய திட்டங்கள் தடைப்படலாம் எனவும் புலிகள் மீண்டும் தலையெடுக்கலாம் எனவும் சிங்கள மக்களும் அரசியற் கட்சிகள் சிலவும் அச்சம் கொள்கின்றன.

இப்பரப்புரையில் இடதுசாரிக் கட்சிகளின் பங்களிப்பானது சிறுபான்மையினருக்கு எதிரான நடவடிக்கைகளை தடுப்பதற்கான ஒரு பயனுள்ள விடயமாகக் காணப்படலாம்.

19ஆவது திருத்தச் சட்டத்தின் முக்கியத்துவத்தை இலங்கை அரசாங்கம் அரசியல் யாப்பில் அறிமுகப்படுத்துவது தொடர்பாக ஆராய்ந்தபோது இதில் நாடாளுமன்றின் பிரதான எதிர்க்கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் கலந்துகொண்டது. 19ஆவது திருத்தச் சட்டத்தை நாடாளுமன்றில் முன்வைப்பதன் மூலம் இதற்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஆதரவைப் பெற்றுக் கொள்வதற்கான சிறிசேனவின் தந்திரோபாய நகர்வாக இது இருக்கலாம்.

தற்போது சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு சிறிசேன தலைமை தாங்குகின்ற போதிலும், கட்சிக்குள் உள்ள ராஜபக்சவின் ஆதரவாளர்களின் நகர்வுகளை முறியடித்து ராஜபக்சவை மீண்டும் ஆட்சிக்குக் கொண்டு வருவதற்கான முயற்சிகளைத் தடைப்படுத்தி ராஜபக்சவுக்கும் அவரது உறவினர்களுக்கும் எதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் தண்டனை வழங்குவதை நோக்காகக் கொண்டிருக்கலாம்.

19ஆவது திருத்தச் சட்டத்தை நாடாளுமன்றின் ஊடாக அரசியல் யாப்பில் இணைப்பதற்கான முயற்சிகளை தேசிய ஐக்கிய அரசாங்கம் விரைந்து முன்னெடுப்பதானது ராஜபக்ச மீண்டும் ஆட்சிக்கு வருவதைத் தடுப்பதற்கான நகர்வாகும். ராஜபக்சவுக்கு எதிராக சிறிசேனவால் முன்வைக்கப்பட்ட தேர்தல் பரப்புரையின் போது நிறைவேற்று அதிகார முறைமை நீக்கப்படும் என வாக்குறுதி வழங்கப்பட்டது.

ஆனால் தற்போது தேர்தல் ஆணையம், சுயாதீன காவற்துறை ஆணையம், பொதுச் சேவைகள் ஆணையம், அரசியல் சீர்திருத்தப் பேரவை போன்ற ஆணைக்குழுக்களை மீளவும் நிறுவுவதன் மூலம் நிறைவேற்று ஜனாதிபதி கொண்டுள்ள முக்கிய அதிகாரங்களைக் குறைப்பதற்காகவே 19 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பாக ஆராயப்படுகிறது.

நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதற்கான ஒப்புதலை நாடாளுமன்றம் வழங்கியிருந்தாலும் கூட, இந்த விடயத்தில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன.

தேசிய ஐக்கிய அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் வலதுசாரி ஜாதிக ஹெல உறுமய நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதை எதிர்த்து நிற்கிறது.

எனினும், இலங்கையில் நாடாளுமன்றத் தேர்தல் இடம்பெற்ற பின்னர் அமைக்கப்படும் புதிய நாடாளுமன்றின் கீழ் மேலும் முழுமையான அரசியல் சீர்திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறியதாக வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர கொழும்பிலிருந்து வெளிவரும் 'டெய்லி நியூஸ்' ஊடகத்தில் தெரிவித்துள்ளார்.

ஆகவே ராஜபக்ச அரசியற் களத்தில் இறங்குவதற்கு முன்னர் நன்றாக 'ஓய்வெடுக்கின்ற போதிலும்' இவர் சிறிதளவு, ஆனால் குறிப்பிடத்தக்க வெற்றியைப் பெற்றுள்ளது போலவே தெரிகிறது.

**-ஹரிகரன்-**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய வளங்கள் தாரைவார்ப்பு; நாட்டின் பாதுகாப்பு கேள்விக்குறி

## நாமல் எம்.பி. குற்றச்சாட்டு



அம்பாந்தோட்டை சிரிபோபுர பிரதேசத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களுடனான கலந்துரையாடலிலேயே இவர் இவ்வாறு தெரிவித்தார்.

(கொழும்பு)

**நாட்டின் பாதுகாப்பு கேள்விக்குறியாகியுள்ள இன்றைய சூழலில் வளமிக்க அபிவிருத்திகள் நிறுத்தப்பட்டுள்ளதுடன் கடல் வளத்தையும் இந்த அரசு தாரை வார்த்து விட்டதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மகனும் பாராளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ குற்றம் சாட்டியுள்ளார்.**

நாமல் ராஜபக்ஷ எம்.பி. மேலும் தெரிவித்ததாவது, தற்பொழுதுள்ள அரசாங்கம் இதனைவிடவும் பொறுப்பாக செயற்படுமென தான் நம்புவதோடு கடந்த ஆட்சியின் போது நாம் எவ்வித அச்சமுமின்றி வாழ்ந்து வந்தோம். பல்வேறு முறைப்பாடுகள் எமக்கெதிராக முன்வைக்கப்பட்டிருந்தாலும் இவற்றின் உண்மை நிலையினை இந்த நாட்டு மக்கள் அறிவார்கள். ஜனாதிபதித் தேர்தலின போது அம்பாந்தோட்டை மாவட்ட மக்கள் முன்னாள் ஜனாதிபதிக்கு கூடுதல் வாக்குகளை அளித்தார்கள்.

நாம் இம்மாவட்டத்தில் கடந்த காலங்களில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்து வந்தோம் இன்று அவை நிறுத்தப்பட்டுள்ளது. இவை பற்றி மக்கள் பாரிய எதிர்பார்ப்புகளுடன் இருந்தார்கள்.

புதிய வேலைத்திட்டத்தின் கீழ் எல்லாவற்றையும் பகிர்ந்து விட்டார்கள். வடக்கு கடல் பிரதேசத்தையும் இந்தியாவுடன் பகிர்ந்தே மீன்பிடிக்கிறார்கள். அங்குள்ளவர்களுக்கு இங்கு வரமுடியும். ஆனால் இங்குள்ளவர்கள் அங்கு செல்ல முடியாது எனவும் மேலும் தெரிவித்தார். (இ-5)

# மத்திய மாகாணசபை தவிசாளருக்கு இரண்டரை வருடச் சிறைத்தண்டனை

தேர்தல் வன்முறை, வாக்கு மோசடி, தேர்தல் பணியாளர்களுக்கு இடையூறு விளைவித்தமை மற்றும் ஆயுதத்தைக் காட்டி அச்சுறுத்தல் விடுத்தமை ஆகிய குற்றச்சாட்டுக்களில் குற்றவாளியாகக் காணப்பட்டுள்ள மத்திய மாகாண சபை தவிசாளர் மஹிந்த அபயக் கோனுக்கு கண்டி மேல் நீதிமன்றம் இரண்டரை வருட சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.

இவர் மீது சுமத்தப்பட்டிருந்த மூன்று குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டிருந்ததன் பேரில் ஆறு மாத கால சிறைத் தண்டனையும் ஏனைய இரு குற்றச்சாட்டுக்களுக்கும் தலா ஒருவருடம் என்ற ரீதியில் இரண்டரை வருடங்கள் சிறைத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

2001 ஆம் ஆண்டு இடம்பெற்ற பாராளுமன்ற தேர்தல், பிரசார காலத்தின் போது தேர்தல் வாக்களிப்பு நிலைய பணியாளர்களை அச்சுறுத்தியமை, வாக்காளர்களுக்கு இடையூறு விளைவித்தமை, சட்டவிரோதமாக ஆயுதம் வைத்திருந்தமை மற்றும் சட்ட விரோத ஒன்று கூடல்களை மேற்கொண்டமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்கள் இவர் மீது சுமத்தப்பட்டு கண்டி மேல் நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டு விசாரணைகள் இடம்பெற்று வந்தன.

கலஹா பொலிஸாரால் தொடரப்பட்ட மேற்படி வழக்கில் மஹிந்த அபயக்கோன் உட்பட 12பேர் பிரதிவாதிகளாக பெயர் குறிப்பிடப்பட்டிருந்தனர். இவர்களில் 11பேர் வழக்குகளிலிருந்து விடுதலை செய்யப்பட்ட நிலையில் மஹிந்த அபயக்கோன் மீது தொடர்ந்தும் விசாரணைகள் இடம்பெற்று வந்தன.

இந்நிலையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இவ்வழக்கின் விசாரணைகள் கண்டி மேல் நீதிமன்ற நீதிபதி மணிலால் வைத்திய திலக்க முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போது அபயக்கோன் மீதான குற்றம் நிரூபிக்கப்பட்டு மேற்கண்டவாறு தீர்ப்பளிக்கப்பட்டது. இதேவேளை அபயக்கோன் மீது மேலும் பல விசாரணைகள் நிலுவையில் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (இ-5)

# விமர்சனங்கள் இருந்தபோதும் அனுகூலங்கள் கிடைத்துள்ளன

### ஜே.வி.பி. தெரிவிப்பு

தற்போதைய அரசாங்கம் தொடர்பில் மக்கள் மத்தியில் பரவலான விமர்சனங்கள் இருந்த போதும், அரசாங்கத்திடமிருந்து பொது மக்கள் வெற்றிகொண்ட சில விடயங்களும் உள்ளதாக ஜே.வி.பி தெரிவித்துள்ளது.

ஜே.வி.பி.யின் அரசியல் குழு மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்து னெத்தி நேற்று முன்தினம் இங்கிரியவில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் போதே இந்த கருத்தை வெளியிட்டார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அரசாங்கத்தின் மீது பல விமர்சனங்கள் உள்ளன. அதில் ஒரு பங்கு எங்களுக்கும் உள்ளது.

தேசிய நிறைவேற்று சபையில் நாங்கள் பங்குகொண்டதன் காரணமாக அதுபற்றியும் சிலர் விமர்சிக்கிறார்கள்.

அந்த சபையில் இணைந்து கொண்டதன் ஊடாக திருடர்களைப் பிடித்துவிட்டீர்களா, வழக்கு விசாரணைகள் நடக்குமா? உறுதியளித்த விடயங்கள் இடம்பெறுமா? தற்போது எந்த முன்னேற்றமும் இல்லையே என பலர் எங்களிடம் கேள்வி எழுப்புகிறார்கள்.

அதேவேளை. ஐக்கிய தேசிய கட்சியின் மோசடியான சில உறுப்பினர்கள் தற்போது அமைச்சுப் பதவிகளை பெற்றுள்ளனர்.

எவ்வாறாயினும், இந்த அரசாங்கத்திட மிருந்து பொது மக்கள் பெற்றுக்கொண்ட சில நன்மைகளும் உள்ளன.

முன்னர் தமது சுய கருத்துக்களை வெளியிட முடியாத நிலை இருந்தது, விருப்ப மான அரசியல் செயற்பாடுகளை மேற்கொள்ள முடியாத அச்ச நிலை காணப்பட்டது.

சொந்தமான ஆக்கங்களை வெளியிட முடியாத நிலை இருந்தது.

அரசாங்கத்தினால் அந்த நிலைமை மாறிவிட்டது என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# இன்று ஒரு தகவல்

## இருக்கும் இடம்

ஒரு குருவும் அவருடைய ஒரே ஒரு சீடனும் ஒரு காட்டுப் பகுதிக்குள்ளே போகிறார்கள். அவர்கள் ரொம்பத் தூரம் நடந்து போனார்கள். அப்படி நடந்து போனதாலே அவர்கள் களைப்பு ரொம்ப அதிகமாகி விட்டது. அப்போது குரு சொன்னாராம். கொஞ்ச நேரம் இருந்து இளைப்பாறி விட்டு பின்பு நடக்கலாம். சரி என்று இரண்டு பேரும் முடிபு செய்தார்கள். உடனே சீடர் வந்து சர்வசாதாரணமாக உட்கார்ந்து கொண்டார். ஆனால் குரு என்றால் அப்படி இல்லையே. அவர் தன்னை சுத்தப்படுத்திக் கொள்ள வேணும் என்று நினைத்து பக்கத்தில் இருக்கின்ற ஆற்றுப் பக்கம் போனாராம். அங்கே அவர் ஒரு குளியல் போட்டார். அங்கிருந்து குளித்து விட்டு அவர் வருவதற்குள்ளே அந்தச் சீடருக்கு தூக்கம் வந்து விட்டது.

ஒரு மரத்துக்கடியில் ஓர் அருமையான ஒரு நீளக்கல் இருந்தது. அதிலே அவர் படுத்துக் கொண்டார். ரொம்ப வசதியாய் இருந்தது அது. அதனால் ஆழ்ந்து தூங்கி விட்டார்.

இப்போது குரு வந்து பார்த்தார். அந்தச் சீடர் தூங்குகின்ற உயரத்துக்கு சமனாக கல்லு எதுவும் அங்கே இல்லை. கீழே சாதாரணமாக ஒரு கல்லுத்தான் இருந்தது. அதில் அப்படியே சாய்ந்து கொண்டு அவர் தூங்க ஆரம்பித்து விட்டார். இரண்டு பேரும் இப்படி தூங்கிக் கொண்டே இருந்தார்கள்.

அப்போது குரு நல்ல ஆழ்ந்த தூக்கத்தில் இருந்தார். ஆனால் சீடருக்கு கண் விழிப்பு வந்து விட்டது. முழித்துப் பார்த்தால் அவர் அட அடா.... சீடனா இருக்கிற நான் உயரமான கல்லில் சாய்ந்து தூங்குகிறேன். குரு எனக்கு கீழே இருக்கிற கல்லிலே சாய்ந்து தூங்குகிறாரே. இது ரொம்ப அபச்சாரம் இல்லையா? தப்பு செய்து விட்டோமே. குரு எனக்கு கீழே உட்காரலாமா? நான் குருவுக்கு மேலே இருக்கிற கல்லில் படுத்து தூங்கியது தப்பாய் போய்விட்டதே அப்படி என்று ரொம்ப வருத்தப்பட்டாராம். குரு எழுந்தவுடனே இதைச் சொல்லி சீடர் வருத்தப்பட்டிருக்கிறார்.

"ஐயா, நான் உயரமான இடத்தில் இருந்திட்டேன். அது ரொம்பத் தப்பு. நீங்கள் கீழே உட்கார்ந்துவிட்டீர்கள். அதை என்னால் தாங்க முடியவில்லை. நீங்கள் தான் உயர்ந்தவர். நான் உங்களை விட சாதாரணமானவன். நான் எப்படி இவ்வளவு உயரத்தில் படுத்தது நியாயமாகும்?" அப்படி என்று திரும்பத் திரும்ப சொல்லிப்புலம்ப ஆரம்பித்தாராம். அப்ப தான் குரு சொன்னாராம் இப்படிப் புலம்பாதே அதாவது இருக்கிற இடம், உயர்வு. தாழ்வு என்பது இங்கே முக்கியம் இல்லை. மனதில் நாம் எப்படி இருக்கிறோம் என்பதுதான் முக்கியம் இப்போது. நீ மேலே இருக்கின்ற கல்லில் படுத்ததனால் குருவாக ஆகிவிட்டியா என்ன? சீடன் என்கிற பவ்ய உணர்வு எல்லாம் உனக்கு இப்போதும் இருக்கிறதல்லவா? அதை நீ தெரிந்து கொள்ள வேண்டும்.

இப்ப பாரு நம்ம தலைக்கு மேலே ஒரு குரங்கு மரக்கிளையில் உட்கார்ந்திருக்கிறது. நம்ம இரண்டு பேரைவிட அந்தக் குரங்கு உயரத்தில உட்கார்ந்திருக்கிறதனால் அது ஒரு பெரிய பதவியை அடைந்து விட்டதா என்ன? குரங்கு குரங்கு தான். அதனால் மேலே படுத்தாலும் சீடனான நீ சீடன் தான். கீழே இருக்கிற கல்லில உட்கார்ந்தாலும் நான் குருதான். இந்தப் பக்குவம் வேண்டும். அதாவது இருக்கிற இடம் முக்கியமில்லை. இருக்கிற விதம் தான் முக்கியம். அதேபோல் இன்னொரு வரலாற்றுச் சம்பவம் சொல்லுவார்கள்.

ஒரு கப்பல் கடலில் போய்க்கொண்டிருக்கிறது. திடீரென்று கப்பலில் ஓர் ஓட்டை விழுந்து உள்ளே தண்ணி வர ஆரம்பித்து விட்டது. கப்டன் இதை கண்டு பிடித்து விட்டார். உடனே அவர் மக்கள் எல்லோரையும் காப்பாற்ற வேண்டும் என்று நினைத்தார். ஒரு பாதுகாப்பு படகை தயார் செய்தார். எல்லோரும் தப்பிக்க தயாராகுங்கள் என்றார். ஓட்டை வழியாக தண்ணீர் வந்து கொண்டே இருக்கின்றது பார்த்தீர்களா? திடீரென்று ஓர் அதிசயம் நிகழ்ந்தது. அந்த ஓட்டை வழியாக வருகின்ற தண்ணீர் இப்போது நின்று போய் விட்டது. என்ன காரியம் என்று யாராலையும் கண்டு பிடிக்கவே முடியவில்லை. இருந்தாலும் அவர் கப்பலை அப்படியே ஓட்டிக் கொண்டே வந்து கரைக்கு கொண்டு வந்து சேர்த்து விட்டார். சேர்த்தவுடனே தண்ணீர் வருவது ஏன் நின்று போய்ச்சென்று ஓர் ஆராய்ச்சி செய்தார். அங்கே ஓர் அதிசயம் நடந்திருக்கிறது. ஒரு பெரிய மீன் வந்து அந்த ஓட்டையை அடைத்திருக்கிறது. ஒரு சாதாரண மீன் கூட ஒரு பெரிய கப்பலில் நடக்க இருந்த ஆபத்தை இந்த இடத்தில தடுத்திருக்கிறது இல்லையா? அப்ப அந்த மீன் இருந்த இடம் முக்கியம் இல்லை. இருந்த விதம் தான் முக்கியம். அப்படி என்கிறார்கள் விபத்தில் வேற மாதிரி நடக்கிறதுண்டு

ஒருத்தர் சொன்னார் "எனக்கு நாலுசக்கர வாகன யோகம் இருக்கு யோகம் இருக்கென்று சொல்லிக்கொண்டே இருந்தார். கடைசியில் அது இப்படி ஆகும் என்று எதிர்பார்க்கவே இல்லை." என்ன ஆச்சென்றால் " ஒரு விபத்தில எனக்கு கால் முறிந்து போய் இப்ப நாலு சக்கர வாகனத்தில தான் உருட்டி உருட்டி நான் போய்க் கொண்டிருக்கிறேன் என்றார் அவர் .

*கலைமாமணி முனைவர் இளசை சுந்தரம்*

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# புதிய அரசுக்கெதிரான சுதந்திர தின சதி முயற்சியும் தொடரும் இராணுவ தலைமை மாற்றங்களும்

...பொலிஸ் மா அதிபரின் அதிகார அறிவுறுத்தல் புதிய அரசினது செயற்பரப்பு அதிகார வரம்புகள் பற்றிய அக்கறைகளையும் வெளிப்படுத்துகிறது.

"பொது ஒழுங்குகள் அமைச்சின் கீழேயே பொலிஸ் இலாகா இயங்குவதன் காரணமாக அமைச்சரின் ஆணையென்ற ரீதியில் எந்தவொரு அதிகாரியையும் அவசரவிடயமென பிரசன்னமாகும்படி உடன் அழைக்க முடியாது. பொலிஸ் மா அதிபரின் முறைப்படியான அனுமதிக்கு அவர் காத்திருக்க வேண்டியவராகவே இருக்கிறார்" என்று கூறிய மூத்த அதிகாரியொருவர் ஊடகங்களுக்கான பேச்சாளராக செயற்படும் அதிகா ரம் தனக்கு இல்லை என்பதால் தன்னை அடையாளம் காட்டிக்கொள்ள விரும்பவில்லை.

"தமது தொழில்சார் இடமாற்றங்களையோ பதவியுயர்வுகளையோ பெற்றுக்கொள்ளும் அரசியல் நோக்கங்களே அவர்களது இத்தகைய முயற்சிகளுக்கான காரணமாக இருக்குமானால், அவர்களைக் கண்டுபிடித்து நடவடிக்கை எடுப்பது பொலிஸ்மா அதிபரின் பொறுப்பாகும். சேவையிலுள்ள ஏனையோரை சந்தேகிப்பதன் மூலம் அவர்கள் பாதிப்பிற்குள்ளாகாமல் பார்த்துக்கொள்வதும் அவசியம். இது வாலானது தலையை ஆட்டுவிப்பது போன்ற முயற்சியாகவே இருக்கும். இது ஏனைய வேறு பிரச்சினைகளைக் கிளப்புவதுடன் புதிய அரசினது கொள்கைகள் நடைமுறைப்படுத்தப்படுவதற்கு தடையாக அமைவதாகவுமிருக்கும்"

**தேசிய தின அணிவகுப்பில் புதிய அரச தலைவர்களுக்கெதிராக இடம்பெறவிருந்த படுகொலைச் சதி பற்றிய தகவல்களும் அதனைத் தொடர்ந்து இராணுவ அதிகாரத் தலைமைகளில் இடம்பெறும் தற்போதைய மாற்றங்களும் எனும் தலைப்பில் சண்டே ரைம்ஸ் ஆசிரியர் தலையங்கத்தில் வெளியான கட்டுரையின் தமிழாக்கம் இங்கு பிரசுரமாகிறது.**

முன்னரும் ஒரு தடவை பொலிஸ் அதிபராக இருந்த மகிந்த பாலசூரிய, சட்டம் ஒழுங்கிற்கான அமைச்சின் செயலராக நியமிக்கப்பட்டபோது இதே போன்றதொரு கட்டளை அறிவுறுத்தலை இலங்கக்கோன் விடுத்திருந்தார். இது கடந்த ஜனவரி 8 ஆம் திகதியன்று இடம்பெற்றிருந்த ஜனாதிபதித் தேர்தலுக்கு சில வாரங்கள் முன்னதாக வெளிவந்திருந்தது.

### ஊழல் எதிர்ப்பு இயக்கம்

தேசிய ஒருமைப்பாட்டு அரசாங்கம் நாட்டில் நிலவுகின்ற 'லஞ்ச-ஊழல்' நிலைமைகளுக்கெதிராக வாக்குறுதி அளித்திருந்த எதிர்நடவடிக்கைகளே அதனது முன்னுரிமைக்குரிய செயற்பங்காக இருக்கிறது. விசாரணைகள் நத்தை வேகத்தில் நகர்வது பொதுமக்களின் அதிருப்திக்கு பெருமளவில் காலாகவேயிருக்கிறது. விசாரணையின் கீழ் உள்ளவர்கள் மட்டில் சட்டவிதிமுறைகள் முறைப்படி பிரயோகிக்கப்பட வேண்டியுள்ளது என்பதே அரசினது விளக்கமாயிருக்கிறது. கையூட்டு ஊழல் மற்றும் அதிகார துஷ்பிரயோகம் சம்பந்தப்பட்டவர்களே குற்றச்சாட்டுக்களின் பொருட்டு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த வேண்டிய தேவையின் காரணமாக இது அவசியமாகிறது.

நுகேகொடையில் இடம்பெற்ற அரச எதிர்ப்புப் பேரணியில் இவ்விடயம் பற்றி, அங்கு கூடிய பெருந்தொகையானோர் மத்தியில் பிரபல்யமான முறையில் பெரிதும் எடுத்துக்காட்டப்பட்டது. ஜனாதிபதித் தேர்தல் பிரச்சாரங்களின்போது முன்னாள் ஜனாதிபதியின் பிள்ளைகள் கார் ஓட்டப்போட்டிகளுக்கான பிரபல 'லம்போஹினி' வகை வாகனங்களையும் ஆடம்பரத்திற்கான உயர்ரக குதிரைகள் நாய்கள் போன்றவற்றையும் இறக்குமதி செய்து பயன்படுத்தியதாக புதிய அரச தலைவர்கள் பேசியது பற்றி நுகேகொட பேரணிக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

போதைவஸ்து தயாரிப்பிற்கான 'எத்தனோல்' ('ethanol') முதலாளிகள் பற்றி எடுத்துக்கூறப்பட்ட பல விடயங்கள் தேர்தல் முடிந்து மாதமொன்று கடந்துவிட்ட நிலையில் வெறும் வீராவேச வெட்டிப்பேச்சுகளாகிப் போயிருந்ததுடன் பல்வேறு விதமான நொண்டிச்சாட்டுக்களும் கட்டவிழ்த்துவிடப்பட்டதாகவும் அவர்கள் கூறியிருந்தனர். இவைகளெல்லாம் வெளிப்படையான உண்மைகளாயிருக்குமானால் அவற்றுக்கெதிராக இதுவரையில் ஏன் நடவடிக்கையெதுவும் எடுக்கப்படவில்லை என்றும் அவர்கள் கேட்டிருந்தனர்.

எப்படியும் ஊழல்களுக்கெதிரான இந்த புதிய போராட்ட இயக்கமானது கடந்த வியாழக்கிழமையன்று புதியதோர் திருப்பத்தை எட்டியிருந்தது. 'ஊழல் எதிர்ப்பு' செயலகமொன்று பம்பலப்பிட்டியில் புதிதாக திறந்துவைக்கப்பட்டது. தனியாட் புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்கான உதவி இயக்குநராக இருக்கும் ஆனந்த விஜேபாலவே குறித்த இந்த செயலகத்திற்கான தற்காலிக இயக்குநராக இருப்பார். சட்டமா அதிபர் இலாகா, கையூட்டு ஊழல் விசாரணை ஆணைக்குழு, பொலிஸ் இலாகா போன்றவற்றைச் சேர்ந்த ஒருங்கிணைப்பாளர்களுடன் ஏனைய நிறுவனங்களையும் சேர்ந்த ஒவ்வொரு பிரதிநிதிகளும் இச்செயலகத்துடன் இணைந்து செயற்படுவர். இவர்களனைவரும் உதவி இயக்குநர்களாக செயற்படுவர். இவர்களைவிட கணக்காளர்களும் நிபுணத்துவம் வாய்ந்த அதிகாரிகளுங்கூடவே செயலகப் பணியில் இணைத்துக்கொள்ளப்படுவர்.

ஊழல்களுக்கெதிரான முறைப்பாடுகளனைத்தும் இச்செயலகத்திற்கே மக்களால் அனுப்பிவைக்கப்படும். முறைப்பாடுகள் தரம் பிரிக்கப்பட்டு பொருத்தமான அதிகாரிகளிடம் விசாரணைகளுக்கென கையளிக்கப்படும். இவ்விசாரணைகளிலான முன்னேற்றம் பற்றி இரண்டு கிழமைகளுக்கு ஒருதடவை சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் [illegible] முகவர்களால் [illegible] மட்டில் செயலகத்தினால் ஆராயப்பட்டு கேள்விகள் மூலம் தகவல் பெறப்படும்.

இந்த புதிய பொறிமுறை பயனுள்ளவிதமாகச் செயற்படுவதற்கான ஆக்கபூர்வ தகவல்களைப் பெற்றுக்கொள்வதால் ஆகும் நன்மைகளுக்கான கௌரவம், மக்கள் விடுதலை முன்னணித் ('JVP') தலைவர் அனுர குமார திஸ்ஸ நாயக்காவையே சாரும். ஏனென்றால் மோசமான பணமோசடி-கையாடல் குற்றங்கள், பொதுநிதிகள்- சொத்து-உடைமைகள் மட்டிலான துஷ்பிரயோகங்கள் பற்றி விசாரணை மேற்கொள்வதற்கென புதிய செயலகமொன்றுடன் பொலிஸ் தலைமையகத்தின் கீழ் புறம்பான பிரிவு ஒன்றை நிறுவி செயற்படுத்தும் முறையினை உறுதி செய்து கொள்ளும்படி மேற்படி திஸ்ஸநாயக்காவே பிரதமர் ரணில் விக்ரமசிங்கவுடன் தொடர்புகொண்டு அடிக்கடி வலியுறுத்தி வந்துள்ளார். அரச நிர்வாகப் பிரிவுகளிலிருந்து விசாரணைச் செயலகத்திற்கான உயர்மட்ட முகாமைத்துவ அதிகாரிகள் சிலரையும் அவரேதான் தெரிந்துகொண்டவராகவுமிருந்தார். புதிய அரசினை விழிப்புநிலையில் வைத்திருப்பதற்கான ஒரு பகுதி நகர்வாக பாராளுமன்றத்திலும் அவரேதான் ஊழல் விடயங்கள் தொடர்பான கேள்விகளையும் காலத்திற்குக் காலம் எழுப்பிக்கொண்டுமிருந்தார். இதன் விளைவாக விசாரணைகளில் அடங்கும் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான சிலர் தமது பக்கத்து நியாயங்களை முன்வைப்பதற்கு தமது பிரதிநிதிகளை அவரிடம் கடந்த சில வாரங்களாகவே அனுப்பி சந்திக்க வைக்கும் முயற்சியிலும் ஈடுபட்டுக்கொண்டிருப்பது ஆச்சரியத்திற்குரிய ஒன்றல்ல. இவ்விதமானவர்கள் தமது நியாயங்களை நாட்டு மக்கள் முன் வைக்கவேண்டுமென்பதுடன் தாமுங்கூடவே அவ்வாறுதான் செயற்படுவார் என்பதே அவருடைய நிலைப்பாடாகவுமிருக்கிறது. ஜனாதிபதி சிறிசேனா தலைமையிலான தேசிய நிறைவேற்றுக் கவுன்சிலின் ஒரு கிளையாக செயற்படும் ஊழல் எதிர்ப்பு சபைக்கு ரணில் விக்ரமசிங்கவே தலைமை தாங்குகிறார். இந்த இரண்டு சபைகளிலுமே (JVP) யின் தலைவர் திஸ்ஸ நாயக்க ஓர் உறுப்பினராக இருக்கிறார்.







இந்த ஊழல் எதிர்ப்பு சபையானது, முந்திய ஆட்சியின் போது நிலவிய பெருமளவிலான ஊழல்களுடன் போலித்தனமான மோசடிகள் போன்றவைமட்டில் புலன்விசாரணைகளை மேற்கொண்டு அவற்றுக்குப் பொறுப்பானவர்கள் மீது சட்டநடவடிக்கைகளை மேற்கொண்டு அவற்றுக்குப்பொறுப்பானவர்கள் மீது சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன் எதிர்காலத்தில் இதுபோன்ற சட்டமீறல்கள் இடம்பெறாது தடுப்பதற்கான நடவடிக்கைகளை சிபார்சு செய்வதே ஊழல் எதிர்ப்பு சபையின் செயற்பாடாகவிருக்கும் என அமைச்சர்களுக்கான அண்மைய சபை அறிவித்தலொன்றின் மூலம் பிரதமர் ரணில் விக்ரமசிங்க விளக்கியிருந்தார். அதனது அர்ப்பணிப்புடன் கூடிய செயற்பாடுகளுக்கான ஓர் ஆரம்பச் செலவின ஒதுக்கீடாக ரூ 7.5 மில்லியன் இந்த ஊழல் எதிர்ப்பு செயலகத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டு தற்போது பொதுமக்களின் முறைப்பாடுகளை கையேற்பதற்கு தயாராக உள்ளது. இல.101 R.A de Mel Mawatha, Col.3 என்ற விலாசத்தில் இயக்குகிற இச் செயலகம் பொதுமக்களின் முறைப்பாடுகளை தம்மிடம் கையளிக்கும்படி உத்தியோகபூர்வ அறிவித்தலை விடுக்கவிருக் கிறது.

-தமிழில் யோகர்-

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ஏமனில் நடந்த விபரீதம்

# விமானக் குண்டு வீச்சில் 45 அகதிகள் உயிரிழப்பு

(சனா)

**ஏமன்நாட்டில் நேற்றுமுன்தினம் அரபு நாடுகளின் போர் விமானங்கள் குண்டு வீசியதில் சில குண்டுகள் வடக்கு ஏமன் பகுதியில் உள்ள ஹாரத் மஸ்ரக் அகதிகள் முகாமில் விழுந்து வெடித்துச் சிதறின. இதில் சம்பவ இடத்திலேயே 45 அகதிகள் பலியானார்கள். 65 பேர் படுகாயம் அடைந்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.**



கிளர்ச்சியாளர்கள் பதுங்கியிருந்த இடத்தை நோக்கி அரபு படை போர் விமானங்கள் குண்டுகளை வீசியபோது, அவை குறி தவறி அருகில் இருந்த அகதிகள் முகாமில் விழுந்து பலத்த உயிர்சேதத்தை ஏற்படுத்தியதாக அகதிகளுக்கு உதவும் அமைப்பைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஏமன் நாட்டில் கிளர்ச்சியில் ஈடுபட்டு வரும் ஹவுதி ஆதரவு படையினர் மீது அரபு நாடுகளின் போர் விமானங்கள் கடந்த 5 நாட்களாக வான்வழித் தாக்குதல் நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

## பாகிஸ்தானிய பிரஜைகள் பத்திரமாக மீட்கப்பட்டனர்

உள்நாட்டு சண்டை உக்கிரமடைந்துள்ள ஏமனில் இருந்து 500 இற்கும் மேற்பட்ட பாகிஸ்தானியர்கள் பத்திரமாக மீட்கப்பட்டனர்.

ஏமனில் உள்நாட்டு சண்டை உக்கிரமடைந்துள்ள ஹொடெய்டா துறை முக பகுதியில் சிக்கித் தவித்த 500 பாகிஸ்தானியர்களை பாதுகாப்பாக மீட்கும் வகையில் சவுதி அரேபியா நேற்று முன்தினம் வான்வெளித் தாக்குதலை சுமார் 2 மணி நேரம் நிறுத்தி வைத்தது. இதைத் தொடர்ந்து அங்கிருந்து 500 இற்கும் மேற்பட்ட பாகிஸ்தானியர்கள் பத்திரமாக மீட்கப் பட்டனர்.

அவர்கள் அனைவரும் பாகிஸ்தான் விமானங்கள் மூலம் ஏற்றப்பட்டு அவர்களது நாட்டுக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

இதேபோல் ஏமனில் சிக்கித் தவிக்கும் சீன அதிகாரிகள், மருத்துவ மற்றும் தொழில்நுட்ப குழுவினரை மீட்பதற்காக ஏடன் நகர துறைமுகத்தில் சீன நாட்டுக் கப்பல் ஒன்று நிறுத்தி வைக்கப்பட்டு உள்ளது. (இ-5)




## விண்வெளியில் சூரிய மின் உற்பத்தி மையம்



(பீஜிங்)

விண்வெளியில் பிரமாண்டமான சூரிய மின் உற்பத்தி மையத்தை அமைக்க சீனா திட்டமிட்டுள்ளது.

இந்த சூரிய மின் உற்பத்தி மையத்தின் மூலம் அதிக அளவு மின்சக்தி கிடைப்பதுடன் பூமி வெப்பமடைவது தடுக்கப்படும் என்று சீனா அறிவித்துள்ளது.

பூமியை சுற்றி வருவது போல அமைக்கப்படும் இந்த மையத்தில் பெரிய அளவிலான சூரிய மின் உற்பத்தி தகடுகள் இருக்கும்.

இங்கு கிடைக்கும் மின்சாரம் மைக்ரோவேவ் அல்லது லேசராக மாற்றப்பட்டு பூமியில் உள்ள மின் பகிர்மான மையத்துக்கு அனுப்பி வைக்கப்படும் என்று சீன அரசு செய்தி நிறுவனமான ஜின்குவா தெரிவித்துள்ளது.

அமெரிக்க எழுத்தாளர் ஐசக் அசிமோவ் 1941ஆம் ஆண்டு எழுதிய நாவலில், வானத்தில் சூரிய மின் உற்பத்தி மையம் அமைக்கப்படுவதாக கற்பனையாக கூறியிருந்தார். இப்போது அதனை உண்மையாக்கும் முயற்சியில் சீனா களமிறங்கியுள்ளது. (இ-5)

## மோடி, ஒபாமா கடவுச்சீட்டுக்களின் விபரங்கள் கசிந்ததால் பரபரப்பு



கடந்த ஆண்டு அவுஸ்திரேலியாவில் நடந்த ஜி-20 உச்சி மாநாட்டில் பங்கேற்ற ஒபாமா, மோடி உள்ளிட்ட முக்கிய தலைவர்களின் கடவுச் சீட்டு விபரங்கள் வெளியாகி அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தியுள்ளது. பிரிஸ்பேனில் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் நடந்த ஜி-20 உச்சி மாநாட்டில் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா, இந்திய பிரதமர் நரேந்திர மோடி, ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் உள்ளிட்ட 31 நாடுகளின் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

அவர்களின் கடவுச் சீட்டு எண், பிறந்த திகதி, விசா உள்ளிட்ட இதர விபரங்களை அவுஸ்திரேலிய குடியுரிமை ஊழியர் ஒருவர் தவறுதலாக ஆசிய கோப்பை காற்பந்து போட்டி அமைப்பாளர்களுக்கு அனுப்பியுள்ள தகவல் வெளியாகியுள்ளது.

தி கார்டியன் என்னும் பிரிட்டிஷ் ஏடு இந்த செய்தியை வெளியிட்டுள்ளது. மிகவும் இரகசியமாக வைக்கப்படும் உலக தலைவர்களின் தனிப்பட்ட விபரங்கள் வெளியாகியிருப்பது அந்தரங்க தனி உரிமையை மீறும் செயல் என்று அந்த ஏடு குறிப்பிட்டுள்ளது.

இதற்கிடையே தன்னையும் அறியாமல் தவறுதலாக அனுப்பிய இந்த பெண் ஊழியர் இது குறித்து அவுஸ்திரேலிய நாட்டின் தனியுரிமை ஆணையரை தொடர்புகொண்டு அறிவுரை கேட்டதாக கூறப்படுகிறது.

மனித தவறில் ஏற்பட்ட இந்த குளறுபடி குறித்து ஆய்வு நடத்தி முடிவு எடுக்கப்படும் என குடியுரிமை மற்றும் தனியுரிமை ஆணைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். அதிர்ஷ்டவசமாக இந்த விபரங்கள் பகிரங்கமாக வெளியாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## 3 ஆயிரம் அடி பள்ளத்தில் பேருந்து வீழ்ந்து விபத்து!

### 16 பேர் இதுவரை பலி!

(லிமா)

பெருவின் தென்கிழக்கு மலைப்பகுதியில் சென்று கொண்டிருந்த பேருந்து 3000 அடி பள்ளத்தில் விழுந்து விபத்துக்குள்ளானதில் 16 பேர் பலியானார்கள்.

நேற்று முன்தினம் அயாகுச்சோ பகுதியில் சாஞ்செஸ் நெடுஞ்சாலையில், நஸ்கா நகரிலிருந்து பிக்குயோ நகருக்கு அப்பேருந்து சென்று கொண்டிருந்த போது விபத்துக்குள்ளானதாக நெடுஞ்சாலை பொலிஸ் தலைவர் ஓர்பைல்ஸ் பிராவோ, வானொலிக்கு வழங்கிய செய்தியில் குறிப்பிட்டுள்ளார். இந்த விபத்தில் 16 பேர் பலியானதாகவும், 49 பேர் காயமடைந்ததாகவும் கூறினார். முன்னதாக இவ்விபத்தில் 12 பேர் பலியானதாகவும், 20 பேர் காயமடைந்ததாகவும் அதிகாரிகள் தெரிவித்திருந்தனர்.

காயமடைந்தவர்களில் பலரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதால் பலி எண்ணிக்கை மேலும் உயரக்கூடும் என பிராவோ மேலும் கூறினார்.

அப்பகுதியில் பெய்து வரும் கனமழை காரணமாக மீட்பு பணிகளிலும் தாமதம் ஏற்பட்டுள்ளதாக தெரியவருகிறது. (இ-5)



சிரியா இராணுவத்திடமிருந்து கைப்பற்றிய இத்லிப் நகரில் ஜனாதிபதி அல்-ஆசாத்தின் தந்தையும் முன்னாள் ஜனாதிபதியுமான ஹாபிஸ் அல் ஆசாத்தின் சிலையை சேதப்படுத்தும் பயங்கரவாதிகள்.

## அமெரிக்க தேசிய பாதுகாப்பு மையத்தில் துப்பாக்கிச்சூடு!



அமெரிக்காவின் போர்ட் மெடெவிலில் அமைந்துள்ள தேசிய பாதுகாப்பு மையத்தின் தலைமையகத்துக்குள் அத்துமீறி நுழைய முயன்ற இரண்டு நபர்கள் மீது பாதுகாப்புப் படையினர் துப்பாக்கிச் சூடு நடத்தியதில், ஒருவர் பலியானார், மற்றொருவர் காயமடைந்தார்.

இந்த சம்பவத்தில் பாதுகாப்பு படை வீரர் ஒருவரும் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இந்த நபர்கள் இருவரும் பெண்களுக்கான உடையை அணிந்து, திருடப்பட்ட வாகனத்தில் தேசிய பாதுகாப்பு மையத்துக்குள் நுழைய முயன்றுள்ளனர்.

இவர்கள் தீவிரவாதிகள் இல்லை என்று முதற்கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித புதைகுழிகளை தோண்டும் நடவடிக்கையை விரைவுபடுத்துக!

**(களுவாஞ்சிக்குடி)**

**மட்டக்களப்பு குருக்கள்மடம் மனித புதைகுழியினை தோண்டுவதற்குரிய நடவடிக்கைகளை விரைவாக மேற்கொள்ளுமாறு பொலிஸாருக்கு களுவாஞ்சிக்குடி சுற்றுலா நீதிமன்ற ந்திபதி ஏ.எம்.றியால் கட்டளை பிறப்பித்துள்ளார்.**

நேற்று முன்தினம் திங்கட்கிழமை குருக்கள்மடம் மனித புதைகுழி தொடர்பான வழக்கு மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது சாட்சியமளித்த பொலிஸார்,

குறிப்பிட்ட அடையாளப்படுத்தப்பட்ட பகுதியானது ஆய்வுக்கு உற்படுத்தப்பட்டதாகவும், மனித எச்சங்கள் என நம்பப்படும் 4 1/2 மீற்றர் அளவிலான இடம் அடையாளப்படுத்தப்பட்டு அதற்குரிய அறிக்கை வரும்வரை காத்திருப்பதாகவும் பொலிஸார் கூறினர்.

குருக்கள்மட மனிதப் புதைகுழி தோண்டப்பட வேண்டுமென கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஷிப்லி பாறூக்கினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் தொடர்ச்சியான வழக்கு விசாரணை கடந்த ஜனவரி மாதம் 29 ஆம் திகதி வழக்கு களுவாஞ்சிக்குடி சுற்றுலா நீதவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

அதன்போது ஏற்கனவே கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஷிப்லி பாறூக்கினால் அடையாளப்படுத்தப்பட்ட இடத்தினை பூமிக்கு கீழேயுள்ள எச்சங்களை கண்டறிய ஸ்கான் கருவியினூடாக குறிப்பிட்ட அந்த பகுதியினை ஆய்வு செய்யுமாறு களுவாஞ்சிக்குடி சுற்றுலா நீதிமன்ற நீதவான் ஏ.எம்.றியால் கட்டளை பிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

# சீன நிறுவன பணிப்பாளரின் கடவுச் சீட்டுக்களினை முடக்குமாறு உத்தரவு

சீனத் துறைமுக பொறியியல் நிறுவன பணிப்பாளர்களின் கடவுச்சீட்டுக்களை முடக்குமாறு கொழும்பு கோட்டை நீதவான் கிஹான் பிலப்பிட்டிய உத்தரவிட்டுள்ளார்.

மத்தள விமான நிலையம், சூரியவெவ மைதானம் மற்றும் கொழும்பு துறைமுக நகரம் ஆகியவற்றின் உப-குத்தகைகார்களின் கட்டணப்பட்டியலை செலுத்தவில்லை என்ற குற்றச்சாட்டை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி. சீனத் துறைமுக பொறியியல் நிறுவன பணிப்பாளர்களின் கடவுச்சீட்டுக்களை முடக்குமாறு நேற்று முன்தினம் நீதவானால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணை ஏப்ரல் 2 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

தாய்சேய் நிர்மாண நிறுவனத்தின் அதிகாரியொருவர் பொலிஸில் மேற்கொண்ட முறைப் பாடடில், சைனாஹாபர் பொறியியல் நிறுவனமே மத்தள விமான நிலையம், சூரியவெவ மற்றும் கொழும்பு போட்சிட்டி ஆகியவற்றின் நிர்மாணப்பணிகளை மேற்கொண்டு வருவதாக தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில் தாம் குறித்த நிறுவனத்தின் உபகுத்தகைதாரராக பொறுப்பேற்று நடத்திய போதும் அதற்கான கொடுப்பனவுகளை சைனா ஹாபர் நிறுவனம் வழங்கவில்லை என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனையடுத்து விசாரணையை மேற்கொண்ட பொலிஸார் சைனா ஹாபர் நிறுவன பணிப்பாளர் நாட்டில் இருந்து தப்பிச்செல்ல முயற்சித்த போது அவரை கைது செய்தார்கள்.

அவர், கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் முன்னிலைப்படுத்தப்பட்டபோது அவரை நான்கு சரீர பிணைகளில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.(இ-5)

# ஐக்கிய தேசிய கட்சிக்கு எதிராக மக்கள் பேரணி

## திஸ்ஸ விதாரண தெரிவிப்பு

எதிர்வரும் தொழிலாளர் தினத்தை ஐக்கிய தேசிய கட்சிக்கு எதிரான மக்கள் இயக்கத்தின் பேரணியாக முன்னெடுக்கவுள்ளதாக ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பைச் சார்ந்த லங்கா சமசமாஜ கட்சி தெரிவித்துள்ளது.

மேதினம் தொடர்பாக கலந்துரையாடுவதற்கு நேற்று முன்தினம் நாராஹேன்பிட்டியில் இடம்பெற்ற சந்திப்பின் போதே முன்னாள் சிரேஷ்ட அமைச்சர் திஸ்ஸ விதாரண இந்த கருத்தை வெளியிட்டார்.

குறித்த சந்திப்பில் முன்னாள் அமைச்சர்களான தினேஷ் குணவர்தன, பந்துல குணவர்தன, உள்ளிட்டோரும் கலந்து கொண்டனர்.

தற்போது ஐக்கிய தேசிய கட்சியே அரசாங்கத்தில் முழுமையான பங்களிப்பை செலுத்துவதாக திஸ்ஸ விதாரண குறிப்பிட்டார்.

ஐக்கிய தேசிய கட்சி ஒருபோதும் தொழில்புரியும் மக்கள் தரப்பில் இருந்து செயற்படவில்லை எனவும் அவர் குற்றம்சுமத்தியுள்ளார்.(இ-5)

# நுவரெலியா, கொழும்பு, பதுளை, கண்டியில் தமிழ் எம்.பிக்கள் தெரிவாக வேண்டும்

புதிய தேர்தல் முறையில் பாராளுமன்ற உறுப்பினர் தொகை 250 ஆக உயர்த்தப்படுமானால், மத்திய, மேல், ஊவா மாகாணங்களில் பெரும்பான்மை இனத்து மக்கள் மத்தியில் கலந்து வாழும் தமிழ் மக்களின் பாராளுமன்ற பிரதிநிதித்துவங்கள் பாதுகாக்கப்பட வேண்டும்.

இந்த அடிப்படையில் நுவரெலிய மாவட்டத்தில் ஐந்து, கொழும்பில் மூன்று, பதுளையிலும், கண்டியிலும் தலா இரண்டு என்ற குறைந்தபட்ச எண்ணிக்கையில் தமிழ் எம்பிக்கள் தெரிவு செய்யப்பட இடமிருக்க வேண்டும்.

தமிழ் வாக்காளர்கள் தங்கள் வாக்குரிமையை முழுமையாக பயன்படுத்தி தங்கள் பிரதிநிதிகளை தெரிவு செய்யாவிட்டால் நாம் ஒன்றும் செய்ய முடியாது. ஆனால், நுவரெலியா, கொழும்பு, கண்டி, பதுளை மாவட்டங்களில் தமது சனத்தொகைக்கு ஏற்ப தமிழ் எம்பிக்களை தெரிவு செய்துகொள்ள புதிய தேர்தல் முறைமையில் இடமிருக்க வேண்டும் என தேசிய நிறைவேற்று சபை உறுப்பினரும், ஜனநாயக மக்கள் முன்னணி தலைவருமான மனோ கணேசன் நேற்று தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரியவை நேரில் சந்தித்து கையளித்த ஆவணத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் மனோ கணேசன் கூறியதாவது,

இன்றைய தேர்தல் முறைமை மாற்றப்பட்டு, விருப்பு வாக்கு முறைமை ஒழிக்கப்பட வேண்டும். தொகுதிக்கு என்று ஒரு எம்.பி தெரிவு செய்யப்பட வேண்டும் என்ற யோசனைகளை நாம் ஏற்றுக்கொள்கிறோம்.

ஆனால், அந்த மாற்றங்கள் ஒருபோதும் இன்று சிறுபான்மை இனம் அனுபவிக்கும் பிரதிநிதித்துவங்களை குறைத்துவிடக் கூடாது. விருப்பு வாக்கு முறைமை ஒழிக்கப்படவேண்டும், தொகுதிக்கு என்று ஒரு எம்.பி தெரிவு செய்யப்பட வேண்டும் என்று இன்று குரல் எழுப்பும் பெரும்பான்மை கட்சிகளுக்கு சிறுபான்மை இனம் இன்று அனுபவிக்கும் பிரதிநிதித்துவங்கள் தொடர்பில் அக்கறை இருப்பதாக தெரியவில்லை.

புதிய தேர்தல் முறை மாற்றத்தின் போது, இந்நாட்டில் கடந்த பத்தாண்டுகளில் நடைபெற்றுள்ள சனத்தொகை வளர்ச்சி, இடம்பெயர்வு, குடியேற்றம் ஆகியவை கணக்கில் எடுக்கப்பட வேண்டும்.

மத்திய. மேல், ஊவா மாகாணங்களில் பெரும்பான்மை இனத்து மக்கள் மத்தியில் கலந்து வாழும் தமிழ் பேசும் தமிழ், முஸ்லிம் சிறுபான்மை மக்களே உத்தேச தேர்தல் முறை மாற்றங்கள் காரணமாக அதிகம் பாதிப்பு அடையும் அபாயத்தை எதிர்நோக்குகின்றார்கள்.

எனவே தேர்தல் முறை மாற்றம் தொடர்பில் நாம் அதிக அச்சம் கொண்டுள்ளோம். இந்த அச்சம் புரிந்துகொள்ளப்பட வேண்டும். இந்நாட்டின் சமீப கால வரலாற்றில் தற்போதைய நடப்பு தேர்தல் முறையே தமிழ், முஸ்லிம் சிறுபான்மை மக்களுக்கு அதிகபட்ச பிரதிநிதித்துவங்களை வழங்கியுள்ளது.

எனவே இந்த தேர்தல் முறையை மாற்றுவதனால் எங்களது குறைந்தபட்ச உரிமை உறுதி செய்யப்பட வேண்டும். இல்லாவிட்டால் புதிய தேர்தல் முறை மாற்றத்துக்கு நாம் உடன்பட முடியாது.

இந்த அடிப்படையில் நுவரெலியா மாவட்டத்தில் ஐந்து, கொழும்பில் மூன்று, பதுளையிலும் கண்டியிலும் தலா இரண்டு என்ற குறைந்தபட்ச எண்ணிக்கையில் தமிழ் எம்பிக்கள் தெரிவு செய்யப்படக்கூடிய ஜனநாயக சூழல் ஏற்பட வேண்டும்.

தமிழ் வாக்காளர்களுக்கு தமது சனத்தொகைக்கு ஏற்ப தமிழ் எம்பிக்களை தெரிவு செய்துகொள்ள புதிய தேர்தல் முறைமையில் இடமிருக்க வேண்டும். தமிழ் வாக்காளர்கள் தங்கள் வாக்குரிமையை முழுமையாக பயன்படுத்தி தங்கள் பிரதிநிதிகளை தெரிவு செய்யாவிட்டால் நாம் ஒன்றும் செய்ய முடியாது. அது நமது இனத்தின் தலையெழுத்து. ஆனால், சட்டத்தில் இடமிருக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.(இ-5)

# பிரிவுத்துயர் பகிர்வு



### திருமதி பிலிப்இராசநாயகம் நிர்மலாதேவி

கரம்பனைப் பிறப்பிடமாகவும் இளவாலையை வசிப்பிடமாகவும் கொண்ட பிலிப் இராசநாயகம் நிர்மலாதேவி கடந்த 26ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று புதன் கிழமை காலை 9மணிக்கு இளவாலை புனித அன்னம்மாள் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் பூதவுடல் அன்னம்மாள் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.



### பொன்னுத்துரை திலகதாஸ்

(பாராளுமன்ற ஹன்சாட் பத்திரிகை ஆசிரியர்)

சங்கானையைப் பிறப்பிடமாகவும் வட்டுக்கோட்டை, தெஹிவளையை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை திலகதாஸ் கடந்த 29ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் பூதவுடல் அவரின் இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை வியாழக்கிழமை காலை 10மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்று பின்னர் பூதவுடல் கல்கிசை மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### சின்னத்துரை பரமலிங்கம்

கோண்டாவில் வடக்கைப் பிறப்பிடமாகவும் அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி பரமலிங்கம் கடந்த 28ஆம் திகதி. சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று இல.6, செம்மணி ஒழுங்கை A.V றோட்டில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் அரியாலை சிதது பாத்தி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### ஆறுமுகம் தாமோதரம்பிள்ளை

(இளைப்பாறிய அதிபர்)

புன்னாலைக்கட்டுவன் தெற்கைப் பிறப்பிடமாகவும் இளவாலை, நியூசிலாந்து ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொணட ஆறுமுகம் தாமோதரம்பிள்ளை கடந்த 29ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று பி.ப3மணியளவில் Karori Cemetery, Karori, New Zealand இல் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### செல்வரட்ணம் சபாபதி

(முன்னாள் பலநோக்கு கூட்டுறவு சங்க கொள்வனவு உத்தியோகத்தர் -நீர்வேலி)

கோப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் கனடா Brampton ஐ வசிப்பிடமாகவும் கொண்ட செல்வரட்ணம் சபாபதி நேற்று முன்தினம் திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 5ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப10.30 தொடக்கம் பிப. 12.30மணிவரை Chapel Ridge Funeral Home, 8911 Woodbine Ave, Markham ON L3R 5G1, Canada [illegible] முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பேருந்து - மோ.சைக்கிள் விபத்து; இளைஞன் மரணம்

(கிளிநொச்சி)

இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பேருந்தும் மோட்டார் சைக்கிளும் மோதுண்டதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞன் உயிரிழந்தார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் காலை 6.40 மணியளவில் கிளிநொச்சி கண்ணகைபுரம் பகுதியில் நடைபெற்றுள்ளது.

இதில் கண்ணகைபுரத்தைச் சேர்ந்த கிருஷ்ணபிள்ளை தயாளன் (வயது-29)என்பவரே மரணமடைந்தவராவார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது, இ.போ.ச. பேருந்தினை சாரதி பின்னோக்கி செலுத்த முற்பட்ட வேளை அவ்வழியாக பயணித்த மோட்டார் சைக்கிளுடன் மோதுண்டதிலேயே இவ்விபத்து நேர்ந்துள்ளது.

இதனையடுத்து அக்கராயன் குளம் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது. அவ்விடத்திற்கு விரைந்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டனர்.

இதேவேளை கிளிநொச்சி அக்கராயன் பகுதியில் இருந்தும் , அக்கராயன் ஊடாகவும் போக்குவரத்தில் ஈடுபடும் இ.போ.ச. போருந்துகள் நேற்றையதினம் சேவையில் ஈடுபடவில்லை.

பேருந்துகள் குறித்த வழியூடாக போக்குவரத்தில் ஈடுபடாமையை அடுத்து பொதுமக்கள்பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.(2-272)

# நடைபாதை வியாபாரிகளுக்கு எதிராக வழக்குத் தாக்கல்



(குருமன்காடு)

வவுனியா நகர சபைக்குட்பட்ட பகுதிகளில் நடைபாதைகளில் வியாபார நடவடிக்கைகளை மேற்கொண்ட வியாபாரிகளின் பொருட்களை நகரசபை பறிமுதல் செய்ததுடன் அவர்கள் மீதும் வழக்குத்தாக்கல் செய்ய நடவடிக்கை எடுத்துள்ளது.

வவுனியா இலுப்பையடி,மன்னார் வீதி ஆகிய பகுதிகளில் உள்ள நடைபாதைகளில் அனுமதியின்றிய வியாபாரத்தில் நேற்றையதினம் ஈடுபட்ட வியாபாரிகளிடம் இருந்த பொருட்களை வவுனியா நகரசபை பறிமுதல் செய்ததுடன் அவர்கள் மீது வழக்குத் தாக்கலையும் மேற்கொண்டுள்ளது.

அத்துடன் குறித்த பகுதிகளில் நடைபாதைகளில் மரக்கறி வகைகள், பான்சிப் பொருட்கள், உணவு வகைகள் ஆகியவற்றை அனுமதியின்றி விற்பனை செய்து கொண்டிருந்தவர்களின் பொருட்களை பறிமுதல் செய்ததுடன் அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இது தொடர்பில் நகரசபை சுகாதார பரிசோதகர் தெரிவிக்கையில், சில நாட்களாக நடைபாதை வியாபாரிகளுக்கு அறிவுறுத்தல்களை வழங்கி வந்த நிலையில் அதனை நடைமுறைப்படுத்தாது போக்குவரத்து நடவடிக்கைகளுக்கு இடையூறாக செயற்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார். (2-250)

# கடை உடைத்து திருட்டு



அழகு சாதனக்கடையொன்று உடைக்கப்பட்டு ஒரு இலட்சத்து 20 ஆயிரம் ரூபா பணம் திருட்டுப் போயுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வவுனியா, குருமன்காடு பகுதியில் உள்ள அழகு சாதனக் கடையிலேயே நேற்று முன்தினம் இரவு இத்திருட்டுச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது, அழகு சாதனக்கடையின் கூரை வழியாக உள்நுழைந்த திருடர்கள் அங்கு வைக்கப்பட்டிருந்த உண்டியல் பணத்தினையும் தொலைபேசி மீள் நிரப்பு அட்டைகளையும் களவாடிச் சென்றுள்ளனர்.

ஒரு இலட்சத்து 20ஆயிரம் ரூபா வரையிலான பணம் திருட்டுப் போயுள்ளதாக கடை உரிமையாளரினால் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (2-250)

# பிரதேச சம்மேளன நிர்வாகத் தெரிவு

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் மாந்தை கிழக்கு பிரதேசத்தில் அமைக்கப்பட்ட 17 இளைஞர் கழகங்களினதும் ஒன்றிணைந்த அமைப்பான மாந்தை கிழக்கு இளைஞர்கழக பிரதேச சம்மேளன நிர்வாகத் தெரிவுக் கூட்டம் கடந்த 28 ஆம் திகதி பி.ப. 2 மணியளவில் மாந்தை கிழக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் மாந்தை கிழக்கு பிரதேச இளைஞர் சேவை அதிகாரி அ.ஜெயாளன் தலைமையில் இடம்பெற்றது. தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் முல்லைத்தீவு மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி திருமதி.கு.சறோஜாவினால் பிரதேச சம்மேளனத்தின் நோக்கம் மற்றும் சம்மேளனம் ஆற்றவேண்டிய சேவைகள் தொடர்பான விளக்கம் அளிக்கப்பட்டதைத் தொடர்ந்து இவ்வாண்டிற்கான புதிய நிர்வாகத் தெரிவு இடம்பெற்றது. இதில் தலைவராக ர.லோகேஸ்வரன், செயலாளராக அ.ஜெயாளன், பெருளாளராக ம.மகிந்தராசா அமைப்பாளராக வ.துஸ்யந்தன், உப தலைவராக சி.டினோத் ;உப செயலாளராக ம. நிறோசன், உப அமைப்பாளராக க.றொபின்சன் மற்றும் துறைசார் செயலாளர்களாக துவாரகன், சியாமினி,கலியுகபவன், றியெய்காந், சிந்துஜன், துலக்சன், பிரதீப், சதீஸ்காந், அபிரதன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.(2-281)




# குழாய் கிணறுகளில் இருந்து சேற்றுநீர் வெளியேறுகின்றது



கிளிநொச்சி அனர்த்த முகாமைத்துவப் பிரிவால் கிளிநொச்சி கல்லாறு கிராமத்தில் அமைக்கப்பட்ட குழாய்க் கிணற்றிலிருந்து குடிநீருக்குப் பதிலாக சேற்று நீர் வருவதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்தனர்.

கல்லாறு கிராமத்தில் வசித்துவரும் சுமார் 250இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் தமக்கான குடிநீரைப் பெற்றுக்கொள்வதில் அன்றாடம் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வந்தனர். இதனை நிவர்த்தி செய்யும் முகமாக, அனர்த்த முகாமைத்துவ அமைச்சினூடாக பிரதேச ரீதியாக குழாய்க் கிணறுகள், பொதுக் கிணறுகள் அமைக்கப்பட்டன.

அவ்வாறு அமைக்கப்பட்ட குழாய்க் கிணறுகளில் இருந்து குடிநீருக்குப் பதிலாக சேற்று நீர் வருகின்றது. பொதுக் கிணறுகள் உவர் நீர்த் தன்மையுடையவையாகக் காணப்படுகின்றன.

இதனால், இங்குள்ள குடும்பங்கள், ஐந்து கிலோ மீற்றர் தூரம் சென்று தமக்கான குடிநீரைப்பெற வேண்டிய நிலை காணப்படுகின்றது.

மழை நீர் சேகரிப்புத் திட்டத்தின் கீழ் 123 குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட நீர்த்தாங்கிகளில் சேமிக்கப்பட்ட நீரை ஒரு மாத காலத்துக்கு மாத்திரம் பாவிக்க முடிகின்றது. இந்தக் கிராம மக்கள் குடிநீரை 200 லீற்றர் 250 ரூபாய் என்ற ரீதியில் தனியார் ஒருவரிடம கொள்முதல் செய்து பாவித்து வருகினறமை குறிப்பிடத்தக்கது. (2)

# சட்டவிரோத மதுபான உற்பத்தி குடும்ப வன்முறையை தூண்டுகிறது

கிளிநொச்சியிலுள்ள கிராமங்களில் இடம்பெறும் குடும்ப வன்முறைக்கு சட்டவிரோத மதுபான உற்பத்தியே காரணம் என கிளிநொச்சி மாவட்ட பெண்கள் அமைப்பின் பிரதிநிதியொருவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

கிராமப்புறங்களில் பெண்களுக்கு எதிரான குடும்ப வன்முறைகள் அதிகரித்துள்ளன.

இதற்கு கிராமங்களில் உற்பத்தி செய்து விற்பனை செய்யப்படும் சட்டவிரோத கசிப்பு உற்பத்தியே காரணமாகும். பின்தங்கிய கிராமங்களில் இதன் உற்பத்தியானது அதிகரித்துள்ளதுடன், நுகர்வோரும் அந்தப் பிரதேசங்களிலேயே இருக்கின்றனர். இதனைக் கட்டுப்படுத்த உரிய அதிகாரிகள் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

பெண்கள் தமக்கு எதிரான வன்முறைகள் தொடர்பில் தமது விடயங்களை மனம் திறந்து கூறுவதற்கு பொலிஸ் நிலையங்களில் போதியளவு பெண் பொலிஸார் இல்லை.

இந்தப் பிரச்சினைகள் தொடர்பில் அண்மையில் கிளிநொச்சிக்கு விஜயம் செய்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை முன்வைத்திருந்தோம்.

வடக்கிலுள்ள பெண்களின் பிரச்சினைகளை ஆராய்வதற்கு ஜனாதிபதி சட்டத்தரணி சாந்தா அபிமன்னசிங்கத்தின் தலைமையில் ஒரு குழுவொன்றை அமைத்துத் தருவதாகவும் அந்தக்குழுவுடன் கலந்துரையாடி பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுமாறும் பிரதமர் கூறியிருந்ததாக அவர் குறிப்பிட்டார். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகில் மிகப்பெரிய கட்சியாக உருவெடுத்துள்ள பா.ஜ.கட்சி!




உலகத்திலேயே மிகப் பெரிய அரசியல் கட்சியாக இந்தியாவின் ஆளும்கட்சியான பா.ஜ.க. உருவெடுத்துள்ளது. இந்தக் கட்சிக்கு மொத்தம் 8.8 கோடி தொண்டர்கள் உள்ளனர். சீனாவின் ஆளும் கம்யூனிஸ்ட் கட்சி 2ஆவது இடத்தில் உள்ளது.

இந்தியாவில் கடந்த மக்களவைத் தேர்தலில், பிரதமர் வேட்பாளராக நரேந்திர மோடியை அறிவித்ததில் இருந்து பா.ஜ.க. வேகமாக வளரத் தொடங்கியது. கடந்த ஞாயிற்றுக்கிழமை வரை இந்தக் கட்சியில் 8.8 கோடி பேர் உறுப்பினர்களாகப் பதிவு செய்துள்ளனர். உலகத்திலேயே அதிக உறுப்பினர்கள் கொண்ட அரசியல் கட்சி என்ற அந்தஸ்து பா.ஜ.கவுக்குக் கிடைத்துள்ளது. கடந்த 8 நாட்களில் மட்டும் ஒரு கோடி பேர் பா.ஜ.கவில் சேர்ந்துள்ளனர்.

இதுகுறித்து பா.ஜ.க. துணைத் தலைவர் தினேஷ் சர்மா கூறும் போது, "உலகிலேயே மக்கள் தொகை அதிகம் உள்ள சீனாவில் ஆளும் கம்யூனிஸ்ட் கட்சிக்கு 8.6 கோடி உறுப்பினர்கள்தான் உள்ளனர். ஆனால், பா.ஜ.கவுக்கு 8.8 கோடி உறுப்பினர்கள் உள்ளனர். பா.ஜ.கவில் உறுப்பினர்களைச் சேர்க்க, 'டயல் எ மெம்பர்ஷிப்' திட்டம் கடந்த 4 மாதங்களுக்கு முன் தொடங்கப்பட்டது. அப்போது பா.ஜ.கவில் 10 கோடி உறுப்பினர்களை சேர்க்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டது.

இந்திய பிரதமர் நரேந்திர மோடி தொலைபேசியில் உறுப்பினர்கள் பதிவை புதுப்பித்து இத்திட்டத்தைத் தொடங்கி வைத்தார். தொலைபேசி மூலம் பா.ஜ.கவில் உறுப்பினராகும் இத்திட்டம் இன்றுடன் நிறைவடைகிறது. (இ-5)

# பா.ஜ.க.மூத்த தலைவர்களுக்கு உச்சநீதிமன்று அழைப்பாணை

(டில்லி)

**பாபர் மசூதி இடிக்கப்பட்ட வழக்கு தொடர்பாக பா.ஜ.க. மூத்த தலைவர் எல். கே. அத்வானி உட்பட 20 பேருக்கு உச்ச நீதிமன்றம் அழைப்பாணை அனுப்பியுள்ளது.**

பாபர் மசூதி இடிப்பு வழக்கில் குற்றம் நிரூபிக்கப்படாததால், அத்வானி உள்ளிட்ட தலைவர்கள் மீதான சதிக் குற்றச்சாட்டை உத்தரப் பிரதேச மாநிலம் ரேபரேலி நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

இதை எதிர்த்து அலகாபாத் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. ஆனால், ரேபரேலி நீதிமன்ற உத்தரவையே கடந்த 2010இல் அலகாபாத் உயர் நீதிமன்றமும் உறுதி செய்தது.

தொடர்ந்து, பாபர் மசூதி இடிப்பு வழக்கில் அத்வானி, முரளி மனோகர் ஜோஷி, உமாபாரதி, கல்யாண் சிங் ஆகியோர் மீது சுமத்தப்பட்ட சதி குற்றச்சாட்டு நீக்கப்பட்டதை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

ஹாஜி மெஹபூப் அகமது என்பவர் மனுத் தாக்கல் செய்தார். இவர் பாபர் மசூதி இடிப்புக்கு எதிரான வழக்கு தொடர்ந்தவர்களில் ஒருவராவார். இவரே, அலகாபாத் நீதிமன்ற உத்தரவை எதிர்த்தும் தனியாக வேறொரு மனுவை உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார்.



அந்த மனுவில், அத்வானி உள்ளிட்டவர்கள் மீதான குற்றச்சாட்டை இரத்து செய்த அலகாபாத் நீதிமன்ற உத்தரவு செல்லாது என அறிவிக்குமாறு கோரியிருந்தார். மேலும், மத்தியில ஆட்சி மாற்றத்தால் சிபிஐ இந்த வழக்கை திசை திருப்ப வாய்ப்பிருக்கிறது என்றும் குறிப்பிட்டிருந்தார்.

இந்நிலையில், இந்த மனு உச்ச நீதிமன்றத்தில் இன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இந்த மனு நீதிபதிகள் ஹெச்.எல். தத்து மற்றும் சி.கே.பிரசாத் அடங்கிய அமர்வு முன் விசாரணைக்கு வந்தது.

மனுவை விசாரித்த நீதிபதிகள் பாபர் மசூதி இடிக்கப்பட்ட வழக்கு தொடர்பாக பா.ஜ.க. மூத்த தலைவர எல்.கே.அத்வானி உட்பட 20 பேருக்கு அழைப்பாணை அனுப்பி உத்தரவிட்டது. அழைப்பாணை மீது வாரங்களுக்குள் பதிலளிக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (இ-5)

# 29வயதேயான இளம்பெண்ணை கரம்பிடித்த 67 வயது அமைச்சர்



(டாக்கா)

பங்களாதேஷின் புகையிரத சேவை அமைச்சராக உள்ள முஜிபுல ஹக் 67 வயதான இவர் 29 வயதேயான அழகிய இளம் பெண்ணை திருமணம் செய்து கொண்டுள்ளார்.

பங்களாதேஷின் மீர்கோலா கிராமத்தில் வெகு விமரிசையாக இந்த திருமணம் நடைபெற்றுள்ளது. அமைச்சர் முஜிபுல் ஹக் உறவினர்கள் மட்டும் சுமார் 700 பேர் வரை இந்த திருமணத்தில் பங்கேற்றுள்ளனர்.

டாக்கா - சிட்டகாங் தேசிய நெடுஞ்சாலையின் பல இடங்களில் திருமண வரவேற்புக்காக ஏராள மான அலங்காரங்கள் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

# வருகிறார் ராகுல் காங். அறிவிப்பு

இந்தியாவின் தலைநகர் டில்லியில் எதிர்வரும் 19 ஆம் திகதி நடைபெறும் பொதுக்கூட்டத்தில் ராகுல் காந்தி பங்கேற்பார் என்று காங்கிரஸ் கட்சி தெரிவித்துள்ளது.

நிலம் கையகப்படுத்துதல் அவசர சட்டத்தை எதிர்த்து காங்கிரஸ் சார்பில் விவசாயிகள் பங்கேற்கும் பொதுக்கூட்டம் எதிர்வரும் 19 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதில் ராகுல் காந்தி பங்கேற்று பேசுவார் என்று காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் திக்விஜய் சிங் நேற்று முன்தினம் தெரிவித்தார்.

முன்னதாக காங்கிரஸ் துணைத் தலைவர் ராகுல் காந்தி கட்சிப் பணியில் இருந்து தற்காலிக விடுப்பில் செல்வதாக கடந்த பெப்ரவரி மாதம் 23 ஆம் திகதி கட்சி சார்பில் அறிவிக்கப்பட்டது. சுமார் 2 வாரத்தில் அவர் கட்சிப் பணிக்கு திரும்புவார் என அப்போது கூறப்பட்டது.

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடர தொடங்கிய நிலையில் ராகுல் விடுப்பில் சென்றது அப் போது பல்வேறு கேள்விகளையும், சந்தேகங்களையும் ஏற்படுத்தியது. கட்சியின் தொடர் தோல்வியால் ராகுல் விரக்தியடைந்துவிட்டார் என்றும், கட்சியில் தனது முடிவுகளை செயற்படுத்த முடியாததால் வெறுப்படைந்துவிட்டார் என்றும் கூறப்பட்டது.

எனினும் இருவாரங்களுக்குப் பிறகும் ராகுல், பொது நிகழ்ச்சிக[illegible] எதிலும் பங்கேற்கவில்லை. அவர் எங்கு சென்றுள்ளார் என்ற தகவலும் தெரியவரவில்லை. இந்நிலையில ராகுல் காந்தியின் அமேதி தொகுதயில் அவரை காணவில்லை என்று கூறி ஒட்டப்பட்ட போஸ்டரால் பரபரப்பு ஏற்பட்டது. ராகுல் எங்கிருக்கிறார்? என்ன செய்கிறார்? என்பது குறித்து ஒவ்வொரு நாளும் வெவ்வேறு விதமான தகவல்கள் வெளியாகின. இந்நிலையில் இந்த பரபரப்புகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் எதிர்வரும் 19 ஆம் தி கதி டில்லியில் காங்கிரஸ் கட்சி நடத்தும் விவசாயிகள் பொதுக் கூட்டத்தில் ராகுல் பங்கேற்பார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

# மனித முகத்துடன் வெள்ளாட்டுக்குட்டி



(மொஸ்கோ)

தென் மேற்கு ரஷ்யாவின் தகிஸ்தான் பகுதியைச்சேர்ந்த விவசாயி பிலாசியஸ் லாவ்ரெண்டிவ் என்பவரது வெள்ளாடு ஈன்ற குட்டிகளில் ஒன்று தாடி வைத்த- பெரிய மூக்கு கொண்ட ஒரு கோபக்கார கிழவன் முறைப்பதைப் போன்ற முக அமைப்புடன் பிறந்துள்ளது.

விசித்திர முகத்துடன் கூடிய ஆட்டுக்குட்டி பிறந்துள்ளதாக கிடைத்த தகவலையடுத்து ஊர் மக்கள் அதை பார்க்க ஆவலுடன் திரண்டு வந்தனர். கருவுற்றிருந்த வேளையில் அந்த தாய் ஆட்டுக்கு விற்றமின் ஏ சக்தி நிறைந்த உணவு வகைகள் அதிகமாக அளிக்கப்பட்டதால் இந்த முக அமைப்பு உருவாகி இருக்கலாம் என கால்நடை வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், இச்செய்தியை அறிந்த ஒரு சர்க்கஸ் நிறுவன ஏஜெண்ட் அந்த விசித்திர வெள்ளாட்டுக் குட்டியை சராசரி விலையை விட 10 மடங்கு விலை தந்து அதை வாங்கிக் கொள்வதாக உறுதியளித்துள்ளார்.

இந்த பேரத்திற்கு பிறகு விசித்திர ஆட்டுக் குட்டியை வாங்க போட்டி போட்டு பல பேர் விலையை உயர்த்தி வருகின்றனர். ஆனால் விற்பது தொடர்பாக எந்த முடிவுக்கும் வராத பிலாசியஸ் எனது ஆட்டுக்குட்டி சாப்பாட்டு மேசையின் மீது இறைச்சியாக இருப்பதையோ, காட்சிப் பொருளாக மாறுவதையோ விரும்பவில்லை என கூறி வருகிறார். (இ-5)

# காஷ்மீரில் வெள்ளப் பெருக்கால் இதுவரை 16 பேர் உயிரிழந்தனர்

(ஸ்ரீநகர்)

இந்தியாவின் ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில் கடந்த 2 நாட்களாக பலத்த மழை பெய்து வருகிறது. இதனால் மாநிலத்தில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. பல இடங்களில் நிலச்சரிவுகள் ஏற்பட்டன.

இதில் 4 பெண்கள், ஒரு குழந்தை உட்பட 7 பேர் உயிரிழந்தனர். அந்த வீடுகளில் வசித்து வந்த மேலும் 10 பேர் இடிபாடுகளில் சிக்கியுள்ளனர். புத்காம் மாவட்டத்தில் நேற்று 6 உடல்கள் மீட்கப்பட்டுள்ளதாகவும், பலி எண்ணிக்கை மொத்தம் 16 ஆக உயர்ந்துள்ளது. எனினும் மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளை அரசு நிர்வாகம் சிறப்பான முறையில் மேற்கொண்டு வருகிறது. மக்கள் பீதியடையத் தேவையில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*தீய காரியங்களை செய்கின்றவர்கள் திட்ட மிட்டுச் செய்தாலும் அவர்கள் ஏமாந்து விடுகிறார்கள்.* – ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## மகிந்தவின் மாளிகையைப் பார்த்து பிரதமர் ரணில் வாய்பிளந்தது ஏன்?

கீரிமலையில் ஒரு பெரும் மாளிகையை ஜனாதிபதியாக இருந்த மகிந்த ராஜபக்ஷ கட்டிவித்தார். தானும் தனது குடும்பமும் விரும்புகின்ற போதெல்லாம் வந்த தங்குவதற்கே இப்படி ஒரு மாளிகையை அவர் தோற்றுவித்தார்.

ஒரு சில தடவைகள் மாளிகையில் மகிந்த தங்கியிருந்ததும் உண்டு. கீரிமலையில் அமைக்கப்பட்ட மாளிகையைப் பார்ப்பதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மறுத்து விட்டார். மக்களின் வரிப்பணத்தில், தமிழர்களின் நிலப்பரப்பில் இப்படி ஒரு மாளிகை தேவைதானா? என்பது அவர் உள்ளத்தில் எழுந்த கேள்வி. அதன் காரணமாக மாளியைப் பார்க்க ஜனாதிபதி மைத்திரி மனம் கொள்ளவில்லை.

அதுமட்டுமன்றி அந்த மாளிகையை வடக்கு மாகாண முதலமைச்சரின் அலுவலகமாக பயன்படுத்துவதற்கும் ஜனாதிபதி மைத்திரி இணக்கம் தெரிவித்தார்.

தமிழர் தாயகத்தில் அமைக்கப்பட்ட மாளிகை தமிழ் மக்களின் அரச நிர்வாகத்திற்கு பயன்படுத்துவது நல்லது என்ற உயர்ந்த எண்ணத்தில் ஜனாதிபதி மைத்திரி அப்படி ஒரு நினைப்பைக் கொண்டிருந்தார்.

இது ஒரு புறம் இருக்க அண்மையில் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கீரிமலையில் மகிந்த ராஜபக்ஷ அமைத்த மாளிகையை நேரில் சென்று சுற்றிப் பார்த்தார்.

உலகில் உள்ள எந்தக் ஹோட்டல்களும் அதற்கு ஈடாகாது என்று விமர்சனம் செய்துள்ளார். உலகில் உள்ள எந்த நட்சத்திர விடுதிகளும் கீரிமலை மாளிகைக்கு ஈடாகாது என்பதன் ஊடாக, இலங்கையில் –கீரிமலையில் அப்படி ஒரு மாளிகை என்று கூறுவது ரணில் விக்கிரமசிங்கவின் நோக்கமன்று.

மாறாக, கீரிமலையில் அமைக்கப்பட்ட பெறுமதியான மாளிகை வடக்கு மாகாண சபைக்கு கிடைத்துவிடுமோ என்று ஏக்கம் கொண்ட பிரதமர் ரணில அதைத் தடுத்து நிறுத்துவதற்காகவே மேற்போந்த கருத்தை முன்வைத்தார் என்று கூறலாம்.

ஏற்கெனவே யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கீரிமலை மாளிகையை வடக்கின் முதலமைச்சரிடம் கையளிகக விருப்பம் தெரிவித்திருந்தார் அல்லவா? எனவே, அதைத் தடுக்க வேண்டும். அதற்கான ஒரு உபாயமே உலகில் எங்கும் இல்லாத நட்சத்திர ஹோட்டலாக கீரிமலை மாளிகை அமைந்துள்ளது என பிரதமர் ரணில் முன்மொழிந்தார்.

அத்துடன் கீரிமலையில் உள்ள மாளிகையை ஆறு நட்சத்திர விடுதியாக மாற்ற வேண்டும் என்றும் பிரதமர் ரணில் திருவாய் மலர்ந்துள்ளார்.

தமிழர்களின் பயன்பாட்டிற்கு கீரிமலை மாளிகையை வழங்கக் கூடாது என்பதற்காக பிரதமர் ரணில் திட்டம் தீட்டி விட்டார் என்பது புரிகிறது.

ஆக, கீரிமலையில் அமைக்கப்பட்ட மாளிகை தொடர்பில் பிரதமர் ரணில் சிங்கள மக்களுக்கு ஒரு செய்தியை தெரியப்படுத்தி விட்டார்.

எனவே, கீரிமலை மாளிகையை வடக்கு மாகாண சபைக்கு ஜனாதிபதி மைத்திரி வழங்க முன்வந்தாலும், அதற்கு சிங்கள மக்களும், சிங்கள அரசியல் கட்சிகளும் எதிர்ப்புத் தெரிவிப்பர் என்பது இப்போது உறுதியாயிற்று.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கீரிமலையில் அமைத்த மாளிகை என்பது வடக்கு மாகாண அரசுக்குச் சொந்தமாகும் போதே அதில் நியாயத்துவம் இருக்க முடியும்.

எனவே, கீரிமலை மாளிகையைப் பெற்றுக் கொள்வதற்கு வடக்கின் முதலமைச்சர் விக்னேஸ்வரனும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையும் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

ஜனாதிபதியாக பதவி ஏற்ற பின் முதற்தடவையாக யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வடக்கின் முதலமைச்சரிடம் கூறிய முதலாவது செய்தி கீரிமலை மாளிகையை நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள் என்பதுதான்.

ஆகவே, மைத்திரி கூறிய முதலாவது வாக்கு காப்பாற்றப்படவேண்டும். இதற்கு எவர் ஊறு விளைவிக்க முற்பட்டாலும் அதனை வெட்டி ஆள்வது தமிழ் அரசியல் தலைமைகளின் கடமை. தமிழர்களின் தாயகத்தில் இப்போது ஆறு நட்சத்திர ஹோட்டல்களுக்கு எந்த அவசியமும் கிடையாது என்பதால், கீரிமலை மாளிகை வடக்கு மாகாணத்தின் சொத்தாகட்டும். இதற்கான முயற்சிகள் காலம் தாழ்த்த தப்படாமல் முன்னெடுக்கப்பட வேண்டும்.

# தாயகம்,தேசியம், சுயநிர்ணயம் என்ற கோட்பாடுகளை முன்னெடுக்கும் மையமே வடக்கு மாகாண சபை

## அவைத் தலைவர் சீ.வீ.கே. தெரிவிப்பு

தாயகம், தேசியம், சுயநிர்ணயம் என்ற கோட்பாடுகளில் மிகத் தெளிவாக அந்த இலக்கை நோக்கி நகர்கின்ற ஒரு மையமாகவே மாகாண சபையை முன்னெடுக்கின்றோம் என வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தெரிவித்துள்ளார். நல்லூர் சங்கிலியன் மன்றக் கட்டடத் தொகுதி திறப்பு விழா அண்மையில் நடைபெற்றபோது பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழர்கள் வரலாற்றில் கடந்த 65 வருடங்களாக இந்த நாடு சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்து சிங்கள இனவாதிகளால் புறக்கணிக்கப்படுகின்றோம் என்ற உணர்வோடு எங்களது அரசியல் நகர்கின்றது. இன்றும் அதுவே உள்ளது. நாங்கள் இதுவரை ஒரு எதிர்ப்பு அரசியலை செய்து வந்தவர்கள் அந்த மனோபாவம் இப்பொழுதும் எங்களிடம் இருக்கின்றது. இந்திய அரசாங்கம் கூட நாங்கள் எதிர்பார்த்த அளவுக்கு இயங்கவில்லை என்ற ஆதங்கமும் கவலையும் எங்களிடம் இருக்கின்றது.

நான் உள்ளூராட்சி சேவையிலும் கூட்டுறவுத் துறையிலும பலகாலம் சேவையாற்றியிருக்கிறேன். மாகாண சபைக்கு வருவதற்கு முன் நான் செய்த சேவை களை தற்போது செய்ய முடியாதுள்ளது என்ற கவலையும் ஆதங்கமும் என்னிடம் இருக்கின்றது.

மாகாண சபையைப் பொறுத்த வரையில் 13ஆவது திருத்தச் சட்டமோ, மாகாண சபை முறைமையோ எங்களுடைய அபிலாஷைகளை பூர்த்தி செய்யாது என்று கூறிக்கொண்டிருக்கிறோம்.

1987ஆம் ஆண்டில் 13ஆவது திருத்தச்சட்டத்தை மாகாண சபை வரைவை முன்வைத்துபோது அப்போதைய அரசியல் தலைவர்களான அமிர்தலிங்கம், சிவசிதம்பரம், சம்பந்தன் ஆகியோர் இது எற்றுக் கொள்ளக் கூடிய முறைமை அல்ல என்று கூறியிருக்கின்றார்கள். அந்த நிலைமை இன்றும் இருக்கிறது.

தேர்தல் காலத்திலும் சரி, இப்பொழுதும் சரி மாகாண சபை முறைமை என்பது 13ஆவது திருத்தச்சட்டம் என்பது எங்களுடைய அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யாது என்பதை நாங்கள் தெளிவாக உணர்ந்திருக்கிறோம்.

மாகாண சபையை எங்களுடைய உரிமைகளை ஜனநாயகரீதியில் பேசக் கூடிய, பிரதிநிதித்துவப்படுத்தக்கூடிய சர்வதேசத்தோடு பேசக்கூடிய ஒரு பலமாகப் பாவிக்கவேண்டும் என்று சொன்னோம். இப்பொழுதும் அவ்வாறே இயங்கி வருகிறோம். அப்படி இல்லை என்றால் பல விடயங்களை ஆக 13 நாடாளுமன்ற உறுப்பினர்கள் மட்டுமே பேசக்கூடிய ஒரு நிலை உருவாகியிருக்கும். இந்த நிலையைப் போக்கவே 2011இல் கிழக்கு மாகாணத்திலும் 2013இல் வடக்கு மாகாணத்திலும் போட்டியிட்டோம். இதையொரு பலமாகப் பாவிப்பதற்காக.முன்னைய அரசினால் எங்களுக்கு எதிராக ஒரு குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டிருந்தது. ஒதுக்கப்பட்ட நிதி முறையாகச் செலவழிக்கவில்லை என்று குறைசொல்லப்பட்டது. அது உண்மையல்ல என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# நாட்டுக்கான கடமைகளை ஆற்ற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது- மகிந்த ராஜபக்ஷ

நாட்டுக்கான கடமைகளை ஆற்ற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரி வித்துள்ளார். நாட்டின் தற்போதைய நிலைமையை பார்த்தால், சில கடமைகளை செய்ய வேண்டிய சூழ்நிலைமை உருவாகியுள்ளது.

குறுகிய காலத்தில் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தின் மூலம் நாட்டுக்கு ஏற்பட்டுள்ள நிலைமயை மக்கள் நன்கு புரிந்து கொண்டுள்ளனர்.

என்னையும் எனது குடும்பத்தாரையும் என்னைச் சுற்றி இருப்பவர்களையும் இந்த அரசாங்கம் பழி வாங்கி வருகின்றது.

இந்த நடவடிக்கையினால் அரச அதிகாரிகள் ஊழியர்கள் பல மணித்தியாலங்கள் இரகசிய பொலிஸ் நிலையங்களில் அலைந்து திரிய நேரிட்டுள்ளது.

1931ஆம் ஆண்டு முதல் ராஜபக்ஷக்கள் அரசியலில் ஈடுபட்டு வருகின்றனர். எனினும் இவ்வாறானஓர்நெருக்கடியான நிலைமை எமக்கு ஒரு போதும் ஏற்பட்டதில்லை. தற்போதைய அரசாங்கம் சேறு பூசல்களிலேயே அதிகளவு கவனம் செலுத்தி வருகின்றது.

எனது பாதுகாப்பு பாரியளவில் குறைக்கப்பட்டுள்ளது, இதனால் பாரியளவு பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பண்டாரகம விஹாரையில் நடைபெற்ற மத வழிபாட்டு நிகழ்வில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை பங்கேற்று அங்கிருந்த மக்களிடம் இந்தக் கரு த்துக்களை அவர் வெளியிட்டுள்ளார்.(இ-5)

## சுன்னாகம் பதி ஐயனார் தேர்த்திருவிழா நாளை

(சுன்னாகம்)

வரலாற்று பிரசித்தி பெற்ற சுன்னாகம் தாளையம்பதி ஐயனார் தேவஸ்தானத்தின் வருடாந்த மகோற்சவம் கடந்த 24.03.2015 கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறுகின்றது.

இதில் நாளை வியாழக்கிழமை காலை 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுதினம வெள்ளிக்கிழமை முற்பகல் தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளது. (11)

## அவசர சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட தொண்டராசிரியர்களுக்கான அவசர கலந்துரையாடல் ஒன்று நாளை (02.04.2015) வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு ஆரிய குளத்தடியில் அமைந்துள்ள புதிய உயர் கல்லூரியில் நடைபெறவுள்ளதால் அனைத்து தொண்டராசிரியர்களையும் தங்கள் கோவை களை அவசரமாகக் கையளிக்குமாறு சங்கத் தலைவர் கேட்டுள்ளார். (11)

## மணவாளக்கோல திருவிழா

நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயத்தில 2015ஆம் ஆண்டுக்குரிய மணவாளக் கோலத்திருவிழா மிகச் சிறப்பான முறையில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

அன்றைதினம் பூசைகள் காலை 8.00 மணிமுதல் ஆரம்பமாகி அம்பாளுக்கு 1008 சங்காபிஷேகமும் இடம்பெறும். (11)

## பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

### குன்றாத அன்பு வேண்டும்



✦ பெண்ணாசையிலும், பொன்னாசையிலும் மனத்தை அலையவிட்டு நாமத்தை மாத்திரம் நாவால் உச்சரிப்பதால் என்ன பலன்?

✦ தெரிந்தோ, தெரியாமலோ, தன்னறிவுடனோ, அறிவில்லாமலேயோ எந்த ஸ்திதியிலாகட்டும், ஒருவன் பகவந்நாமத்தை சொல்வானானால் அவனுக்கு அதன் பலன் கிட்டும். தானாகவே விரும்பி ஆற்றுக்குப் போய்க் குளிப்பவனுக்கும், வேறொருவனால் ஆற்றில் தள்ளப்படுபவனுக்கும் அல்லது தூங்கும்போது வேறொருவன் கொட்டிய தண்ணீரில் நனைபவனுக்கும் ஸ்நான பலன் ஒருங்கே ஏற்படுகிறது அல்லவா?

✦ பக்தி வேண்டும் குன்றாத அன்பு வேண்டும் அநித்யப் பொருள்களான பொன், புகழ், போகம் இவைகளிலுள்ள பற்றுதல் அகல வேண்டும்.

✦ பக்தியுடன் பகவந் நாமத்தைப் பாடு. அப்போது மலைபோலக் குவிந்திருக்கும் உனது பாவங்கள் எல்லாம் நெருப்புப் பொறி ஒன்றினால் மலைபோலக் குவிந்த பஞ்சுப்பொதிகள் எரிந்து சாம்பலாவதைப் போல நசித்துப் போய்விடும்.

✦ உலக வாழ்க்கையினர் செய்யும் பக்தி சாதனைகள் தற்காலிகமேயாம். அவைகள் நிலையான அடையாளங்களை உண்டாக்குவது இல்லை.

✦ சாந்தமான இடத்தில் உட்கார்ந்து கொண்டு பகவந்நாமத்தை மௌனமாக உச்சரிப்பதுதான் ஜபம். ஏகாக்ர சித்தத்துடன் ஒருவன் ஜபம் செய்வானானால் அவன் நிச்சயமாக ஈஸ்வரனை அடைவான்.

✦ கைகளினால் தாளம் போட்டுக்கொண்டே இனிமையான ஹரிநாம சங்கீர்த்தனம் செய் இவ்வாறு செய்தால், உன் மனத்திலுள்ள தீய சிந்தனைகள் எல்லாம் அகன்றுவிடும்.

✦ அதைரியம், துவேஷம், பயம் இவைகள் குடி கொண்டிருக்கும் இடத்திற்கு ஈஸ்வரன் வருவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாக். அணித்தலைவராக ஆஷர் அலி நியமனம்




பாகிஸ்தான் ஒருநாள் சர்வதேசப் போட்டிகளுக்கான அணியின் தலைவராக ஆஷர் அலி நியமிக்கப்பட்டுள்ளார். தற்போதைய பாகிஸ்தான் அணியில் இடம் பிடிக்காத ஆஷர் அலி, இரண்டு வருடங்களின் பின்னர் அணித்தலைவராக பாகிஸ்தான் அணியில் இடம் பிடித்துள்ளார். மிஸ்பா உல் ஹக், ஓய்வு பெற்றதை தொடர்ந்து அவரின் இடத்துக்கு அணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டு தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். இந்த முடிவை பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் தலைவர் சகரியார் கான் எடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

30 வயதான ஆஷர் அலி, 14 ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் மாத்திரமே விளையாடியுள்ளார்.

உள்ளூர்ப் போட்டிகளில் தலைவராக கடமையாற்றிய அனுபவம், கிரிக்கெட் வீரர்கள் மற்றும் கிரிக்கெட் சபையுடன் உள்ள நல்ல உறவு என்பன இவர் அணித் தலைமை பொறுப்பை பெற வாய்ப்புக்களை வழங்கியுள்ளது.

மிஸ்பா உல் ஹக், வொக்கார் யூனிஸ் ஆகியோரும் இவரை பரிந்துரை செய்துள்ளனர். பாகிஸ்தான் அணியின் அண்மைக்கால அதிரடி துடுப்பாட்ட வீரராக மாறியுள்ள விக்கெட் காப்பாளர் சப்ராஸ் அஹமட் உப தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். இவருக்கே 20-20 போட்டிகளின் உப தலைவர் பதவி வழங்கப்பட்டுள்ளது.

டெஸ்ட் போட்டிகளின் தலைவராக மிஸ்பா உல் ஹக் தொடரும் அதேவேளை உபதலைவராக ஆஷர் அலி நியமிக்கப்பட்டுள்ளார். 20-20 போட்டிகளின் தலைவராக சாகித் அப்ரிடி தொடர்கின்றார்.

கடந்த இரண்டு வருட காலமாக ஆஷர் அலி அணியில் இடம் பிடிக்கவில்லை என்பது எனக்கு தெரியும். ஆனால் அவர் அண்மைய உள்ளூர்ப் போட்டிகளில் காட்டிய திறமை அவர் அணியில் இடம்பிடிக்க போதுமானது என பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் தலைவர் கூறியுள்ளார். (க)

## சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து வெட்டோரி முழுமையாக ஓய்வு




நியூசிலாந்து அணியின் சுழற் பந்து வீச்சாளரான டேனியல் வெட்டோரி சர்வ தேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

நியூசிலாந்து அணியின் முன் னணி சுழற்பந்து வீச்சாளர் டேனியல் வெட்டோரி, கடந்த 1997 ஆம் ஆண்டு இளம் வீரராக தன் கிரிக்கெட் வாழ்க்கையை தொடங்கினார்.

உலகக் கிண்ண அணியில் இடம்பெற்றிருந்த வெட்டோரி, சிறப்பான முறையில் பந்துவீசி, 9 போட்டிகளில் 15 விக்கெட்டுகளை எடுத்தார்.

இந்நிலையில் தான் அனைத்து வகை கிரிக்கெட் போட்டியில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் கூறுகையில்,

உலகக் கிண்ணப் போட்டி தான் நியூசிலாந்து அணிக்காக நான் விளையாடிய கடைசி போட்டி. என்னுடைய கிரிக்கெட் வாழ்க்கையில் அது சிறப்பானதாக முடிந்தது. அந்த போட்டியில் வெற்றி பெற்றிருந்தால் அது இன்னும் சிறப்பாக இருந்திருக்கும் என்று தெரிவித்துள்ளார். (க)

## மியாமி ஓபன் டென்னிஸ்; நடால் அதிர்ச்சி தோல்வி

SPORTS
விளையாட்டுச் செய்திகள்



மியாமி ஓபன் டென்னிஸ் போட்டிகளில் நான்கு முறை இரண்டாமிடம் பிடித்த ரபேல் நடால், 3 ஆவது சுற்று ஆட்டத்தில் அதிர்ச்சி தோல்வியடைந்தார்.

கடந்த ஞாயிறன்று நடைபெற்ற ஆண்கள் 3 ஆவது சுற்று ஆட்டத்தில் ஸ்பெயினின் பெர்னாண்டோ வெர்டாஸ்கோவிடம் 6-4, 2-6, 6-3 என்ற செட் கணக்கில் நடால் அதிர்ச்சி தோல்வியடைந்தார். டென்னிஸ் ஒற்றையர் தர வரிசை பட்டியலில் 2 ஆவது இடத்தில் உள்ள நடாலை 34 ஆவது இடத்தில் உள்ள வெர்டாஸ்கோ வீழ்த்தினார்.

இது குறித்து அவர் கருத்து வெளியிடுகையில், நடால் போன்ற சிறந்த வீரரை எதிர்த்து விளையாடி வெற்றி பெறுவது டென்னிசில் மிகப்பெரிய விடயம் என்றார். டென்னிஸ் வரலாற் றில் மிக உயர்ந்த இடத்தை பிடித்த வீரரை தோற்கடித்தது உண்மையிலேயே மகிழ்ச்சியாக இருந்தது என வெர்டாஸ்கோ தெரிவித்துள்ளார். (க)

## ஆஸியின் அடுத்த தலைவராக ஸ்டீபன் ஸ்மித்தை நியமியுங்கள்

பொண்டிங் ஆலோசனை




அவுஸ்திரேலியா அணியின் அடுத்த அணித்தலைவராக ஸ்டீவன் ஸ்மித்தை நியமிக்க வேண்டும் என அந்த அணியின் முன்னாள் தலை வர் ரிக்கி பொண்டிங் ஆலோசனை வழங்கியுள்ளார்.

2015 ஆம் ஆண்டுக்கான உலகக் கிண்ண இறுதிப் போட்டியுடன் ஒருநாள் போட்டிகளில் இருந்து மைக்கல் கிளார்க் ஓய்வு பெற்றார்.

இதனால் அடுத்த தலைவர் யார்? என்ற கேள்வி எழுந்துள்ளது. கிளார்க் காயத்தால் விளையாட முடியாத போட்டிகளில் ஜார்ஜ் பெய்லி அணித் தலைவராக செயற்பட்டு வந்தார்.

ஆனால் கிளார்க் விளையாடிய உலகக் கிண்ணப் போட்டிகளில் சாதாரண வீரராக கூட பெய்லிக்கு அணியில் இடம் கிடைக்கவில்லை.

இதுபற்றி பொண்டிங் கருத்து வெளியிடுகையில், ஜார்ஜ் பெய்லியின் கப்டன்ஷிப் எனக்கு மிகவும் பிடிக்கும், அதே வேளை ஸ்மித்தை தலைவராக அறிவிக்க இதுவே சரியான தருணம்.

மூன்றாவதாக களமிறங்கி அற்புதமாக ஆடி வருகிறார். டெஸ்ட் போட்டிகளிலும் சிறப்பாக ஆடிவருகிறார். இன்னும் சில ஆண்டு-களில் கிளார்க் டெஸ்ட் போட்டிகளிலிருந்தும் ஓய்வு பெற்று விடுவார்.

அவுஸ்திரேலியாவின் அடுத்த தலைவராக ஸ்மித்தை நியமிப்பதே சரியான முடிவாக இருக்கும் என தெரிவித்துள்ளார். (க)

## இந்தியாவின் தோல்வி; அப்ரிடி புன்னகை




இந்தியா சந்தித்த இந்த தோல்வியை தொடர்ந்து, பாகிஸ்தான் மற்றும் வங்கதேச ரசிகர்கள் இந்திய கிரிக்கெட் வாரியத்துக்கு போன் செய்து, மோக்கா மோக்கா என்ற பாடலை பாடி கிண்டல் செய்தது குறிப்பிடத்தக்கது. (க)

உலகக்கிண்ண தொடரில் பாகிஸ்தான் அணி இதுவரை இந்திய அணியை வெற்றி கொள்ளாதது குறித்து மோக்கா மோக்கா என்ற விளம்பரம் வெளியிடப்பட்டது.

இந்த விளம்பரம் பாகிஸ்தான் வீரர்களை கிண்டல் செய்யும் விதமாக தயாரிக்கப் பட்டிருந்தன.

மக்கள் மத்தியில் பலத்த பிரபலம் அடைந்த இந்த விளம்பரம் குறித்து பாகிஸ்தான் வீரர் சாகித் அப்ரியிடம், ஒரு தனியார் தொலைக்காட்சி நிறுவனம் கேள்வி எழுப்பியது.

அதாவது, இந்தியாவுடனான தோல்வி, மோக்கா மோக்கா விளம்பரம் குறித்து உங்கள் மனநிலை என்ன என்று தொகுப்பாளர் கேள்வி கேட்டுள்ளார். அதறகுசிரித்துக் கொண்டே அப்ரிடி, அந்த பாடலை பாடியுள்ளார்.

இதற்கிடையில், காலிறுதியில் வங்கதேச அணியை வீழ்த்தி அரையிறுதிக்கு நுழைந்த இந்திய அணி அவுஸ்திரேலிய அணியிடம் தோல்வியை தழுவியது.

## அவுஸ்திரேலிய டெஸ்ட் அணி அறிவிப்பு



ஆஷஸ் தொடர் மற்றும் மேற்கிந்தியத் தீவுகளுடனான இரண்டு டெஸ்ட்கள் கொண்ட தொடர்களுக்கான 17 பேர் கொண்ட அவுஸ்திரேலிய டெஸ்ட் அணி அறிவிககப்பட்டுள்ளது. இந்த அணியில் சுழல் பந்துவீச்சாளரான பவாட் அஹ்மட், அடம் வோக்ஸ் ஆகியோருக்கு இடம் வழங்கப்பட்டுள்ளது. இந்த இருவரும் இதுவரை அவுஸ்திரேலியா சார்பில் டெஸ்ட் போட்டிகளில் விளையாடியதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அதே போன்று, இதுவரை டெஸ்ட் அறிமுகத்தை மேற்கொள்ளாத பீற்றர் நெவில், பிரட் ஹடினுக்கான மாற்று விக்கெட் காப்பாளராக அறிவிக்கப்பட்டுள்ளார். பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட க்ளென் மக்ஸ்வெல், ஜேம்ஸ் போல்க்னர், ஜோ பேர்ண்ஸ் ஆகியோருக்கு அணியில் இடம் வழங்கப்படவில்லை. இந்த அணியில் இடம்பிடித்திருப்பவர்களில், ரயன் ஹரிஸ் மட்டும் தனிப்பட்ட காரணங்களுக்காக மேற்கிந்தியத் தீவுகளுடனான தொடரில் விளையாடமாட்டார் எனத் தெரிவக்கப்பட்டுள்ளது. அறிவிக்கப் பட்டுள்ள அவுஸ்திரேலிய டெஸ்ட் அணி விபரம்: மைக்கல் கிளார்க் (அணித்தலைவர்), ஸ்டீபன் ஸ்மித் (உப தலைவர்), பிரட் ஹடின், பவாட் அஹ்மட், ரையன்ஹரிஸ், ஜோஸ் ஹஸல்வூட், மிட்செல் ஜோன்சன், நதன் லையோன், மிட்செல் மார்ஷ், ஷோன் மார்ஷ், பீற்றர் நெவில், கிறிஸ் ரொஜர்ஸ், பீற்றர் சிடில், மிட்செல் ஸ்ட்ராக், அடம் வோக்ஸ், டேவிட் வோர்னர், ஷேன் வொட்சன். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயிற்சியில் இராணுவ வீரர் மரணம்

(கரணவாய்)

உடற்பயிற்சியில் ஈடுபட்டபோது மயங்கி விழுந்த இராணுவச் சிப்பாய் மரணமாகியுள்ளார்.

இச்சம்பவம் நேற்று வடமராட்சி நவிண்டில் எள்ளங்குளம் இராணுவ முகாமில் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் குருநாகல் போல்சிற்றிகம பகுதியைச் சேர்ந்த ஜே.என்.சி.ஜெயலத் (வயது - 24) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,

எள்ளங்குளம் இராணுவ முகாமில் உடற்பயிற்சியில் இராணுவத்தினர் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

இதன்போது நேற்றுப் பி.ப 1.30 மணியளவில் பிரஸ்தாப இராணுவச் சிப்பாய் மயங்கி விழுந்துள்ளார்.

உடனடியாக அவர் ஊறணி வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு சிகிச்சையளிக்க முற்பட்டபோதும் அவர் உயிரிழந்துள்ளார். (3.60)

## பரந்தனில் விபத்து ஒருவர் படுகாயம்

நெல் மூடைகளை ஏற்றி வந்த மகேந்திரா கப் வாகனமும் மோட்டார் சைக்கிளும் ஒன்றுடன் ஒன்று மோதியதில் மோட்டார் சைககிளைச் செலுத்தி வந்தவர் படுகாயமடைந்தார்.

இச் சம்பவம் நேற்று மாலை 6.15 மணியளவில் பரந்தன் - முல்லைத்தீவு வீதியில் பரந்தன் சந்திக்கு அண்மையாகவுள்ள கோரக்கன்கட்டு பூங்காவனம் சந்திப்பகுதியில் இடம்பெற்றது.

இவ் விபத்தில் உதயநகர் மேற்கு கிளிநொச்சியைச் சேர்ந்த கதிரேசன் என்பவரே படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (11)

### கிளாலியில் 102...

இணைந்து கிளாலிப் பகுதியில் உள்ள வீடொன்றைச் சுற்றி வளைத்துத் தேடுதல் நடத்தினர்.

இதன்போது அங்கு மறைத்து வைக்கப்பட்டிருந்த 102 கிலோ கஞ்சா மீட்கப்பட்டது. கஞ்சா வைத்திருந்த வீட்டு உரிமையாளர் சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். (11)

### பசிலுக்கு உடல்...

முலனவிற்கு எடுத்துச் சென்று ஒட்ட முற்பட்டபோது பொலிஸாருக்கு தடை ஏற்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் நேற்றைய தினம் பசில் ராஜபக்ஷ விமான நிலையத்தில் வந்திறங்கிய வுடன் கைது செய்யுமாறு பொலிஸாருக்கு உத்தரவிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (11)

### போர்க்குற்ற...

களாகவே காணப்பட்டார்கள்.

ஜெனிவாவிலுள்ள மனித உரிமைகள் பேரவை உள்ளிட்ட அமைப்புக்களின் கொள்கைகளை பின்பற்றுமாறு அவர்களுக்கு தொடர்ந்தும் நான் வலியுறுத்தி வந்தேன் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆதாரங்களுடன் மேற்கொள்ளப்படும் எந்தவொரு விசாரணைகளிலும் பங்கேற்க தான் தனிப்பட்ட முறையில் தயாராகவுள்ளதாகவும், அந்த விசாரணைக்கு உலகத்தின் எந்த மூலையிலிருந்தாலும் பங்கேற்பேன் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நான் இராணுவத் தளபதியாக இருந்த போது எனது கட்டளைகளை மீறி இராணுவத்தினர் தனிப்பட்ட ரீதியில் தவறுகளை செய்திருக்கலாம். ஆனால் முழு இராணுவமும் எந்தவித குற்றச் செயல்களிலும் ஈடுபடவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். (11)

### சந்திரிகாவின்...

பதில் அக்கறை கொண்டிருந்தார்.

அந்தப் பிரச்சினைகளுக்கு அரசியல் தீர்வு காணும் முயற்சிகளையும் ஆரம்பித்திருந்தார். எனினும் அதை வெளிப்படையாக காண முடியவில்லை.

முன்னைய அரசாங்கம் தோற்கடிக்கப்பட்டு, புதிய அரசாங்கம் பதவிக்கு வந்ததில் இருந்து, அரசியல் அரங்கில் பல மாற்றங்கள் இடம்பெறுகின்றன.

சிங்கள மக்களும் மைத்திரிபால சிறிசேனவுக்கு வாக்களித்திருந்தார்கள், தமிழ் மக்கள் பெரும்பான்மையாக அவரை ஆதரித்திருந்தனர். ஜனாதிபதி தேர்தலில் மைத்திரிபால சிறிசேன பெற்ற வெற்றியினால் எல்லோரும் நன்மை பெற வேண்டும்.

தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மதிப்பளிப்பார் என்று நம்புகிறேன். அந்த கோரிக்கைகளை வென்றெடுப்பதில் நாம் தெளிவான கவனம் செலுத்த வேண்டும்.

பொருத்தமான அரசியல் தீர்வு காணுமாறு அனைத்துலக சமூகம் தொடர்ச்சியாக இலங்கை அரசாங்கத்திடம் வலியுறுத்தி வருகிறது என்றும் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார். (11)

### 19ற்கு...

வினால் பாராளுமன்றத்தில் சமர்ப் பிக்கப்பட்டது.

இது நீதிக்கு முரணானது என தெரிவித்து இதுவரை 11 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

அத்துடன் குறித்த சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்கு சர்வஜன வாக்கெடுப்பொன்றை நடத்த தேவையில்லை என மேலும் நான்கு மனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

குறித்த மனுக்களே இன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளன என உயர் நீதிமன்ற தகவல்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை 19-வது அரசியலமைப்பு திருத்த சட்டம் நிறைவேற்றப்பட வேண்டுமானால் சர்வஜன வாக்கெடுப்பொன்றை நடத்த வேண்டும் என ஜாதிக ஹெல உறுமய நேற்று உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (11)

### தமிழ்த் தேசிய....

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை கட்சியாகப் பதிவு செய்வதில் உள்ள நெருக்கடிகள், அடுத்த கட்டச் செயற்பாடுகள் குறித்து ஆராயும் முக்கிய கூட்டம் ஒன்று நேற்று செவ்வாய்க்கிழமை மாலை கொழும்பில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்திலேயே மேற்படி முடிவு எடுக்கப்பட்டது என்று அவர் தெரிவித்தார். நேற்றைய கூட்டத்தில் ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சி சார்பாக க.சுரேஷ் பிரேமச்சந்திரன், சிவசக்தி ஆனந்தன், க.சர்வேஸ்வரன், துரைரட்ணசிங்கம் ஆகியோரும் தமிழரசுக் கட்சி சார்பில் இரா.சம்பந்தன், மாவை சேனாதிராஜா, எம்.ஏ.சுமந் திரன் ஆகியோரும் ரெலோ சார்பாக செல்வம் அடைக்கலநாதன், ஹென்றி மகேந்திரன், சிறிகாந்தா ஆகியோரும் புளொட் சார்பில் ஆர்.ராகவனும் கலந்துகொண்டனர். இந்த சந்திப்பு குறித்து அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்ந்து இயங்கும். புதிய புரிந்துணர்வு செயற்றிட்டம் ஒன்றை உருவாக்கி அதனடிப்படையில் நான்கு கட்சிகளும் செயற்படுவது என்றும், கட்சியை பதிவு செய்வது குறித்தும், அடுத்த கட்ட நகர்வுகள் குறித்தும், புதிய செயற்றிட்டத்தை உருவாக்குவது குறித்தும் எதிர்வரும் 7ஆம் திகதி மீண்டும் கூடி ஆராய்வதென்றும் இந்தக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது என்றார் அவர். (11)

### ஐ.நா.நிபுணர்...

கொண்டு கடந்த ஞாயிற்றுக்கிழமை கொழும்பு வந்தடைந்தார். அவர் பலதரப்பட்டவர்களையும் சந்தித்துப் பேச்சு நடத்தி வருகின்றார். இன்று புதன்கிழமை வடக்கிற்கு வரவுள்ள அவர், இங்கு வடக்கு மாகாணசபையினர் மற்றும் சிவில் சமூகத்தினர் ஆகியோரை சந்தித்துப் பேசவுள்ளார். எதிர்வரும் வெள்ளிக்கிழமை கொழும்பில் இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் அவர் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (11)

## தோனிக்கு நன்றி தெரிவித்து செக் அனுப்பிய பொலிஸ் ஐ.ஜி



உலகக்கிண்ண அரையிறுதி போட்டியில் இந்திய அணி தோல்வியடைந்ததற்கு நன்றி தெரிவித்து உத்தரபிரதேச ஐ.ஜி ஒருவர், அணித்தலைவர் தோனிக்கு செக் அனுப்பியுள்ளார்.

இதுதொடர்பாக உத்தரபிரதேச மாநில பொலிஸ் ஐ.ஜி அமிதாப் தாக்கூர் என்பவர் தோனிக்கு எழுதியுள்ள கடிதத்தில், நீங்கள் இந்திய ரசிகர்களை மகிழ்விக்கும் வகையில் உள்ளீர்கள்.

வளர்ந்து வரும் ஒரு நாட்டில் கிரிக்கெட் போட்டியை காரணம் காட்டி பெரும்பாலான மக்களை வீட்டில் முடங்க செய்திருக்கிறீர்கள். கிரிக்கெட் என்ற போர்வையில் இந்த நாட்டு மக்களை அவர்களது பணிகளில் ஈடுபடாமல் செய்து வந்துள்ளீர்கள்.

உலகக்கிண்ண போட்டியில் அரையிறுதியில் இந்தியா தோல்வி கண்டதால் ரசிகர்கள் கிரிக்கெட் மாயையில் இருந்து விடுபடவும் நீங்கள்தான் காரணம், இதற்காக உங்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன் என கூறியுள்ளார்.

மேலும் இந்திய அணியின் தோல்விக்கு நன்றி தெரிவித்து அவர் தோனியின் ராஞ்சி வீட்டு முகவரிக்கு ஆயிரம் ரூபாய்க்கு காசோலையும் அனுப்பி வைத்துள்ளார். (க)

## மியாமி ஏடிபி ஓபன் டென்னிஸ் போட்டி காலிறுதியில் வில்லியம்ஸ் சகோதரிகள்



அமெரிக்காவின் மியாமி நகரில் நடைபெற்று வரும் ஏடிபி டென்னிஸ் போட்டியில் அமெரிக்காவின் வில்லியம்ஸ் சகோதரிகள் காலிறுதிக்கு முன்னேறி உள்ளனர்.

உலகின் முதல் நிலை வீராங்கனையான செரீனா வில்லியம்ஸ், காலிறுதிக்கு முந்தைய சுற்றில் ரஷ்யாவின் ஸ்வெட்லானா குஸ்னட்சோவாவை 6-2, 6-3 என்ற நேர்செட்களில் வென்றார். இதேபோல் அவரது சகோதரியும் 16-ம் தரநிலை வீராங்கனையுமான வீனஸ், 4ம் தரநிலையில் இருக்கும் கரோலின் வோஸ்னியாகியை 6-3, 7-6(7-1) என்ற செட்கணக்கில் வென்று காலிறுதியை உறுதி செய்தார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவில் நடப்பு சம்பியனான நோவக் ஜோகோவிக், பெல்ஜியம் வீரர் ஸ்டீவ் டார்சிசை வென்று காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறினார். காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இவர், உக்ரைன் வீரர் அலெக்சாண்டர் டோல்கோபோலோவை எதிர்கொள்கிறார். ஜப்பான் வீரர் நிஷிகோரி, கனடாவின் ரவோனிக், அமெரிக்காவின் ஜோன் ஐஸ்னர் ஆகியோரும் இந்த சுற்றில் உள்ளனர். (க)

## சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலினால் ஒரு நாள் தரவரிசை பட்டியல் வெளியீடு



சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் சிறந்த ஒருநாள் துடுப்பாட்ட வீரர்கள், சிறந்த பந்து வீச்சாளர்கள் மற்றும் சிறந்த அணிகளுக்கான தரவரிசைப் பட்டியலை வெளியிட்டுள்ளது.

உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் நிறைவு பெற்றதைத் தொடர்ந்து சர்வதேச கிரிக்கெட் கவுன்சில், புதிய ஒருநாள் தரவ ரிசைப் பட்டியலை வெளியிட்டுள்ளது.

துடுப்பாட்ட வீரர்கள்- ரொப் 10

இந்த பட்டியலில் தென்னாபிரிக்க அணியின் தலைவர் டி வில்லியர்ஸ் 900 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளார், துடுப்பாட்ட வீரர் ஒருவர் 900 புள்ளிகளை கடப்பது தனிச் சிறப்பாக கருதப்படுகிறது.

1. டி வில்லியர்ஸ் (தென்னாபிரிக்கா)
2. குமார் சங்கக்கார (இலங்கை)
3. ஹசிம் அம்லா (தென்னாபிரிக்கா)
4. வீராட் கோஹ்லி (இந்தியா)
5. டில்ஷான் (இலங்கை)
6. ஷிகர் தவான் (இந்தியா)
7. கேன் வில்லியம்சன் (நியூசிலாந்து)
8. மகேந்திரசிங் தோனி (இந்தியா)
9. கிளென் மக்ஸ்வெல் (அவுஸ்திரேலியா)
10. ஜோர்ஜ் பெய்லி (அவுஸ்திரேலியா)

**அணிகள்- ரொப் 10**

ஒருநாள் அணிகளுக்கான பட்டியலில் அவுஸ்திரேலியா முதலிடத்திலும், இந்தியா இரண்டாமிடத்திலும் உள்ளது.

1. அவுஸ்திரேலியா: 122 புள்ளிகள்
2. இந்தியா: 116
3. தென்னாபிரிக்கா: 112
4. இலங்கை: 108
5. நியூசிலாந்து: 107
6. இங்கிலாந்து: 101
7. பாகிஸ்தான்: 95
8. மேற்கிந்திய தீவுகள்: 92
9. பங்களாதேஷ்: 76
10. சிம்பாப்வே: 50

**பந்துவீச்சாளர்கள்- ரெப் 10**

ஒருநாள் பந்துவீச்சாளர்களுக்கான தரவரிசையில் அவுஸ்திரேலிய வேகப்பந்து வீச்சாளர் மிட்சல் ஸ்டார்க் முதல்முறையாக முதலிடத்தை பிடித்துள்ளார்.

உலகக் கிண்ணப் போட்டிகளில் ஸ்டார்க் 22 விக்கெட்டுகளை வீழ்த்தியதோடு தொடர் நாயகன் விருதையும் பெற்றார்.

1. மிட்செல் ஸ்டார்க் (அவுஸ்திரேலியா)
2. இம்ரான் தாஹிர் (தென்னாபிரிக்கா)
3. சையீத் அஜ்மல் (பாகிஸ்தான்)
4. டேல் ஸ்ரெய்ன் (தென்னாபிரிக்கா)
5. சுனில் நரைன் (மேற்கிந்திய தீவுகள்)
6. மிட்செல் ஜோன்சன் (அவுஸ்திரேலியா)
7. ட்ரெண்ட் போல்ட் (நியூசிலாந்து)
8. ஜேம்ஸ் அண்டர்சன் (இங்கிலாந்து)
9.மோர்னே மேர்கல் (தென்னாபிரிக்கா)
10. ஷகிப் அல் ஹசன் (பங்கதேசம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரவிராஜ் கொலையுடன் தொடர்பு கடற்படையினர் மூவர் கைது

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் கொலையுடன் தொடர்புடைய மூன்று சந்தேக நபர்கள பொலிஸாரால்கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

குறித்த சந்தேக நபர்கள் மூவரும் நேற்றைய தினம் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடக பிரிவு தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்டவர்களில் இரண்டு சந்தேக நபர்கள் முன்னாள கடற்படையினர் எனவும் மற்றுமொருவர் தற்போதும் கடற்படையில் கடமையாற்றி வருபவர் எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் உதவி பொலிஸ் அத்தியட்சகருமான ருவன் குணசேகர தெரிவித்துள்ளார்.

தடுத்து வைக்கும் உத்தரவின்பேரில சந்தேகநபர்கள் விசாரணைக்கு உட்படுததப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார.

கடந்த 2006-ம் ஆண்டு கொழும்பல் வைத்து நடராஜா ரவிராஜ் சுட்டு கொலை செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (11)

# ஞானசாரதேரரிடம் விசாரணை

பொதுபல சேனாவின் பொது செயலாளர் ஞானசார தேரர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

இவர் நேற்றைய தினம் விசாரணை க்கு உட்படுத்தப்பட்டதாக தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மதத்தை அடிப்படையாக வைத்து தனிநபர்களுக்கும் சமூகங்களுக்கும் எதிராக மேற்கொள்ளப்படும் வன்முறைகளை குறித்தே ஞானசார தேரரிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (11)

**வட மாகாண...**

லாளராக இருந்த சத்தியசீலன் மீன்பிடி அமைச்சு செயலாளராகவும்,

சுகாதார அமைச்சுச் செயலாளராக இருந்த ரவீந்திரன் கல்வி அமைச்சு செயலாளராகவும்,

சுகாதார அமைச சுச்செயலாளராக திருவாகரனும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இத் திடீர் இடமாற்றங்கள் தொடாபில் தமக்கு கடிதம் கிடைகக் பெற்றுள்ளதாகவும் ஆனால் இது தான் உறுதியான முடிவாக இருக்கலாம் என்பது குறித்து தமக்கு தெரியாது எனவும் இடமாற்றக் கடிதம் கிடைத்த செயலாளர்கள் சிலர் தெரிவித்தனர். (11)


af FRENCH MOVIES - JAFFNA
Alliance Française de Jaffna
cordially invites you to the screening of
LIFE LINES
5 Short Movies From Northern Africa
(1999, 111 min)
on
Thursday 02 April 2015 at 4:00 p.m.
at
Alliance Française de Jaffna
61, Kachcheri-Nallur Road, Jaffna.
Phone: 021 222 8093
French / Arabic Languages. English subtitles. Free entrance
(9948)

DCM யாழ்நகர் சுன்னாகம்
கலை A/L 2017 வர்த்தகம்
தொழில்நுட்பம் (C-529)
புதிய பிரிவுகள் ஆரம்பம்
ஏப்பிரல் 04
யாழ் நகர் - 8.00am
சுன்னாகம் - 3.00pm

BEACON TECH
வெலிங்டன் சந்தி, யாழ்.நகர்.
A/L 2017 தொழில்நுட்ப பிரிவு
பொறியியல் தொழில்நுட்பம் Engineering Tech
தி.ராம்
விஞ்ஞானத்துக்கான தொழில்நுட்பம் Science for Tech
தி.ராம், S.கஜேந்திரன், S.ஸ்ரீதரன் (C-525)
கணக்கீடு R.சுகிர்தன் | பொருளியல் K.பிரதீபன் | வணிகக்கல்வி V.முரளி
ஊடகம் S.S.மனோகரன் | ICT திரு.செல்ரன் | அனைத்து பாடங்களும் சிறப்பாக நடைபெறும்

விஸ்டம்
தொழில் நுட்பக் கல்லூரி
சிவன் கோவில் வடக்கு வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்
ஆரம்பம் A/L - 2017
தொழில்நுட்பப் பிரிவு
புதிய வகுப்புக்கள்
04.04.2015
வெளிமாவட்ட மாணவர்களுக்கு விசேட நேரசூசி ஒழுங்கு செய்து தரப்படும்.
செயல்முறை கற்பித்தலுக்கான
அனைத்து வசதிகளும் கொண்ட வடக்கின் தனித்துவமான முதல்தர தனியார் கல்வி நிறுவனம்.
(9938) 0772487774

தென்னம்குற்றிகள் தேவை
விறகுக்கு கொள்வனவு செய்யப்படும்.
கிலோ: 2 ரூபாய்
தொடர்பு:
நிப்போன் ரான்ஸ்போட் சேவிஸ்
இல.57/11, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
0212222121, 0779505195 (C-503)

லப்டொப் தேவை
நல்ல நிலையில் உள்ள
பாவித்த லப்டொப்கள் (Laptops) தேவை
Call-0779086737 (9952)
GUNAA BEST PC
52, Hospital Road, Jaffna

A/L 2017
கலை - வர்த்தகம் பிரிவு
ஆரம்பம் :- 04.04.2015
காலை 10.00 மணி (C-524)
BEACON வெலிங்டன் சந்தி, யாழ் நகர்

BEACON வெலிங்டன் சந்தி, யாழ்.நகர்.
A/L 2016 வர்த்தகப் பிரிவு
பொருளியல் K.பிரதீபன்
பேரினப் பொருளியல்
ஆரம்பம் 04.04.2015 (சனி) 12 மணி (C-523)
பங்குடமை கணக்கீடு 04.04.2015 11 மணி (சனி)
கணக்கீடு R.சுகிர்தன்

புதிய நாவலர் கல்வி நிலையம்
O/L DAY CLASS
ஆரம்பம் 03.04.2015 வெள்ளி காலை 8.00 மணி
புதிய அனுமதிகளை இன்று முதல் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம் (C-528)

மலிவு நிறைவு 2015-ம் ஆண்டை முன்னிட்டு மலிவு நிறைவு
ஆதி பகவான் மோட்டோர்ஸ் இன்
2-ம் தர மோட்டார் சைக்கிள் தெரிவுகள்
அன்பான வாடிக்கையாளர்களே! உங்கள் மோட்டார் சைக்கிளை நியாயமான விலையில் கொள்வனவு செய்கின்றோம். பெறுமதிமிக்க வாடிக்கையாளர்களே! நீங்கள் விற்பனை செய்யும் Hero, Hero Honda, Tvs, Yamaha, Bajaj இவ் வகை வாகனங்களாக அமைந்தால் உடனே அழையுங்கள்.
தொ.பே :- 077 875 7137 விலாசம் :-
Near the Vinabala CD World, Kondavil East, Kondavil. (9956)

FALC FRENCH LANGUAGE CENTRE
REGISTERED FRENCH CENTRE.
FRENCH CLASSES
Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்ட International Diploma in French
FRANCE, CANADA, SWISS, BELGIUM செல்வோர் கற்கிறார்கள்..
விரிவுரையாளர் : MR. V. JEGAN (Trained teacher in France - 2007, University இல் French விரிவுரைகளை மேற் கொண்டவரும்)
இதுவரையில் எமது ஆசிரியரிடம் 906 பேர் கற்று சென்றுள்ளனர்
Register now : 0779 789 456 / 021 221 7781 (C-447)
ஆரம்பம்: 04.04 சனி 10am No. 40, Palaly Road, Jaffna.(ஆரியகுளம்)
ஆரம்பம்: 04.04 சனி 4pm. No.181, 1st Floor, பிரதான வீதி, நெல்லியடி.
சாவகச்சேரியில் விரைவில் எம் கிளை

ALLIANCE FRANÇAISE DE JAFFNA
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af
வடமாகாணத்தில் FRENCH EMBASSY யின்கீழ் இயங்கும் ஒரே சர்வதேச நிறுவனம்.
உலகம் முழுவதும் 1040+ கிளைகள்.
INTERNATIONAL DIPLOMAS.
ஆசிரியர்கள்: யாழ்.பல்கலைக்கழக பிரெஞ் விரிவுரையாளர்கள் (பிரான்ஸ் நாட்டவரும்)

வகுப்புகளுக்கு உடன் அழையுங்கள் (9947)
021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்

Raveens EMC - Karaveddy
ஆசிரியர்(கள்) உடன் தேவை
தரம் 6 தொடக்கம் 11 வரை தமிழ் மொழி மூலம் வரலாறு பாடம் கற்பிக்க ஆசிரியர்(கள்) உடன் தேவை.
05.04.2015க்கு முன்னர் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
தொடர்புகளுக்கு :- P.Easwaranathan
Director
Raveens EMC
Tel - 021 226 3321 (9950)

சதாபொன்ஸ் கல்வி நிலையம் அல்வாய்
O/L மீட்டல் வகுப்புக்கள்
ஆரம்பம் 03.04.2015 காலை 8 (வெள்ளி)
A/L 2017
கலை, வர்த்தகம்
புதிய பிரிவுகள் ஆரம்பம்
அனுமதி இன்று முதல் (C-[illegible])

O/L உடன் UK, Australia, NZ, Canada & Malaysia
4 வருடங்களில் பட்டம் முடித்து தொழில்வாய்ப்புடன் குடியுரிமை(PR)
இலங்கையில் உயர்தரம் முடித்து பல்கலைக்கழகம் செல்லும் காலத்துக்குள், விரும்பிய நாட்டில் - விரும்பிய துறையில் பட்டம் பெற்று - தொழில்வாய்ப்புடன் நிரந்தரமாக குடியேறும் அரிய வாய்ப்பு
பல்கலைக்கழக அனுமதி - தொழில்வாய்ப்பு - குடியுரிமை அனைத்து ஏற்பாடுகளையும் நாமே செய்து தரும்
100% உத்தரவாதமான சேவை!
Student Visa - Spouse Visa - Super Visa - Visit Visa
ஏற்கனவே விண்ணப்பித்து பயனடைந்தவர்கள் பற்றிய மேலதிக விபரங்களை அறிந்தகொள்ள
FREE Assessment www.sikaram.lk
எந்தவொரு நாட்டுக்குமான எந்த வகை விசா என்றாலும்
SIKARAM Education Abroad Work, Migration & Visa Solutions
Sikaram (Pvt) Ltd.
No.275-2/1, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம். (வைத்தியசாலை பின்புறம்) யாழ் பஸ் நிலையத்திலிருந்து 100 மீற்றர் (C-527)
Tel: 0777 32 4004 021 222 00 11

காற்றலையில் உங்களுக்கோர் முகவரி
வானலையில் உங்கள் குரல்களின் எதிரொலி
அறிவிப்பாளராய் ஆகிடத்துடிக்கும் உங்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்
இலங்கையின் முதற்தர வானொலி அறிவிப்பாளர்களின் வழிகாட்டுதலில்
வானொலி அறிவிப்பாளர் பயிற்சிப்பட்டறை
04 - 04 - 2015
சனிக்கிழமை காலை 9 மணி முதல்
I.I.S. City Campus இல்
மட்டுப்படுத்தப்பட்ட அனுமதி ஆகையால் உங்கள் பதிவுகளுக்கு முந்துங்கள்
செயலமர்வின் நிறைவில் சான்றிதழ் வழங்கப்படும்
கட்டணம் 1000/-
I.I.S. City Campus
இல. 200, சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு :-
0770 056 566 (சூர்யா)
0759 160 431 (என்.கஜிதரன்) (C-519)

A/L பொருளியல் S.ஜெயக்குமார் B.A (Hons) M.A (Ec. spl)
2016
மீட்டல் வினாவிடை வகுப்பு ஆரம்பமாகின்றது. (C-530)
DCM யாழ்நகர் சுன்னாகம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.04.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.